# ஒரு சிவப்பு பச்சையாகிறது

'லக்ஷ்மி'



பூங்கொடி பதிப்பகம்

# ஒரு சிவப்பு பச்சையாகிறது

## 1

**மா**லை வேளையில் மஞ்சள் வெய்யில் மங்கத் தொடங்கியதும் சிவசாமிக்கு அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது. மகனும் மருமகளும் வருவதற்கு முன் அவர் ஒரு நடை கடைத்தெருவுக்குப் போய்க் காய்கள் வாங்கிவர வேண்டும்.

தேவைப்பட்ட பணத்துடன் வாங்க வேண்டிய காய்களைப் பற்றிய விவரத்தை அவரது மருமகள் பாமா ஒரு காகிதத்தில் எழுதி சாப்பாட்டு மேஜைமேல் வைத்து அது பறந்து விழாதிருக்க அலாரம் கடிகாரத்தை அதன்மீது தூக்கி வைத்துவிட்டு பன்னிப்பன்னிப் பலமுறை சொல்லிவிட்டுக் கிளம்பியிருந்தாள்.

அவள் வேலைக்குப் போகும் மருமகள்.

காலையில் ஏதோ அவளால் முடிந்ததை விநியோகித்துவிட்டு, பகல் சாப்பாட்டை பிரிட்ஜில் மீதமிருப்பதை சூடாக்கிச் சாப்பிடச் சொல்லிவிட்டு கிளம்பியிருந்தாள். பகல் வேளைக்கு அவர் பழைய சோறுதான் அன்றாடம் தின்ன வேண்டியிருந்தது.

மகனும் மருமகளும் பகல் உணவிற்கு ஹோட்டல் களை நம்பிக்கொண்டு வாழ்ந்தனர்.

இரவுதான் அந்த வீட்டில் சம்பிரதாயமான சாப்பாடு.

அப்படி ஒன்றும் பஞ்சாட்சிர பரமான்னம் படைத்து விடமாட்டாள். ஆறின சோறு, ஒரு துவையல், ரசம், அப்பளம், இப்படி ஏதாவது அவள் வேலையிலிருந்து வந்த அலுப்பிலே முடிந்ததைப் பொங்கிப் போட்டாள்.

ரசத்தில் உப்பு இல்லை என்றோ - துவையல் காரம் என்றோ அவர் சொல்ல முடியாது.

நாக்கிற்கு ருசியாக உப்பும் உரப்புமாக சமைத்துப் போட்ட மனைவியின் சமையலில் குற்றம் கண்டுபிடித்து சிடுசிடுத்த மனிதருக்கு இப்போது சரியான தண்டனை.

''கொஞ்சம் உப்பு வேணும். ஸால்ட்ஸெல்லரை இப்படி வைக்கிறியா அம்மா?'' ஒருநாள் கேட்டுவிட்டு அவர் வாங்கிக் கட்டிக் கொண்டது ஜென்மத்துக்குப் போதும்!

''ரசம் நல்லாத்தானே இருக்கு. வேலையிலிருந்து வந்த களைப்பை மறந்து சமைச்சுப்போட்டா குத்தம் சொல்லமாட்டீங்களா!'' கிரீச்சென்று கத்தினாள் பாமா. அடுப்பு மேடை மீது பாத்திரங்களை அதிக ஓசையுடன் வைத்தாள்.

''ஏம்பா அவளை அனாவசியமா இர்ரிட்டேட் பண்ணுகிறீங்க. இதாவது கிடைக்கிறதேன்னு திருப்தி யோட சாப்பிட்டுட்டு ஒரு பக்கம் விழுந்து கிடக்க தெரிஞ்சுக்கணும்'' - வார்த்தைகளால் சாடினான் மகன்.

அதற்குப் பிறகு அவர் ஏன் பேசப் போகிறார்?



'மீனாட்சி எனக்கு நல்லா வேணும். உன்னை நான் பல வகையிலும் ஆட்டிப்படைச்ச பாவத்துக்கு அனுபவிக் கிறேன். நல்லாவே அனுபவிக்கிறேன்.' பலமுறை தமக் குள்ளே முனகிக் கொண்டு... புகைப்படமாக சட்டத்திற் குள் அடங்கி சாப்பாட்டறைச் சுவரில் தொங்கிய தமது மனைவியைப் பார்த்து பெருமூச்சு விடுவதைத் தவிர வேறு வழி?

நேரத்திற்கு காய்களை வாங்கிக் கொண்டு வந்து வீட்டில் சேர்க்காவிடில் பாமா வந்ததும் வராததுமாகக் கூப்பாடு போடுவாள்.

மகன் கிரிதரன் இப்படி மாறிப் போவான் என்று யார் எதிர்பார்த்தது?

''ஏன் அப்பா நாள் முழுவதும் வீட்டிலே சும்மாதானே உட்கார்ந்திருக்கீங்க? இந்த ஒரு சின்ன வேலையை நேரத்தோட செய்து முடிக்கக் கூடாதா? தூங்கித் தூங்கிப் பொழுதைக் கழிச்சு... வீட்டை தரித்திரம் தான் பிடிக்கும்'' - மகன் உறுமும்போது அவர் உள்ளம் நொறுங்கிப் போனார்.

'கிரி! நீயாடா பேசறே... உன் வாழ்க்கை வளமாக இருக்க நான் பட்டிருக்கும் பாடு எத்தனை என்பது தெரிஞ்ச நீயா இப்படி பேசறே? நாள் முழுக்க நான் எங்கேடா தூங்கறேன்? உன் மனைவிதான் எனக்கு நிறைய வேலை கொடுத்துட்டு கிளம்பறாளே.

'வேலைக்காரி தேய்த்து வைத்த சாமான்களை துடைத்து அலமாரியில் அடுக்கி வைக்கிறேன். அவள் காயவைத்து விட்டு போகும் துணிகளை எடுத்து நடமாடும் இஸ்திரி வண்டிக்காரனிடம் கொடுத்து, பெட்டி போட்டு அலமாரியில் அடுக்கி வைக்கிறேன்.

'தபால்காரர், வராந்தாமீது வீசிப் போட்டுவிட்டுப் போகும் கடிதங்களை எடுத்து பத்திரமாக உங்கள் பார் வைக்கு மேஜைமேல் வைக்கிறேன். எலக்ட்ரிக் பில், டெலிபோன் பில், வீட்டு வரி, தண்ணீர் வரி, இத்தனையைப் பற்றியும் உனக்கு ஞாபகப்படுத்தி, நீ கொடுக்கிற செக்கை எடுத்துக்கொண்டு வங்கிகளுக்கு நடந்தே போய் கட்டி விட்டு வரேன்.

'தோட்டத்தைச் சுற்றி... புல் பூண்டு மண்டி விடாதிருக்க அவ்வப்போது கவனமா பார்த்து சீராக்கி விட்டு... வாங்கி வந்த எருவை செடிகளுக்கும் போட்டு மறக்காம... ஹோஸ் பைப்பை வச்சுகிட்டு ஒரு மணி நேரம் தண்ணீர் பாச்சறேன்.

'வீட்டிலே... குழாய் ரிப்பேர்... ஸ்விச் ரிப்பேர்... என்று ஏதாவது ஏற்பட்டுவிட்டால் ஓடிச் சென்று பழுது பார்க்கும் ஆளைப் பிடித்துக் கொண்டு வந்து சீராக்கிவிட்டு என் கையிலிருக்கும் சில்லறையையே அவைகளுக்கு செலவழிக்கிறேன்.

'குழாய் ரிப்பேருக்கு பனிரெண்டு ரூபாய் பிடிச்சது, ஒரு பியூசான விளக்கை மாத்த ஆறு ரூபாய் பிடிச்சுதுன்னு உன்கிட்டே காசுகேட்டு கையேந்தி நிற்காம நானே கவனிச்சுக்கிறேன்.

'பகல் வேளை பால் டிப்போவுக்கு ஓடி... பால் பொட்டலங்களைக் கொண்டுவந்து... கிழித்து பாத்திரத் தில் ஊற்றி... காஸ் அடுப்பில் ஏற்றி காய்ச்சி தயாரா உங்களுக்கு காப்பி சாப்பிட ஒரு பக்கம் அடுப்பு மேடை மேல் வைக்கிறேன்.

'பதினைந்து நாளுக்கு ஒரு தடவை வீட்டை சுத்தப்படுத்தி வைக்கிறேன்.



'என்னடா... அப்படி முறைக்கிறே?

'காஸ் தீர்ந்து போனா காஸ் கடைக்கு நேரே ஓடிப்போய் சொல்லிவிட்டு வர்றது நான்தானே? மறக்காம ரேஷனில் கிடைக்கிற மண்ணெண்ணை இத்தியாதிகளை வாங்கி வைக்கிறேன்.

'இப்போது சொல்லு... இத்தனை வேலைகள் இடையே நான் எப்படி சோம்பேறித்தனமாக தூங்க முடியும்?

இத்தனையையும் நான் ஏன் செய்யறேன்? என் பிள்ளை மருமகள் இரண்டு பேரும் வேலைக்குப் போறவங்க... அவங்களுக்கு பாரமாக இருக்கக்கூடாது... உதவி செய்துட்டு இருக்கணும் என்கிற நல்லெண்ணம்...'

படபடவென்று அவரால் வெடித்துக் கொட்ட முடியும்.

ஆனால் பாவி மீனாட்சி அவர் வாயைக் கட்டிப் போட்டுவிட்டுப் போயிருந்தாள்.

அவருக்கும் மகன்மேல் ஆசைதான். ஆனால் மீனாட்சிக்கு கிரிதரன் மேல் உயிர்.

இனி தேறாது என்று டாக்டர் கையை விரித்ததும் மீனாட்சி விருப்பப்படி வீட்டிலேயே உயிரை விடட்டும் என்று அவளை ஆஸ்பத்திரியிலிருந்து காரில் போட்டு எடுத்துக் கொண்டு வந்திருந்தபோதுகூட வீட்டிலே ஒரு கலவரம்.

'புதுசா கட்டின வீடு... முதன் முதலில் நல்ல காரியங்கள் நடக்குமுன்...'

மருமகள் பாமா... கணவனிடம் பேசியதைக் கேட்டுவிட்டார். கட்டுக்கொள்ளாத கோபத்துடன் பின்பக்கம் சென்றார்.

''அம்மா பாமா! இந்த வீடு மீனாட்சியின் பரம்பரை சொத்து. அவளுக்குப் பின் மகனுக்குன்னு எழுதி வச்சிருக்கா. அதுவரை அவள் தன் அறையில் கட்டிலின் மேல் படுத்துக் கிடக்க உரிமை உண்டு. ஏன் தன்னுடைய சொந்த வீட்டில் உயிர்விட அவள் ஆசைப்படுகிறது தப்பா...?'' கடுமையாக அதட்டினார்.

மனைவி உயிருடன் இருந்தபோது அவருக்கு துணிவு அசாத்தியம் இருந்தது. அந்த வீட்டைச் சீர்திருத்தி பங்களா வாகக் கட்ட தேவைப்பட்ட பணத்தின் பெரும் பகுதி தன்னுடையது என்றதொரு பிடிப்பு.

மனைவி இறந்து போனதும்... அவரது நிலைமையே வேறாகி விட்டதே! வயது அதிகரித்து தள்ளாமை உடலைப் பிடித்துக் கொண்ட பின்னர் அவரது நிலை இன்னமும் பயங்கரமாகிவிட்டிருந்தது.

வராந்தாவில் கிடந்த சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்தார். அதுவரை படித்துக் கொண்டிருந்த காலை பத்திரிகையை மடித்துக் கொண்டு நாற்காலியை தூக்கிய படி திரும்பியவர் கண்களில் எதிர்வீட்டுக் கிழவர்... எழுபது வயது ஆகியும் துடிப்புடன் காணப்படும் கோதண்டராமன் பட்டார்.

ஒடித்தால் இரண்டாகிவிடும் போன்ற தோற்றம். ஆனால் மனிதருக்குத்தான் உடலில் எத்தனை தெம்பு... மார்கழி மாதக் குளிரில்கூட காலையில் எழுந்ததும் தலையில் மப்ளரைக் கட்டிக்கொண்டு கடற்கரையில் வாக்கிங் செய்கிறார் கிழவர்.

மனதிலும் எத்தனை தெம்பு... பல் விழுந்த சிங்க மானாலும் பார்த்தவர்கள் பயப்படத்தானே செய்வார்கள்?



மாடியிலிருக்கும் தமது அறையில் இருந்தபடி... அவர் மருமகளையும் மகனையும் ஏவும் குரல் தெரு முழுவதும் கேட்குமே...

அவரும் மனைவியை இழந்தவர்தான். ஆனால் வீட்டில் தமது மரியாதையை, மாமனார் என்ற அந்தஸ்தை சிறிதும் இழக்கவில்லையே! காப்பியா, இது பாயாசமா? கூக்குரல் போட்டால் மருமகள் பயந்து நடுங்கிப் போய் விடுவாள்.

''இதோ கொஞ்சம் டிகாக்ஷன் எடுத்து வரேன் அப்பா'' ஸாரி... குரல் கொடுத்தபடி... எப்படி ஓடி வருவாள்.

அவளும் வேலைக்குப் போகும் மருமகள்தான்.

''பத்து மணிக்குத்தானே உன் ஆபீஸ்? எட்டு மணிக்கே எலக்ட்ரிக் பில் கட்டும் ஆபீஸ் திறந்துடு வாங்களே? அதனாலே போற வழியிலே கட்டிட்டு போ'' - பிள்ளைக்கு உத்தரவிட்டால் அவன் சலாமிட்டுக் கொண்டு சரி அப்பா - என்று பதிலளிப்பதைப் பார்த்து திகைத்துப் போவார் சிவசாமி.

கோதண்டராமனுக்குத்தான் பீரங்கிக் குரல். அண்டை வீடுகளில் என்ன நடக்கிறது என்று ஜன்னல் அருகே வந்து எட்டிப் பார்க்கும் துர்க்குணம். தோட்டத்திலிருக்கும் எலுமிச்சை, கிச்சலி, கறிவேப்பிலை, பப்பாளி எல்லா வற்றையும் பறித்து கூடையில் போட்டுக் கொண்டு கடைத்தெருவுக்கு ரிக்ஷாவில் எடுத்துச் சென்று... விற்று காசாக்கி அந்தப் பணத்தில் தேவையான காய்கள் வாங்கி வந்து விடுவார்.

வீட்டின் கஜானா சாவி அவர் கையில். உப்பு, பருப்பு முதல் எல்லா சாமானுக்கும் அவர்தான் காசு கொடுப்பார்.

''வாசலில் பைன் ஆப்பிள் விற்கிறாங்க அப்பா... வாங்கட்டுமா...'' ஓய்வு நாட்களில் மருமகள் மாடிக்கு வந்து கேட்கும் குரல், மெலிதாக சிவசாமி காதில் விழுந்து விடும்.

''யானை விலை குதிரை விலை சொல்வான்கள். அதெல்லாம் எதுக்கு வேண்டாம்'' - கிழவர் மறுக்கும் குரலும் துல்லியமாய் கேட்டுவிடும்.

''எண்ணெய் விற்கிற விலையில்... மெதுவடை எதுக்கு பண்றே?'' தொண்டை கிழிய மனிதன் அதட்டுவது பத்து வீட்டுக்குக் கேட்கும். ''நீங்க அன்னிக்கு ஆசையா கேட்டீங்க. நேரமில்லை உடனே செய்ய முடியலை...''

கோர்ட் மார்ஷலில் நிற்கும் கைதியைப் போல படபடவென்று இரையும் மாமனாருக்கு எத்தனை பதவிசாக அவள் பதிலளிக்கிறாள்?

அவளும் படித்த பெண்தான். வேலைக்குப் போய் சம்பாதிக்கும் மருமகள்தான். பாமாவும் படித்த பெண். வேலைக்குப் போய் சம்பாதிக்கிறவள். ஆனால் இருவருக்குள் எத்தனை வித்தியாசம்!

வித்தியாசம் அவர்களிடம் ஏற்படவில்லை. கோதண்டராமனுக்கு அப்படி ஒரு யோகம். தள்ளாத வயதிலும், வீட்டின் தனிக்காட்டு ராஜாவாக ஆட்சி செலுத்தும் ஒரு அதிர்ஷ்டம்.

சிவசாமிக்கு அப்படி ஒரு விதி. மகனும் மருமகளும் காலால் உதைக்காது வார்த்தைகளால் சாடி.... தினமும் அவரை அவமானப்படுத்தி நாளடைவில் அவரை ஒரு புழுவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

எதிர்வீட்டு கோதண்டராமன் நச்நச்சென்று தும்மினார். மனிதன் வேண்டுமென்றே துரும்பை மூக்கில் விட்டுக்கொண்டு தும்மித் தொலைக்கிறாரோ என்னவோ?



ஏதாவது ஆரம்பிக்க நினைக்கும்போது எதிர் வீட்டுக்காரன் தும்மித் தொலைத்தால்... சிவசாமிக்கு பெரிய அபசகுனம்போல் மனதை உறுத்தும். அந்த மனோபாவத்துடன் அவர் வெளியே கிளம்பினால் கட்டாயம் ஏதாவது ஒரு தவறு நேர்ந்துவிடும். வீட்டுக்குத் திரும்பியதும் ஒரு பெரிய மண்டகப்படி... மகன் அவரை கேட்காத கேள்வியெல்லாம் கேட்டு சீறி குதறிவிடுவான்.

உள்ளே கொண்டு வந்த நாற்காலியை பின்பக்கத்திலிருந்த தமது அறைக்குள் வைத்துவிட்டு பிரிட்ஜைத் திறந்து பாட்டிலை எடுத்து மடக்கு தண்ணீரைக் குடித்தார். கையில் சோப்பு தடவிக் கொண்டிருந்தது போல பாட்டில் திடீரென்று வழுக்கிக்கொண்டு விழ...

'பாவி மனுஷன் தும்மித் தொலைத்தான் வெளியே புறப்படுமுன். இப்போது எத்தனை பெரிய வேலை?'

சாதாரண பாட்டில்தான். பெரிய கிரிஸ்டல் கிண்ணத்தை உடைத்து விட்டதைப்போல பாமா வந்ததும் வராததுமாக அலறுவாள்.

'மொசாய்க் தரை பார்க்க அழகானதுதான் - ஆனால் சனியன் ஏதாவது கண்ணாடி விழுந்து உடைந்து போனால்... தூள்களைத் தேடி எடுப்பதற்குள் பிராணன் போய் விடுகிறதே...?'

முணுமுணுத்தபடி... எல்லா துண்டுகளையும் தேடி எடுத்து ஒரு காகிதத்தில் போட்டுச் சுருட்டி... முதலில் அதைக் கொண்டு கண்ணுக்கு தெரியாது குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு... சமையல் அலமாரியில் அவர் சுத்தப்படுத்தி வைத்திருந்த பழரச பாட்டில்களில் ஒன்றை எடுத்து முதலில் ஆறிய வெந்நீரைக் கொட்டி நிரப்பி... பிரிட்ஜுக்குள் வைத்துவிட்டு... தண்ணீர்

கொட்டிக் கிடந்த இடத்தை சுத்தப்படுத்தி கைகளைக் கழுவிக் கொண்டு... கடைத்தெருவுக்குப் புறப்படுவதற்குள்... ஒரு யுகம்போல நேரம் நழுவ... குனிந்து நிமிர்ந்து எழுந்ததன் பயனாக முதுகு வலிக்க... எதிர்வீட்டு கோதண்டராமனை கண்களாலேயே எரிக்கமாட்டோமா என்ற ஆத்திரத்தில் வீட்டின் நடைவிளக்கைப் போட்டு விட்டுக் கிளம்பினார்.

## 2

தெரு முனையில் நெடுஞ்சாலையை ஒட்டிய வீடு அவர்களுடையது. அந்த வீடு ஓட்டு கூரையுடையதாக இருந்த காலத்தில்... பக்கத்திலிருந்த பெரிய பூமியில் கூரைவீட்டில் வசித்த பரமசிவம் பத்து டெல்லி எருமைகளை வைத்துக்கொண்டு பால் வியாபாரம் செய்து கொண்டிருந்தான். சாணி நாற்றமும், கொசு உபத்திரமுமாக இருந்த இடம்தான் அது. சுற்று வட்டாரத்து மனிதர்களுக்கு பாலை வினியோகித்துக் கொண்டு பரமசிவம் தன் வயிற்றுக்கு அதிகப்படி சாராயத்தை வினியோகித்து வாழ்ந்ததின் பலன் - ஒருநாள் அவன் ரத்தம் கக்கி செத்துப் போனான். வீட்டையும், சுற்றியிருந்த பூமியையும், மாடுகளையும் விற்று காசாக்கிக் கொண்டு தன் தாய் வீட்டுக்குக் கிளம்பிவிட்டாள் அவன் மனைவி. அதை வாங்கிய காண்டிராக்டர் நிலத்தைத் துண்டுபோட்டு பல பிளாட்டுகளாக்கி அவைகளை விற்றுத் தானே குட்டி பங்களாக்களாக கட்டிக் கொடுத்து கொள்ளை லாபம் தேடிக் கொண்டுவிட்டான்.

மாட்டு சாணத்தில் மிதந்து கொண்டிருந்த இடம் சுந்தரா காலனியாக மாறியது.



அந்தக் குட்டிப் பங்களாக்களில் குடியேறிய அத்தனை பேரும் மத்திய வகுப்பினர்தான். அமெரிக்காவிலிருந்த பிள்ளையும், துபாயிலிருந்த மகனும் அனுப்பி வைத்த பணத்தைக் கொட்டி வாங்கி, பங்களாவாசிகளாகி விட்டனர். தெருவீடாக இருந்தபோது நிலவிய ஒற்றுமை உணர்வு அங்கிருந்து மறைந்துவிட்டிருந்தது.

டெலிபோன் பேசாவிடில்... பக்கத்து வீட்டவர்களின் உதவியை நாட முடியாது.

ஸாரி என்று முகத்திலறைந்தாற்போல வீட்டு சமையல்காரர் கதவை சாத்திவிடுவார்.

சாலை முகப்பிலே இருந்த மளிகைக் கடையிலிருக்கும் தொலை பேசியைத்தான் உபயோகிக்க வேண்டும். அக்கம் பக்கத்தைப் பற்றியே கவலைப்படாததொரு... சுயநலவாதிகள் அந்தக் காலனிக்காரர்கள்.

அங்கே சிவசாமி ஒரு தனிப்பட்ட மனிதராகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தார்.

''ஏன் குழந்தையை அடிக்கிறே! உன் கோபத்தை அது மேல ஏன் காட்டணும்?'' அடுத்த பங்களாவின் வேலைக்காரியை அன்போடு அதட்டுவார். அவளது இடுப்பிலே விசும்பிக் கொண்டு கன்னத்தில் கண்ணீரும் மூக்கில் சளியுமாக பரட்டைத் தலையுடன் உட்கார்ந்திருக்கும் அந்தச் சின்னஞ்சிறு அழுக்கு சட்டைக் குழந்தையைக் கண்டு அவர் மனம் உருகிப் போவார்.

டால்ஸ்டாயின் படைப்புகள் பலவற்றைப் படித்திருந்ததின் பாதிப்பு. ஏழ்மையிலும் - குழந்தைகளிடமும் அவர் இறைவனைக் கண்டு மகிழ்ந்தார்... ''உங்களுக்கு என்ன! வாயை மூடிக்கொண்டு வராந்தாவிலே பேப்பர் படிச்சுகிட்டு இருக்கிறதை விட்டுவிட்டு...'' மகன் சீறுவான்.

''வயசாயிடுச்சில்லையா? இப்படி ஏதாவது தொண தொணக்காவிட்டால் பொழுது போகுமா?'' - மருமகள் முணுமுணுப்பது அவருக்குக் கேட்கும்.

என்ன செய்வது?... மீனாட்சியின் கடைசி நேரத்து வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டார் அவர்.

''குழந்தை கிரிதரன் உலகம் தெரியாதவன். பாமா விவேகமே இல்லாதவ - படிச்சுவிட்ட கர்வம்... தூக்கி எறிஞ்சு பேசுவாள்.

''இதையெல்லாம் நீங்க பாராட்டக்கூடாது. எனக்குட் பிறகு நீங்கதான் இந்த குடும்பத்துக்கு ஆதரவா இருக்கணும். வெட்டிண்டு கிறம்பறது சுலபம். ஒட்டிண்டு இருக்கிறது கஷ்டம்.''

கண்களில் நீர் தளும்ப... மூச்சு திணறலுடன் கணவனிடம் வேண்டிக் கொண்டாள்.

''இதெல்லாம்பத்தி இப்போ எதுக்கு பேசறே...''

''பேச வேண்டிய நேரம் வந்துட்டுது. கிரி மேலே எனக்கு எத்தனை ஆசைன்னு உங்களுக்குத் தெரியும். நீங்க அவனைப் பார்த்துப்பீங்க. அவனுக்கு ஆதரவா இருந்து ஆறுதல் சொல்லி வழிகாட்டுவீங்கன்னு நிம்மதியோட நான் போக விரும்புகிறேன்.''

''மீனாட்சி! உன் மகனையும் மருமகளையும் விட்டுட்டு நான் எங்கே போயிடுவேன்...?''

''தெரியும் எனக்கு... இருந்தாலும்...'' அவள் கண்களிலிருந்து துளிர்த்த அந்த இறுதிக் கண்ணீருக்குப் பின்... கண்களை மூடியவள் திறக்கவேயில்லை...

வயது காலத்தில் தள்ளாமையுடன் அவர் அவர்களை விட்டு எங்கே போவார்? அவர்களைத் தவிர அவருக்கு அடைக்கலம் கொடுப்பவர்கள் யார்?



வராந்தா விளக்கையும் போட்டுவிட்டு கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு வெளித் தோட்டத்தைத் தாண்டி தெருவுக்குள் வந்தார். இன்னமும் மாலை வெளிச்சம் முழுவதும் மங்கிப் போய்விடவில்லை. இருளும் ஒளியும் கலந்த அந்தி வேளையில் சன்னமான பிரகாசத்தில்... கேட்டை மூடியபோது... அதன் முகப்பில் சுற்று சுவரில் பதித்திருந்த பித்தளைத் தகட்டில் பொதித் திருந்த 'பூரணி இல்லம்' என்ற பெயர்... நன்றாகவே தெரிந்தது.

வீட்டுக்குப் பெயர் சூட்டியவள் அவர் மனைவி மீனாட்சிதான். தன் பாட்டன் வழிவந்த அந்த சொத்தை அவள் தன் மகன் பெயருக்கு எழுதி வைத்து விட்டிருந் தாள்.

சுந்தரா காலனியில் அந்த ஒரு வீடு மட்டும் திருஷ்டிப்பரிகாரமாக ஓட்டுக்கூரையுடன்... தெருவின் ஆரம்பத்தையே அசிங்கப்படுத்துகிறது என்று... மகனும், மருமகளும் ஓயாது வேப்பிலை அடிக்க... வீட்டை இடித்து வசதியானதொரு மூன்று அறை கொண்ட நவீன குட்டி பங்களாவாகக் கட்ட அவர் உதவ வேண்டியிருந்தது.

தொலைபேசி நிறுவனத்தில் அவர் முப்பத்தைந்து வருஷத்திற்குமேல் உயர் பகுதி கணக்கராக உழைத்ததின் பயனாக கிடைத்த பணம் ஐம்பதாயிரத்துடன் மீனாட்சியின் நகைகளை விற்று எடுத்த பணம், தமது வங்கி சேமிப்பி லிருந்த பணம் எல்லாவற்றையும் சேர்த்து முக்கால் லட்சமாக்கி மகனிடம் கொடுத்தார்.

அவன் தன் அலுவலகத்திலே கடன் எடுத்து மனைவியின் சேமிப்பையும் போட்டு சுந்தரம் காலனிக்குள் நுழையுமுன் மிக அலட்சியமாகத் தென்படும் வகையில்

அந்த வீட்டைக் கட்டிவிட்டிருந்தான். பத்து வருஷத்திற்கு முன் அப்படி ஒரு பெரிய வீட்டை மூன்று படுக்கை அறைகள் கொண்ட நவீனமானதொரு கட்டடத்தை அவனால் கட்டிமுடிக்க முடிந்தது.

இப்போது அந்தத் தொகையில் அவ்வளவு பெரிய வீட்டைக் கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாது.

மகனுக்கு சொந்தமாகிவிட்ட அந்த பங்களாவில் ஒரு வேண்டாத விருந்தாளியாக - தமது சாப்பாட்டு செலவுக்கு மாதம் முந்நூறு ரூபாய் தமது பென்ஷனிலிருந்து கொடுத்து கொண்டு மருமகள் ஏவிய எடுபிடி வேலைகளை செய்து கொண்டு காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தார்.

மீதியிருந்த பென்ஷன் தொகையில் அவருக்கு பல செலவுகள். சிவசாமிக்கு வெற்றிலை போடும் பழக்கம் உண்டு.

நிறைய புத்தகங்கள் படிக்க ஆசை அதிகம். அருகிலிருந்த நூல் நிலையத்திலிருந்து வாரத்திற்கு பத்து ரூபாய்க்காவது புத்தகம் இரவலாக எடுத்து வந்தார்.

கிரிதரன் வேலை பார்த்த நிறுவனம் அவனுக்கும் அவன் மனைவிக்கும்தான் வைத்திய சலுகைகள் தந்தது. பெற்றவனுக்கு உடம்புக்கு முடியாவிடில் மருந்து செலவை அந்தக் கம்பெனி தலையில் கட்ட முடியாது. எனவே சிவசாமிக்கு பல்வலியோ, தலைவலியோ வந்தால் அவர்தான் சொந்தச் செலவில் கவனித்துக்கொள்ள வேண்டும்.

'ஒரு பாட்டில் டெட்டால் வாங்கணும் - தோட்டத்தில் வேலை செய்யும்போது காயம் ஏற்பட்டால் - கழுவித்



துடைக்க தேவைப்படும்' - அவர் முணுமுணுத்தால் மகன் காதில் போட்டுக் கொள்ளமாட்டான்.

''கையில் காசிருக்கே! வேண்டியதை வாங்கிக் கொள்கிறதுதானே?''-

பேசாது பேசும் பாமாவின் விழிகள்!

காலை வரும் பத்திரிகையை தன் அலுவலகத்தில் இடை நேரத்தில் படிக்க கையோடு கொண்டு போய்விடுவாள். தமிழ் வாரப் பத்திரிக்கைகளை தான் படித்தவுடன் ஒரு பழைய புத்தகக் கடையில் பாதி விலைக்குப் போட்டு காசாக்கிக் கொண்டு விடுவாள் பாமா.

காலை பத்திரிகையை அவரே காசு கொடுத்து தனக்கென்று வாங்கிக்கொண்டார். தனது சிறு டிரான்சிஸ்டர் ரேடியோவுக்கு தானே பாட்டரி வாங்கிப் போட்டுக் கொண்டார். கடைக்குப் போகவோ - நகரத்திற்குள் ஏதாவது வீட்டுக் காரியமாகப் போகவோ நேரிட்டால் பஸ்ஸிற்கும், ஆட்டோவுக்கும் தாமே செலவழித்தார். மகனிடம் ஒரு வார்த்தை சொன்னதில்லை - மருமகளிடம் செலவைப்பற்றி பேசியதில்லை...

மாத இறுதிக்குள் கையில் காசில்லாது அவர் திண்டாடிய சமயங்கள் எத்தனையோ...!

ஆனாலும் மற்றவர்களின் கஷ்டத்திற்கு மனம் கரையாது அவர் கல்லாக இருந்ததில்லை. பக்கத்து வீட்டு வேலைக்காரி கண்கலங்கி நின்றால் பரிதாபத்தோடு விசாரிப்பார்.

''என் பேரன் பள்ளிக்கூடம் போகலை. சிலேட்டை உடைச்சுட்டான். சட்டையைக் கிழிச்சுக்கிட்டான். மரத்தடி தையல்காரர் தைக்க ஒரு ரூபா கூலி கேட்கிறார். புது சிலேட்டு வாங்கித்தரணும். எஜமானி அம்மாகிட்ட நான் நிறைய முன்பணம் வாங்கியிருக்கேன். மேலே கேட்க பயமா இருக்கு...''

அதற்கு மேல் எதுவும் விசாரிக்காது தமது பர்சிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டொன்றை எடுத்து அவளிடம் கொடுப்பார்.

''திருப்பித் தரவேண்டாம். உன் பேரனுக்கு புது சிலேட்டு வாங்கிக் கொடு... மீதியிருந்தா சட்டைக்கு தையல் கூலி கொடு... போ இதுக்கெல்லாம் ஏன் அழுகிறே...''

''ஐயா!'' தெரு முகப்பில் கூட்டமாக ரிக்ஷாக்களை நிறுத்திக் கொண்டிருப்பவர்களில் ஒருவன் வந்து தலையை சொறிந்து கொண்டு நிற்பான். ''இன்னி முழுக்க சவாரியில்லே... பசிக்குது...''

பர்சைத் துழாவுவார் - தனக்கு மிஞ்சிதான் தானமும் தர்மமும் என்பதெல்லாம் அவர் வரைக்கும் செல்லாத பழமொழி...

''மாதக்கடைசி... பத்து ரூபாய்தான் கையிருப்பு - உம் இந்தா இரண்டு ரூபாய் வச்சுக்கோ...'' கொடுத்துவிட்டு நிம்மதியாக நடப்பார்.

அன்னதானம் செய்ய அவருக்கு அத்தனை வசதி கிடையாது... ஒரு ஏழை ரிக்ஷா தொழிலாளி ஒரு பன்னும், டீயும் வாங்கிக் குடிக்க ஏதோ தர அவரால் முடியும். பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் கட்டிக் கொடுக்க



அவரால் இயலாது... ஒரு ஏழைக் குழந்தைக்கு சிலேட்டு வாங்கித் தர முடியுமே...

அதோடு மட்டுமல்ல... அடுத்த தெருவில் வசித்த சமையல்கார அம்மாவுக்கு ஆலோசனைகள் சொல்லுவார். மகன் குவெய்ட்டிலிருந்து அனுப்பும் பணத்தை வங்கியில் சேமித்து வைத்துக் கொள்வது பற்றி யோசனை சொல்லித் தருவார்.

சுந்தரா காலனியில்தான் அவருக்கு நண்பர்கள் யாரும் கிடையாது. தெருவுக்கு வந்துவிட்டால் ஏகப்பட்ட நண்பர்கள், கடற்கரைக்கு உலாவப் புறப்பட்டுவிட்டால், வீட்டுக்கு திரும்பும் நினைவின்றி அந்த நாள் ஞாபகங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டு குலுங்க குலுங்க சிரித்து, ஒரு நல்ல சினிமாவைப் பார்த்த திருப்தியுடன் வீடு திரும்புவார்.

ஆனால் வீட்டில்தான் அவரது உணர்வுகள் அழுத்தப் பட்டு, வதைபட்டன. மகனுக்கு தம்மீது பிடிப் பில்லையே, மருமகளுக்கு மரியாதை இல்லையே என்று குமைந்து போனார். சில சமயம் குமுறினார்.

பாமாவைப் பெண் பார்க்கப் போனபோது அவர்தான் மனைவியிடம் அழுத்தமாகச் சொன்னார். ''பெண் கறுப்புன்னு ஒதுக்காதே - ஒரு பெண்ணைப் பார்த்துட்டு புடிக்கலைன்னு மறுத்தா அந்தப் பெண் மனம் ரொம்ப வேதனைப்படும். நல்லா படிச்சிருக்கா... வேலை செய்கிறா... நாம் என்ன பெரிய குபேர பரம்பரையா? மத்தியதர வகுப்பினர் - வரதட்சணைன்னு வாயைத் திறக்காதே... சீர் என்று எதுவும் பேசாதே...'' பாமாவுக்கு பரிந்து கொண்டு பேசினார். இப்போது கிடைத்த வெகுமதி, அவமானம்... அவரால் தாங்கிக் கொள்ள முடியாத மனக்குமுறல்...

நெருங்கின உறவினர்கள் யாரும் இல்லை. போக்கிடம் ஏதும் இல்லை என்று நன்றாகத் தெரிந்து கொண்டபின் பாமா தன் சுய உருவத்தைக் காட்டத் தொடங்கிவிட்டாள்.

அவரை அவள் ஒரு வேலைக்காரராகத்தான் மதித் தாள். இந்த வேதனையை எத்தனை நாள் பொறுப்பது?

## 3

''ஸார்!...'' நெடுஞ்சாலைக்குள் புகுந்தவுடன் பின்னாலிருந்து ஒலித்த மெல்லிய குரலைக் கேட்டு திடுக் கிட்டுத் திரும்பினார். சுந்தரா காலனிக்கு பின்புறமிருந்த அந்த குறுகிய சந்தில் குடியிருந்த லோகநாதன் மகள் மஞ்சுளாதான் அவர் பின்னால் கையில் பிளாஸ்டிக் கூடையுடன் கடைத்தெருவுக்குக் கிளம்பியிருந்தாள்.

''நீங்க இப்போ வருவீங்கன்னு தெரியும். அதனாலே அந்த மருந்துக் கடைக்கிட்டே உங்களுக்காகக் கொஞ்ச நேரமா காத்துகிட்டு இருந்தேன்...''

இருபது வயதிற்குள்ளிருக்கும் இளம்பெண் மஞ்சுளா மாலை வேலையின் மங்கிய ஒளியில் தங்கப் பொம்மை போல மிகவும் அழகாகத் தெரிந்தாள்.

ஒப்பனை ஏதுமின்றி... பழைய நூல் சேலையும் ரவிக்கையுமான அலங்காரத்தில் கைகளில் கண்ணாடி வளையலும் - கழுத்திலே கருக மணிமாலையும் அணிந்து கொண்டு... சினிமா கதாநாயகி போல... மஞ்சுளா பளிச்சென்று கண்களுக்குத் தென்பட்டாள்.

பிளஸ் டூ வரை படித்துவிட்டு, தட்டெழுத்து குறுக் கெழுத்து பயிற்சியுடன் கல்வியை மூட்டைகட்டி



வைத்துவிட்டு வீட்டில் தாயாருக்கு உதவி செய்து கொண்டிருந்தாள். அத்துடன் வேலை தேடிக்கொண்டிருந் தாள். அது அத்தனை சுலபத்தில் கிடைத்து விடுகிற சங்கதியல்லவே!

குடும்ப நலனைப்பற்றி சிந்திக்காத லோகநாதனுக்கு ஐந்து குழந்தைகள். மூன்று பெண் - இரண்டு பிள்ளைகள்.

முதல் இரண்டு பெண்களை எப்படியோ கல்யாணம் செய்து கொடுத்துவிட்டிருந்தார்.

மூன்றாவது மஞ்சுளா அவர் கழுத்திலே பெரும் பாறாங்கல்லாகக் குடும்பத்தின் சுமையாக இருந்தாள்.

அப்படித்தானே பெண்களைப் பெற்றவர்கள் எண்ணுகிறார்கள்?

''உங்ககிட்ட மனம் விட்டுப் பேசணும். உங்க ஆலோசனையைக் கேட்கணும். எப்போ சௌகர்யப்படும்? எங்கே சந்தித்து பேசலாம்னு சொன்னா...'' அடிக்குரலில் கேட்ட பெண்ணின் முகத்தைப் பார்த்தார். கண்கள் கலங்கி... அவளது உதடுகள் துடித்தன.

சிவசாமிக்கு பெண் குழந்தைகளைக் கண்டால் கொஞ்சம் கூடுதலான பிரியம். கிரிதரனுக்குப்பின் அவருக்கு ஒரு பெண் பிறந்திருந்தால் அவளைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டிருந்தால் நாள் கிழமைகள் போது கட்டாயம் அப்பாவைத் தேடிக் கொண்டு ஆசையுடன் வருவாள். உடம்புக்கு முடியாது அவர் படுத்துவிட்டால், பாமாவைப் போல எரிந்து விழாது அன்போடு பணிவிடை செய்வாள்.

பெண் குழந்தைகளுக்கு பெற்றவர்களிடம் ரொம்பவே ஒட்டுதல். இப்படி கிரிதரனைப்போல ஒட்டாது, பட்டும் படாமல், தெரிந்தும், தெரியாமலுமாக நடந்து கொள்ளவே மாட்டாள்.

மஞ்சுளாவை அவருக்குப் பள்ளிக்கூட நாள் களிலேயே தெரியும். அவளது தந்தை லோகநாதனும் தொலைபேசி நிலையத்திலேதான் வேலை பார்த்தார். இரத்த அழுத்தத்தினால், பாரிசத்தால் பாதிக்கப்பட்டு வேலையிலிருந்து முன்னதாகவே ஓய்வெடுக்க நேர்ந்து விட்டது.

எழுந்து நடமாட முடியாது கயிற்றுக் கட்டிலில் கிடந்த நோயாளி தந்தை... படிப்பறிவில்லாத தாய்... பள்ளிக்கூடப் படிப்பை முடிக்காத இரு தம்பிகள், வாடகை வீடு, பற்றாக்குறை வாழ்க்கை என்று திண்டாடிய குடும்பம்.

தீபாவளி, பொங்கல் போன்ற நாள்களில் லோக நாதனைப் பார்க்கப்போகும்போது ஒரு சிறிய டப்பா மிட்டாய் அல்லது ஒரு சீப்பு மலைவாழைப் பழத்துடன் தான் சிவசாமி செல்வது வழக்கம்.

அப்படி ஒரு குடும்பத்து நண்பராகப் பழகிக் கொண்டிருந்தார். ஆனால் மஞ்சுளாவோ, அவளது தம்பிகளோ அவரைத் தேடிக்கொண்டு அவர்கள் வீட்டுக்கு வரமுடியாது. ஒரு தடவை மஞ்சுளா அவரைத் தேடிக் கொண்டு வந்தபோது பாமா வீட்டில் இருந்துவிட்டாள். அவசரமாக கைமாற்றாக பத்து ரூபாய் கடனாகக் கேட்டு அப்பாவுக்கு மருந்து வாங்கிப் போகத்தான் மஞ்சுளா அவர்கள் வீட்டுக்கு வந்திருந்தாள்.



''வீட்டு வேலையா வேணும்? பார்த்தால் வேலை செய்கிற பெண்ணாட்டமா இல்லையே... மிஸ்டர் சிவசாமியைப் பார்க்கணுமா? எதுக்கு? அவரை உனக்கு எப்படித் தெரியும்...?''

படபடவென்று பாமா பல கேள்விகளை பொரிந்து தள்ள, மஞ்சுளா பதறிப் போனாள்.

பின்பக்கம் வேலையாக இருந்த சிவசாமி வாசலில் எழுந்த குரலைக் கேட்டு வேகமாக வந்தார்.

''இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?'' பாமா அதட்டலாகக் கேட்டதைக் காதில் போட்டுக் கொள்ளாது, ''மஞ்சுளாவா? என்னம்மா? அப்பாவா கூப்பிட்டனுப்பினார்? சாயங்காலம் நான் அந்தப் பக்கம் வரேன்னு சொல்லு...'' சட்டென்று நிலைமையை சமாளித்து வாசல் கேட்வரை கூடச் சென்று வழியனுப்பி பர்சைத் திறந்து பத்து ரூபாயைக் கொடுத்து, ''மஞ்சுளா, என்னைத் தேடிக் கொண்டு வரணும்னா நீ சாயங்கால வேளையிலே சாலையிலே இருக்கிற மருந்து கடை வாசலில் நில்லு. கட்டாயம் நான் கடைத் தெருவுக்கோ, கடற்கரைக்கோ மாலை வேளையில் போறது பழக்கம். மருமகள் பொல்லாதவ. தத்துபித்துனு அவ பேசினதை நீ மனதில் எடுத்துக்காதே... அவளுக்கு அக்கம் பக்கத்தார் யாரையும் பிடிக்காது...''

ஒரு சின்னப் பெண்ணிடம் வீட்டில் தனக்கிருந்த அந்தஸ்தை விவரிக்க அவமானமாகத் தானிருந்தது.

அன்றிலிருந்து மஞ்சுளா அவரை சந்தித்துப் பேச வேண்டுமானால் அந்த மருந்துக்கடையருகே வந்து மாலை வேளையில் நிற்பது வழக்கம். சில சமயம் தங்கள் வீட்டுக்கு பக்கத்திலிருந்த மளிகைக்கடை தொலைபேசி

வழியே அவருடன் தொடர்பு கொள்வதுண்டு. அவர் மகனும் மருமகளும் வீட்டில் இல்லாத போதுதான் மஞ்சுளா அவரை தொலைபேசியில் அழைப்பாள். பாமா வுக்கு பாம்புக்கண். தொலைபேசியை அவர் உபயோகித்து விட்டிருந்ததைக்கூட ஒருநாள் கவனித்துவிட்டாள். சிவசாமிக்கு இடது காது கொஞ்சம் மந்தம். தொலைபேசியை வலது காதில் வைத்துத்தான் பேசுவார். அப்படியே கை தவறுதலாக ஸ்டாண்டில் திருப்பி வைத்துவிட்டிருந்தார்.

வந்ததும், வராததுமாக பாமா கேட்டுவிட்டாள்.

யார் டெலிபோன் பண்ணினாங்க?

அதையும் சிவசாமி சமாளித்தார்.

''வரவர டெலிபோனில் எத்தனை 'ராங்கால்' வரது தெரியுமா? சித்த நேரம் உட்கார விடாம... இன்னிக்கு மூணுபேர் தவறா நம் எண்ணைக் கூப்பிட்டு கழுத்தறுத் துட்டாங்க...''

பாமா கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு மாமனாரை வெறித்தாள்.

''கிழவா! பொய் சொல்றியே! டெலிபோனில் பேசற அளவுக்கு சிநேகிதங்க கொழுத்துட்டாங்க... பிள்ளை யில்லா வீட்டில் கிழவன் துள்ளிவிளையாடறான்னு சொல்வாங்களே அது சரிதான். எங்களுக்குன்னு இன்னும் ஒரு குழந்தை இல்லாததாலே... இந்த வீட்டில் நாங்க இல்லாதபோது உன் ராஜ்யம் நடக்கிறது.''

வெறுப்பும், கசப்புமான அவளது பார்வை பலவும் சொல்லின.

மஞ்சுளாவுடன் ஜோடியாக அவர் மெல்ல சாலை யில் கடைத் தெருவை நோக்கி நடந்தார்.



''முதல்லே இருட்டறத்துக்கு முந்தி காய்களை வாங்கிடலாம். பிறகு நீ சொல்றதை நிதானமா கேட் கிறேன்...''

மஞ்சுளா தலையை அசைத்தாள். கூடவே அவரைத் தொடர்ந்தாள். மயிலைக் குளக்கரை காய்கறி கடையோர மாக நடந்தனர் இருவரும். வாரத்துக்குத் தேவையான வற்றை காகிதத்தில் எழுதியிருந்தாள் பாமா. உருளைக் கிழங்கும், தேங்காயும், வெங்காயமும்... கூடையை நிறைத்துக்கொண்டு கனத்தன. மேலே தேவைப்பட்ட மற்றவைகளை வாங்கிக் குவித்துக்கொண்டு தூக்கமாட்டாத சுமையுடன் சிவசாமி திணறினார்.

மஞ்சுளாவுக்கு அத்தனை காய்கறி வாங்க தேவை யிருக்கவில்லை. காசும் இருக்கவில்லை. மறுநாள் சமையலுக்கு வேண்டி ஒரு கத்தை கீரையும், இருபது பைசாவுக்கு பச்சை மிளகாயும், கால் கிலோ தக்காளிப் பழமும் வாங்கி தன் வேலையை முடித்துக் கொண்டாள்.

''ஸார்... நீங்க என் கூடையை தூக்கிக்கோங்க... நான் உங்க கூடையை தூக்கிக்கிறேன்...'' என்றாள் பரிவுடன். மெல்ல நடந்து கோவில் குளத்தின் படித்துறை பக்கம் வந்தனர். அதற்குள் நன்றாக இருட்டத் தொடங்கிவிட்டது. சாலை விளக்குகள் பளிச்சிட்டன. பக்கத்திலிருந்த கழிவறையிலிருந்து லேசாக சிறுநீர் நாற்றத்துடன்... மல்லிகைப்பூ... என்று கத்திக்கொண்டு போன பூக்கார சிறுவன் கூடையிலிருந்து மலரின் மணம் சுவையானதொரு வாசனையுடன் வீச... இருவரும் படிகளில் இறங்கி மனிதக் கூட்டமில்லாத ஒரு பக்கம் உட்கார்ந்து கொண்டனர். சமீபத்தில் பெய்த மழையில் இங்குமங்கும் குட்டையாகத் தேங்கியிருந்த நீரில் விளக்கு வெளிச்சம் பிரதிபலிக்க...

அதற்குள் இலைகளைத் துளிர்க்கவிட்டிருந்த தாமரைக் கொடிகளைப் பார்த்தபடி... பெருமூச்சுவிட்டாள் மஞ்சுளா.

''அதிக நேரம் நாம இங்கே உட்கார்ந்து கொண்டிருக்க முடியாதம்மா... என்ன சொல்லணும்னு விரும்பறயோ அதை உடனடியா சொல்லிட்டா நல்லது...'' என்றார் சிவசாமி.

கையில் அகப்பட்டதொரு பொருக்கைக்கல்லைக் குளத்தில் வீசினாள். குட்டையாகத் தேங்கியிருந்த நீரில் கல்பட்டு வட்டமாக பல அலைகளை எழுப்ப... மனதில் குமுறிக் கொண்டிருந்த தன் உணர்வு அலைகளை இழுத்துப் பிடித்துப் பேச அவளுக்கு சில நிமிடங்கள் ஆயின.

''ஸார்... நான் ஒருவரைக் காதலிக்கிறேன்.''

திடுக்கிட்டு நிமிர்ந்தார் சிவசாமி. மஞ்சுளாவிடமிருந்து அந்த செய்தியை ஏனோ எதிர்பார்க்கவில்லை.

''ஸார் பாரிசத்தால் தாக்கப்பட்டிருக்கிற என் அப்பா எழுந்து நடந்து முன் போலே வளைய வருவாரா? எனக்கு எங்கேயாவது ஒரு நல்ல நிறுவனத்திலே டைப்பிஸ்ட் வேலை கிடைக்குமா? வேலை இல்லாம வெட்டியா நான் என் குடும்பத்துக்கு பாரமா உட்கார்ந்திருக்கிறது மனதுக்கு வேதனையா இருக்கு. பவுடர், சோப்பு, சீப்பு இத்யாதிகளை விற்க ஒரு நிறுவனத்திலே ஸேல்ஸ் கேர்ல்ஸ் வேணும்னு விளம்பரப்படுத்தி இருக்காங்க... உங்க அபிப்பிராயம்... ஸார் எங்கப்பாவுக்கு தென்னமர எண்ணெய் போட்டு கால், கைக்கு, தேய்ச்சுவிட்டா நல்லதுன்னு சொன்னாங்க... நீங்க என்ன சொல்றீங்க. எங்க குடும்பம் பற்றாக் குறையிலே கஷ்டப்பட்டுக் கொண்



டிருக்கும்போது... மூத்த அக்கா மூணாவது பிரசவத்திற்கு பட்டணத்துக்கு பிறந்த வீட்டிற்கு வரப்போவதாக கடிதம் போட்டிருக்காங்க... அம்மா ஒரே கவலையா இருக்காங்க... இது என்ன பழக்கம்? கல்யாணமானதும் பெண்கள் தங்கள் புக்ககத்தைத்தானே இதுகளுக்கு எதிர்பார்க்கணும்?''

இப்படித்தான் சந்திக்கும்போதெல்லாம் குடும்பத்தின் பலவித சங்கடங்களை சொல்லி... யோசனை கேட்டு ஆறுதல் பெறுவது வழக்கம். இப்போ திடீரென்று அவளது சொந்த விஷயத்தைப் பற்றி பேசுகிறாளே! மூச்சு முட்டிவிட்டது போன்ற திகைப்பில் அவளைத் திரும்பிப் பார்த்தார். இந்தப் பெண் சில நாள்களாக திடீரென்று மிகவும் பிரகாசமாக... கண்கள் பளபளக்க... உற்சாகமாகப் பேசுகிறாளே என்று அதிசயப்பட்டதின் காரணம் இப்பவல்லவா புரிகிறது!

## 4

யாரோ ஒருவனை காதலிக்கிறாளாமே, எப்போது எங்கே? என்று கேட்டார்...

''இதைப் பற்றி நான் அம்மாவிடமோ அப்பாவிடமோ பேச முடியாததினால் உங்ககிட்ட சொல்லி ஆலோசனை கேட்கிறேன்.''

''காதலிக்க ஆரம்பிக்கறதுக்கு முந்தியே கேட்டிருந்தால் பயன் உண்டு'' - வேடிக்கையாகச் சிரித்தார் சிவசாமி.

''கேட்டுக் கொண்டு மனசில் ஏற்படும் ஆசையில்லையே காதல்! திடீரென்று புயல்போல முன் எச்சரிப்பு ஏதுமில்லாம பார்த்ததும் ஒருத்தர் மேலே ஏற்படுகிற ஆசைதானே காதல்!''

''சரி, உன் விளக்கத்தை ஒத்துக்கறேன். மேற்கொண்டு முழுசையும் சொல்ல முடியுமா?''

''ரெண்டு மாசத்துக்கு முந்தி என் சின்ன அக்கா எங்களைப் பார்க்க வந்திருந்தாங்களே, உங்ககிட்டேகூட சொன்னேனே ஞாபகமிருக்கா?''

''நல்லாவே ஞாபகமிருக்கு. உன் அக்காவிற்கு உடம்பு சரியில்லை. ஒரு பத்துநாள் பிறந்தகத்திலே ஓய்வா இருந்து தேத்திக்கிட்டு போகணும்னு வந்திருந்தாங்க...''

''அவங்களை எங்க தெரு கோடியிலிருக்கிற பாலி கிளினிக் டாக்டர் கிட்டே காட்ட அழைச்சுட்டுப் போனேன். அவர் ரத்த பரீட்சை பண்ணணும்னு காகிதம் எழுதிக் கொடுத்தார். சங்கரா லாபரட்டரிக்கு அழைச்சுட்டுப் போனேன்.''

''மேலே சொல்ல வேண்டாம். அங்கே ஒரு வாலிபனை சந்திச்சு அவனை உனக்குப் பிடிச்சுப்போச்சு.''

''சரியா சொல்லிட்டீங்களே?'' புடவைத் தலைப்பை வெட்கத்துடன் முறுக்கினாள்.

''அவனும் அங்கே ரத்த சோதனைக்கு தன் உறவினர் யாரையாவது கொண்டு வந்திருந்தானா?''

''இல்லை... அங்கே வேலை செய்கிற லேபரட்டரி அசிஸ்ட்டெண்ட்.''

''பெரிய இடமாத்தான் பார்த்து புடிச்சிருக்கே... அவனுக்கும் உன் மேலே...''

''அவரும் என்னை விரும்பறார். கடிதத்தில் எழுதி என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுகிறதாக என் விருப்பத்தைக் கேட்டிருக்கிறார். கடிதம் என் முகவரிக்கு



வீட்டுக்கு வந்தப்போ நான் ரொம்பவும் பயந்துட்டேன். நல்லவேளை அம்மா கண்டுக்கலை... இனிமேல் அவர் வீட்டு முகவரிக்கு கடிதம் எழுதக்கூடாதுன்னு சொல்ல விரும்பறேன்.''

''அவனைப் பத்தி பூரா விவரமும் தெரியுமா?''

முழங்கால் மீது கைகளைக் கட்டிக்கொண்டு ஆகாயத்தை பார்த்தபடி மஞ்சுளா பேசினாள்.

''உங்ககிட்ட மறைக்க விரும்பலை. ரகசியமா, முன் ஏற்பாட்டின்படி அவரை நான் சாந்தோம் கடற்கரையிலே ஒரு குறிப்பிட்ட இடத்திலே சில தடவை சந்தித்தேன்... இருவரும் பேசிக் கொண்டோம். எங்கள் காதலில் ஜாதியும் மதமும் குறுக்கிடவில்லை. ஒரு வகையில் அது நல்லதாப் போச்சு. ஆனால் அவர் கொஞ்சம் பெரிய இடத்துப்பிள்ளை. கூடப் பிறந்த ஒரே சகோதரி. வயதில் இவரைவிட மூத்தவள். இரண்டு வருஷத்துக்கு முன் கல்யாணமாகி மதுரையில் வசிக்கிறாங்க... சொந்த வீடு இருக்கு. அப்பா வச்சுட்டுப்போன சொத்து கொஞ்சம் இருக்கு. நுங்கம்பாக்கத்தில் வசிக்கிறார்.''

''அப்போ ரொம்ப பெரிய இடம்னு சொல்லு. அந்தப் பக்கமெலாம் பெரிய பங்களா... காவல் காக்க ஆள் - அல்சேஷியன் நாய் என்று பந்தாவாக இருக்குமே?''

''அப்படியெல்லாம் இல்லை. கொஞ்சம் வசதியானவங்க... நம்ப சுந்தரா காலனிபோல அங்கே புதிதா உருவான ஒரு மங்களா நகர் என்கிற குடியிருப்பு பகுதியிலேதான் வசிக்கிறார். முகவரி கொடுத்திருக்கிறார்.''

''இப்போ இதுலே நான் என்ன உதவி செய்ய முடியும்னு நினைக்கிறே?''

''அவங்க அம்மாவுக்கு ஜாதகத்திலே கொஞ்சம் நம்பிக்கை உண்டாம். அதனாலே என் ஜாதகத்தை எடுத்துக் கிட்டுப் போய்... அவங்ககிட்ட கொடுத்து பொருத்தம் பார்க்கச் சொல்லணும்.''

''நீ பெண்ணுக்கு என்ன உறவுன்னு அந்தம்மா கேட்டா என்ன சொல்லுவே...?''

''எங்கள் குடும்பத்தின் நல்லதொரு நண்பர்... இதைவிட உறவு பெரிசான்னு கேட்கவா உங்களுக்குத் தெரியாது?''

''பலே பலே... ரொம்ப கெட்டிக்காரியா இருக்கே... இந்தக் காரியத்தை நான் எப்ப செய்யணும்னு எதிர்பார்க்கிறே?''

''உங்களுக்கு சௌகரியப்பட்டபோது... ஒரு நல்ல நாள் பார்த்து அங்கே போயிட்டு வாங்க... முகவரியையும் ஜாதகத்தையும் கையோடு கொண்டு வந்திருக்கேன்.''

''மஞ்சுளா நீ ரொம்ப வேகமா செயல்படறே. இந்தக் கிழவன் உடலில் அத்தனை தெம்பு இல்லே...''

''உங்க மனதிலே ரொம்ப தெம்பு இருக்கு... நம்ம மஞ்சுளாவுக்கு செய்கிறோம் என்கிற உற்சாகத்தோட நீங்க கிளம்பினா எல்லாம் சுபமா முடியும். முதல்லே... இவர் அம்மா சம்மதிச்சுட்டா... பிறகு... மத்ததுகளைப்பற்றி கவலை இல்லை...''

''அத்தனை தீர்மானமா சொல்றியே, எல்லாம் நீங்க ரெண்டு பேரும் பேசி முடிச்சு வச்சுட்டீங்களா?''

''வரதட்சணை, சீர் எதுவும் எதிர்பார்க்காம என்னை எனக்காக கல்யாணம் செய்துக்க பிரியப்படறார். இதைவிட எனக்கு வேறே நல்ல வரன் கிடைக்குமா? சொல்லுங்க...''



''இத்தனை சொன்ன நீ பையனுடைய பேரைச் சொல்லலையே...?''

''பாஸ்கர்னு பேர்... டாக்டர் பட்டத்துக்கு பிறகு... பாத்தாலஜியை தம் மேற்படிப்புக்கு எடுத்துக் கொண்டு படிச்சவர், ரொம்ப கெட்டிக்காரர்...''

''பார்க்க எப்படி இருப்பான் பையன் - அதைச் சொல்ல வேண்டாமா?''

''நிறத்திலே என்னைப் போலவே இருப்பார்... நல்ல உயரம்... சுருண்ட முடி... தீர்க்கமான மூக்கு...''

''போதும்... போதும்... அழகான கண்கள் - வரிசையான பற்கள் - வயது இருபத்தெட்டு... சரிதானே'' - சிவசாமி சிரிக்க... கன்னம் குழிய... முகம் சிவக்க ஆனந்தத்துடன் அவள்கூடச் சிரித்தாள்.

திடீரென்று தமது வயதில் பாதி குறைந்து - உடலில் அசாத்தியமான தெம்பு ஏற்பட்டு விட்டதுபோல உற்சாகத்துடன் எழுந்தார்.

''வீட்டுக்குப் போகலாமா?''

''கனமான உங்க கூடையை தெருமுனை வரை நான் தூக்கிட்டு வரேன்...'' கூடையைத் தூக்கிக் கொண்டாள் மஞ்சுளா.

''இந்தக் கனமான சங்கதியை உங்க நெஞ்சுக்குள்ளே தூக்கி வச்சுக்கோங்கன்னு தானே ரொம்பப் பெரிய விஷயத்தை சொல்லி உதவி கேட்டிருக்கே... இனி எனக்கு தூக்கம் இருக்காது'' - சிரித்தபடி நடந்தார்.

மஞ்சுளா மகிழ்ச்சியுடன் பின் தொடர்ந்தாள்.

சிவசாமி வீட்டிற்குள் நுழைவதற்குள் நன்றாக இருட்டி விட்டிருந்தது. வேலையிலிருந்து திரும்பி வந்திருந்த மருமகளின் முகம் கோபத்திலே ஊதிவிட்டிருந்தது.

முன்னறையை காலால் அளந்து கொண்டிருந்த மகன் தந்தையைக் கண்டதும் எரிந்து விழுந்தான்.

''ஏன் அப்பா... வாங்கிவர வேண்டியதை பொழுதோட வாங்கிட்டு வரக்கூடாதா? இனிமேலே பாமா... காய்களை நறுக்கி சமைக்கணுமா...''

சிவசாமி மவுனமாக கூடையை ஒரு பக்கம் வைத்து விட்டு... கால் செருப்பைக் கழற்றி நடையில் விட்டு, கைகளைக் கழுவிக் கொண்டு உள்ளே வந்தார்.

காய்கறிக் கூடையை சாப்பாட்டறை தரைமீது கோபத்துடன் கவிழ்த்து துழாவினாள் பாமா... உள்ளே அடுப்பின்மீது குக்கர் சீறிக் கொண்டிருந்தது. சமையலுக்குத் தேவைப் பட்டவைகளை எடுத்துக்கொண்டு அவள் வெடுக்கென்று உள்ளே சென்றுவிட்டாள்.

சாப்பாட்டறை தரைமீது உருண்டோடிய உருளைக் கிழங்கு, தக்காளி முதலியவற்றை பொறுமையுடன் பொறுக்கி எடுத்து பிளாஸ்டிக் பைக்குள் போட்டு... பிரிட்ஜில் வைக்க வேண்டியவற்றை வைத்துவிட்டு... காலை நூலகத்திலிருந்து எடுத்து வந்த ரீடர்ஸ் டைஜஸ்ட்டுடன் முன்னறையில் சென்று உட்கார்ந்து விட்டார்.

இரவு சாப்பாட்டின்போது யாரும் பேசவில்லை.

முன்பக்கமிருந்த பெரிய அறை கிரிதரனுடையது. அடுத்ததாக, கட்டில் மெத்தையென்று அலங்கரிக்கப் பட்டிருந்த அறையை தன் வீட்டவர்கள் வந்தால் தங்க வேண்டுமென்று பாமா பூட்டி வைத்திருந்தாள்.



பின்னாலிருந்த சிறிய அறையில் மாமியார் விட்டுப் போயிருந்த பழையதொரு மரக்கட்டிலையும் பீரோவையும் போட்டு வைத்து மாமனாரின் உபயோகத்திற்கென்று ஒதுக்கி விட்டிருந்தாள்.

இரவு உணவிற்குப் பின்னர் தமது அறைக்குள் சென்று கட்டில் தலைமாட்டில் சுருட்டி வைத்திருந்த பஞ்சு மெத்தையை உதறிப்போட்டுக் கொண்டு கதவை அடைத்து விட்டு விளக்கை அணைத்தார்.

இரவு வேளையில் நீண்ட நேரம் விளக்கை எரிய விட்டுக் கொண்டு படிக்க உட்கார்ந்துவிட பாமா அனுமதிப்பதில்லை.

ஒன்பது மணிக்கு நடையிலிருந்த ஜீரோவாட் விடி விளக்கைத் தவிர எல்லாம் அணைக்கப்பட்டுவிட வேண்டும்.

அதற்குமேல் டி.வி., ரேடியோ சத்தம் கேட்கக் கூடாது என்பது அவள் கட்டளை.

சாதாரண நாட்களில் அவர் தமது டிரான்சிஸ்டர் ரேடியோவின் 'இயர் போனை' உபயோகப்படுத்திய வண்ணம் ஓசைப்படாது வானொலி நிலையம் மூடும்வரை நிகழ்ச்சிகளைக் கேட்டு ரசித்துக் கொண்டிருப்பார்.

இன்று அவர் மனதிலே உணர்வுக் கலவையின் உளைச்சல். மஞ்சுளாமீது அவருக்கு அலாதியானதொரு பரிவு உண்டு.

கள்ளங்கபடமில்லாப் பெண், தன் அந்தஸ்துக்கு மீறிய இடத்தில் வாழ்க்கைப்பட ஆசைப்படுகிறாள். அவளுக்கு உதவ நாமும் தலையாட்டிவிட்டது சரியா?

அந்தப் பிள்ளை பாஸ்கரன் அவளை உண்மையாக நேசிக்கிறானா?

ஒரு இளம் பெண் பார்க்க லட்சணமானவள் கிடைத்திருக்கிறாள், காதல் என்று சொல்லி ஊரைச் சுற்றி வரலாம் என்று நினைக்கும் அதமனாக இருந்தால்... ஒரு கோவிலில் வைத்து கல்யாணம் செய்து கொடுக்கும் நிலையில்கூட அவளது பெற்றோர்கள் இல்லையே!

பாமாவுக்கு விஷயம் தெரிந்துவிட்டால்...

ஜன்னல் கதவுகளைத் திறந்து, திரைச்சீலையை இழுத்து ஒதுக்கிவிட்டு மின்விசிறியை லேசாகச் சுழல விட்டுவிட்டு படுக்கைமீது உட்கார்ந்தார்.

அவர் உதவி செய்து யாரும் மோசமாகிப் போய்விடவில்லை. ரிக்ஷாக்காரன் மதிவாணனுக்கு வங்கியில் எப்படி கடன் எடுப்பது என்பதைப் பற்றி விவரித்து, கூடச் சென்று உதவினார். சொந்த ரிக்ஷாவை வைத்துக்கொண்டு அவன் இப்போது பசியில்லாது வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவரைத் தெருவில் யதேச்சையாக சந்திக்கும் போது... பல்லெல்லாம் தெரிய புன்னகைத்துவிட்டு பெரிய கும்பிடு போடுகிறான்.

''உங்க புண்ணியத்தில் சுகமா இருக்கேன்...'' அவன் சொல்வதைக் கேட்க அவருக்கு எத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறது! பக்கத்துத் தெரு பஞ்சாமியின் மகன் ரங்கனுக்கு தனக்கு தெரிந்தவரின் அலுவலகத்தில் ஒரு கணக்கர் வேலை வாங்கித் தர... நடையாய் நடந்து வெற்றிபெற்றார். வேலை செய்து கொண்டே அவன் படித்து தன் நிலையை உயர்த்திக் கொண்டுவிட்டான். இப்போது அந்த அலுவலகத்தில் அவன் உதவி மானேஜர். சில மாதங்களுக்கு முன் அண்ணாசாலை கடைத்தெருவில்



அவனை பார்த்தபோது அவருக்கு அடையாளமே தெரியவில்லை. கோட், ஸூட் அலங்காரத்தில் ஆளே மாறிவிட்டிருந்தான்.

''நான்தான் ரங்கன்... ஞாபகமிருக்கா? உங்க உதவியாலே இன்னிக்கு நல்லா வசதியா இருக்கேன்... பெரிய வேலை. அடுத்த மாசம் கல்யாணம். நேரே வந்து பத்திரிகை கொடுப்பேன். கல்யாணத்துக்கு அவசியம் வரணும்...'' ரங்கன் மகிழ்ச்சியோடு சொன்னதைக் கேட்டு பூரித்துப் போனார். கல்யாணம் சென்னையில்தான் நடந்தது. அவருக்குப் போக முடியவில்லை. ஆனாலும் ரங்கனுக்குத் தமது வாழ்த்துக்களை கடிதம் மூலம் அனுப்ப அவர் மறக்கவில்லை.

அப்படித்தான் பரிமளாவையும் அவர் சில வருஷங்களுக்குப் பின்னர் சௌரிநாதன் நர்ஸிங்ஹோமில் எதிர்பாராத விதமாகச் சந்தித்தார்.

தோட்ட வேலை செய்து கொண்டிருந்தபோது... காலில் ஒரு கண்ணாடி குத்தி அந்தக் காயம் வீங்கி சீழ்கட்டிக் கொண்டதும் பயந்து போனார். நண்பர் ஒருவரது சிபாரிசின் பேரில் சௌரிநாதன் தனியார் மருத்துவமனையில் காலில் பெரிதாகிக் கொண்டு வந்த கட்டிக்கு சிகிச்சை பெற சென்றிருந்தார். கட்டியை கீறி... மருந்து போட்டு... கட்டிவிட்டு டாக்டர் அப்பால் போனதும் அவரது கையைப் பிடித்து மேஜை மேலிருந்து இறக்கிவிட்ட நர்சைப் பார்த்து விழித்தார்.

''என்ன அப்படி பார்க்கிறீங்க. உங்க காலனியிலே கடைசியா இருந்த வீட்டிலே வேலை பார்த்துக் கொண்டிருந்த பரிமளாதான்...'' பரிமளாவா... நிசமாவா பூரித்துப் போனார் கிழவர். சுந்தரா காலனியில் கோடி

வீட்டில் வெளிநாட்டிலிருந்து பிள்ளை அனுப்பிய பணத்திலே சுகமாக வாழ்ந்து கொண்டிருந்த தம்பதியருக்கு... சமையல் வேலை செய்து கொண்டு... பக்கத்திலிருந்த பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்தாள் தாயில்லாத ஏழைப் பெண் பரிமளா.

ஒரு மழைநாள்போது பள்ளிக்கூடத்திற்கு... நேரமாகி விட்டதென்ற அவசரத்தில் வேகமாக நடந்த பரிமளா... தெருவிலிருந்ததொரு சேற்றுக் குட்டையில் வழுக்கி விழுந்துவிட்டாள். மளிகைக் கடையில் சாமான் வாங்க மெல்லக் குடையோடு நடந்து கொண்டிருந்த சிவசாமி சட்டென்று அவளை அணுகி தூக்கிவிட்டு... கீழே கிடந்த புத்தகங்களை பொறுக்கிக் கொடுத்து உதவினார். பாவாடை, தாவணியெல்லாம் சேறாகி விட்டதேயம்மா... போய் வேறே உடுத்திக்கொண்டு குடையோட பள்ளிக் கூடம் போகக் கூடாதா?'' அனுதாபத்துடன் கேட்டார்.

சிறுமியின் கண்களில் நீர் புரண்டது. ''பள்ளிக்கூடம் போய்வர எனக்கு இரண்டே சீருடைதான்... நேத்து கட்டினதை காலையில் துவைச்சுப் போட்டுட்டு இதை உடுத்திக்கிட்டு வந்தேன்.''

''வாம்மா... எங்க வீடு முனையிலேதான் இருக்கு... குழாயடியிலே துணியில்பட்ட சேற்றைக் கழுவி... பிழிஞ்சு உதறிக்கோ...'' அன்புடன் அழைத்தார். தமக்கு குடிக்க வைத்திருந்த காப்பியை பிளாஸ்க்கிலிருந்து தம்ளரில் ஊற்றி உபசரித்தார்.

''கோடி வீட்டிலிருந்து வரேன்னு சொல்றே... இந்தப் பக்கத்து பங்களாவாசிகள் எல்லாம் பணக்காரங்களாயிற்றே. நீ அவங்களுக்கு உறவுக்காரப் பெண்ணா?'' அனுதாபத்துடன் அவர் கேட்டதும் பரிமளா அழுதேவிட்டாள்.



''சின்ன வயசிலே அம்மா செத்துட்டாங்க. அப்பா காஞ்சிபுரத்திலே ஒரு வீட்டிலே எடுபிடி வேலை செய்யறார்... என்னை இந்த வீட்டிலே வேலை செய்து அப்படியே படிக்கும்படி விட்டிருக்கார்... தம்பியை இன்னொரு வீட்டில் வேலைக்கமர்த்தி இருக்கார்... வீட்டு வேலைசெய்யவே நேரமில்லை... என்ன படிப்பு வேண்டி கிடக்குன்னு வீட்டுக்கார அம்மா தினமும் திட்டறாங்க.''

''உன்னைப் போல பெண்களுக்கு படிப்புத்தான் ஊன்றுகோல். அவங்க அப்படி படிப்பை கெடுக்கக் கூடாது. உதவியல்லவா செய்யணும்.''

''அவங்க பேத்திக்கு துணையா இருக்கத்தான் என்னைப் பள்ளிக்கூடம் அனுப்பறாங்களாம். பேத்தி காரில் போயிடுச்சு. நான் சமையலை முடிச்சிட்டுத்தான் கிளம்பணும். அதனாலே தினமும் நடந்து போறேன்.''

வசதியானவர்கள் தங்களை அண்டியிருப்பவர்களை ஆதரிக்காது அழுத்தப் பார்க்கும் அநியாயத்தை அவரால் தாங்க முடியவில்லை. எந்தக் காரணத்துக்காகவும் நீ படிக்கிறதை நிறுத்திடாதே. இப்போ பத்தாவது படிக்கிற இல்லையா. கஷ்டப்பட்டு பிளஸ் டு முடிச்சிடு. உன்னை டாக்டருக்கோ, நர்ஸ் வேலைக்கோ படிக்க... நான் உதவி செய்யறேன்.''

''நன்றி ஸார்.'' அன்று ஆரம்பித்ததொரு நட்பு அவர்களிடையே. சிறுமி பள்ளிக்குப் போகுமுன்னும் வருமுன்னும் தோட்டத்திலே வேலை செய்துகொண்டிருக்கும் அவருக்கு வணக்கம் தெரிவிக்காது போகமாட்டாள்.

''பரிமளா இந்தாம்மா, பென்சில் வாங்கிக்கோ.''

''பரிமளா... இந்தப் புத்தகத்தை நூலகத்திலிருந்து எடுத்து வந்தேன். படிம்மா... பொது அறிவு விருத்தியாகும்.''

''இப்படி ஏதாவது சிறு உதவிகள் செய்து கொண்டிருந்தார்.

அவருடைய போதனையால் அவள் தன் பிளஸ் டூ பரீட்சைக்குப் பின் நர்ஸ் வேலைக்குப் படிக்க ஆவன செய்யத் தொடங்கினார். வேண்டிய விண்ணப்பத்தாள்கள், டாக்டரின் சான்றிதழ்கள், நன்னடத்தைச் சான்றிதழ் இவைகளைச் சேகரித்துக் கொடுப்பதில் அவர் மிகவும் உதவினார்.

## 5

ஒருநாள் காலை மகனும் மருமகளும் வேலைக்குப் போகுமுன் அவசரமாக டிபன் சாப்பிட உட்கார்ந்திருந்த சமயம் - வாயிற்கதவு படபடவென்று இடிபட்டது. எழுந்து சென்று கதவைத் திறந்தார் சிவசாமி.

சீராக வாரப்படாத நரை ஓடிய கிராப்பு முடியும் அழுக்கு வேட்டி சட்டையுமாக சற்று பருமனான ஒரு ஆள் முன்பின் தெரியாதவன் கோபத்தில் சிவந்த கண்களால் அவரை வெறித்தபடி வராந்தாவில் நின்று கொண்டிருந் தான்.

''ஏன் அய்யா உங்க பேர்தானே சிவசாமி...''

''ஆமாம் எதுக்கு கேட்கிறீங்க?''

''உங்க வேலையைப் பார்த்துட்டு போகாம என் மகளை நர்ஸ் தொழிலுக்கு படிக்க உசுப்பி விட்டிருக் கிறீர்களே, இதென்ன நியாயம்?''

''நீங்கதான் பரிமளாவின் அப்பாவா... சந்தோஷம்... நீங்க இதைப்பத்தி சிந்திச்சு செய்திருக்க வேண்டிய



வேலை. இந்த காலத்திலே எல்லா பெண்களுக்கும் தொழில் கல்வி ரொம்ப அவசியம். அதுவும் வசதி குறைவா இருக்கிற வீட்டுப் பெண்கள் கட்டாயம் படிப்பைத்தான் நம்பி வாழணும்...''

''அவளுக்கு இரண்டு வேளை வயிறார சோறு போட்டு பாத்துக்கிற அந்த பெரிய மனுஷங்களுடைய விரோதத்தை விலைக்கு வாங்கணும்னு என் மகளை ஏவி விட்டிருக்கீங்களா...?''

''அந்தப் பெரிய மனுஷங்க - தம் குழந்தைகளுக்கு படிப்பு எத்தனை அவசியம்னு நினைக்கிறாங்களோ அத்தனை அவசியம் மற்றவங்க குழந்தைகளுக்கும்னு நினைக்கணும்... நர்ஸ் படிக்க நேர்ந்தா... சோறு - உடுக்க துணி - சமூகத்திலே நல்ல மதிப்பு எல்லாம் ஏற்படும். வகுப்பிலே முதலாவதாக வர்ர கெட்டிக்காரப் பெண் கையிலே ஏன் அய்யா கரண்டியைத் தூக்கித் தருகிறீங்க... பெண்ணுக்கு சமைக்கத் தெரியணும். ஆனால் படிப்புதான் முக்கியம்...''

''பரிமளாவை நான் நர்ஸ் படிப்புக்கு அனுப்ப மாட்டேன். வெளியிலே போனால் பெண் கெட்டுப் போயிடுவான்னு இந்தம்மா சொல்றாங்க...''

''நல்ல கதை அய்யா இது? வீட்டில் வேலை செய்தால் மட்டும் பெண் கெட்டுப் போக சந்தர்ப்பம் இல்லையா?''

''நீங்க - உங்க காரியங்களைப் பார்த்துட்டு போங்கோ... என் பெண் வாழ்க்கையில் குறுக்கிட வேண்டாம். சொல்லிட்டேன்...''

''என்னப்பா கலாட்டா?'' கையைக் கழுவிக் கொண்டு வந்தான் கிரிதரன்.

''உங்கப்பாகிட்டே சொல்லுங்கோ... என் மகள் நர்ஸ் படிப்பதைப் பற்றி இவர் ஒண்ணும் அக்கறை காட்ட வேண்டாம்...''

பாமா ஓடிவந்து விவரமாக வந்த மனிதனை விசாரித்தாள். கோபத்தில் அவள் கண்கள் நெருப்பாகின.

வேலைக்குப் போக வேண்டிய அவசரத்தில் விஷயத்தை அத்துடன் விட்டுப்போய் விட்டாள்.

ஆனால் விஷயம் அத்துடன் நிற்கவில்லை... கோடி வீட்டு அம்மா ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை வந்து வீட்டு வாயில் அழைப்பு மணியை அழுத்தினாள்.

உள்ளே வந்த அவளுக்கு உட்கார நேரமில்லை என்று பிகு செய்தாள். நின்றபடியே ஒருமூச்சு சண்டை போட அவளுக்கு நிறைய நேரம் இருந்தது.

''நீங்கதான் மிஸ்டர்... சிவசாமி...''

''ஆமாம்... என்ன விசேஷம்?''

''ஏம்மா... நீ தானே இவருடைய மருமகள். ஏன் அப்பா நீதானே இவருடைய மகன். நீங்க இரண்டு பேரும் இந்த அநியாயத்தைக் கேளுங்க... என் வீட்டிலே வேலை செய்துண்டு சிவனேன்னு கிடந்த என் வேலைக்காரப் பெண்ணை இவர் தூண்டி விட்டிருக்கார். அவள் வேலையை விட்டுட்டு நர்ஸ் வேலைக்கு படிக்கப் போறேன்னு கூத்தாடறாள். இந்தப் பகுதியிலே வசிக்கிற நாம் யாரும் அண்டை வீட்டு சங்கதியிலே தலையிட்டு குழப்பற பழக்கமே இல்லை... அப்படி மரியாதையா நாம் வாழறோம். இவருக்குப் பொழுது போகலைன்னா வேற ஏதாச்சும் செய்யட்டும். என் வீட்டுக் காரியங்களில் ஏன் குறுக்கிடணும்...''



கோபத்தில் முகம் சிவக்க... காதுகளிலும், மூக்கிலும் இருந்த வைரங்கள், அவள் முகத்தை ஆட்டிப் பேசும் போதெல்லாம் பளபளவென்று டால் அடிக்க, கைகளை பல தடவை ஆட்டியபடி ஆர்ப்பரித்துவிட்டு கிளம்பிப் போனாள் அந்தம்மாள்.

''இதெல்லாம் உண்மையா அப்பா? உங்களுக்கு ஊர் விவகாரம் ஏன்? வெட்கமாயில்லை...? பெத்தவனுக்கு இல்லாத கவலை உங்களுக்கு ஏன்?'' மகன் உரத்த குரலில் கத்தினான்.

''நல்லா படிக்கிற பெண்ணை வீட்டுவேலை செய்யச் சொல்லி அந்தம்மா நிர்பந்திக்கிறது ஒழுங்கா?'' பதிலுக்குச் சீறினார் சினத்துடன்.

அவ்வளவுதான் அன்று வீடு அமர்க்களப்பட்டுப் போனது.

மருமகள் பாமா கணவனுடன் சேர்ந்து கொண்டு கூப்பாடு போட்டாள்.

முடிவில் மகன் தீர்மானமாக சொல்லிவிட்டான். ''இந்த மாதிரி பிறர் வீட்டு விஷயங்களில் தலையிட்டு... ஊராரை நம்மிடம் சண்டைக்கு ஏவினீங்கன்னா எனக்கு பிடிக்காது அப்பா... பெத்தவர்னு மரியாதைக்குக் கட்டுப்படறேன். இன்னொரு தடவை யாராவது நம்ம வீட்டுக்குள்ளே உங்களைப்பத்தி புகார் சொல்லிக் கொண்டு வந்தா... பிறகு நடக்கிறதே வேறா இருக்கும்'' - உறுமினான்.

'என்னடா நடக்கும். பயமுறுத்திரியே' - இப்படிக் கேட்க வேண்டுமென்று சிவசாமி ஆசைப்பட்டார். ஆனால் அன்று தொடர்ந்து சண்டையைப் பெருக்கிக் கொண்டு போக விரும்பாது மவுனமானார்.

ஆனால் அவர் எடுத்துக் கொண்ட சிரமம் வீண் போகவில்லை. பரிமளா பிடிவாதமாக வேலையைவிட்டு நர்ஸ் தொழிலுக்கு படிக்கக் கிளம்பிவிட்டாள். அதற்குப் பின் அந்தப் பெண் அவரை வந்து பார்க்கவில்லை. அவரும் பல காரணங்களை உத்தேசித்து... தொடர்பு கொள்ள விரும்பவில்லை. கோடி வீட்டு அம்மா சில மாதங்களுக்கு முன்னர்தான் காலமாகிப் போனார்.

ஒரு பெண் குழந்தை கல்வி மூலம் முன்னுக்கு வருவதைத் தடுத்தாளே மகராசி. இப்போ என்னத்தை வாரிக்கட்டிக் கொண்டு போகிறாள்... அவளது இறுதி யாத்திரையை எட்டிப் பார்த்த சிவசாமி மனதிற்குள் கடுத்துக்கொண்டது உண்மை.

அன்று பரிமளாவை நர்ஸாக சீருடையில் பார்த்த போது அவருக்கு எத்தனை மகிழ்ச்சி! ஏதோ சாம்ராஜ்யத்தைப் பிடித்துவிட்டது போன்று உற்சாகத்தில் பூரித்துப் போனார்.

''நல்லா இருக்கியா அம்மா - உன் அப்பா... தம்பி... எல்லோரும் சுகந்தானே?''

''அப்பா அந்த எடுபிடி வேலையை விட்டுட்டு ஓய்வா இருக்கார். நாங்க எல்லோரும் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கிட்டு கொஞ்சம் வசதியா வாழ றோம். என் தம்பி பி.ஏ. முடிச்சிட்டு ஒரு ஆடிட்டர் கிட்டே அப்ரெண்டிஸ்ஸா இருக்கான். அவனும் படிப்பை முடிச் சுட்டா... அப்பாவுக்கு நிம்மதிதான். அதோட இன்னும் ஒரு நல்ல சங்கதியை உங்களுக்கு சொல்ல விரும்பறேன். எல்லாம் நினைச்சபடி சுபமா முடிஞ்சா உங்களுக்கு ஒரு கடிதம் போடலாம்னு நினைச்சேன்...''



''என்னம்மா கல்யாணமா...?''

முகம் சிவந்து நாணிக் கொண்டாள் நர்ஸ் பரிமளா.

''எங்க சொந்தக்காரப் பையன் ஒருவர்... அமெரிக்காவிலே எஞ்ஜினியராக இருக்கார். அவருக்கு என்னைக் கேட்டு ஓரளவு எல்லாம் முடிவாகியிருக்கு. அவர் போன வருஷம் லீவிலே இங்கே வந்து என்னைப் பார்த்துச் சம்மதம் தெரிவிச்சுட்டு போயிருக்கார். இந்தத் தையிலே எனக்கும் அவருக்கும் கல்யாணம் நடக்க உத்தேசமாயிருக்கு...''

அவள் முகத்தில்தான் அதைச் சொல்லும்போது எத்தனை ஒரு பரவசம்!

பின்னர் அந்தத் தை மாதம் சென்னையில் பரிமளா வின் கல்யாணம் மிகவும் எளிய முறையில் திருவல்லிக் கேணியில் ஒரு கல்யாண மண்டபத்தில் நடந்தது. மகனுக்கும், மருமகளுக்கும் தெரிவிக்காது அவர் வெளியே போகிறவர்போல கல்யாண ரிஷப்ஷனுக்கு போய் வந்தார்.

மாப்பிள்ளை பரிமளாவுக்குப் பொருத்தமானவனாகத் தான் இருந்தான்.

பீங்கானில் செய்த ஒரு பிள்ளையார் பொம்மையை அவர் அவளுக்குப் பரிசாக எடுத்துச் சென்றிருந்தார்.

சில மாதங்களுக்குப் பின் அவருக்கு அமெரிக்காவி லிருந்து ஒரு கடிதம் வந்தது. பரிமளா எழுதியிருந்தாள். விரைவில் அவள் அங்குள்ள ஒரு ஆஸ்பத்திரியில் நர்ஸ் வேலை பார்க்க போகிறதாகவும், அவள் கணவன் சொந்த வீடு, கார் என்று வசதியோடு வாழ்வதாகவும் அவர் கல்யாணத்தினபோது கொடுத்த பிள்ளையார் சிலையை அவர்கள் வீட்டு பூஜை அறையில் வைத்துப் பூஜிப்பதாக வும் எழுதியிருந்தாள்.

''ஸார்! வாயில் ஒரு பிடி சோற்றை அள்ளிப் போட்டுக் கொள்ளும் போதெல்லாம் எனக்கு பல தடவைகள் உங்கள் நினைவு வருகிறது. இன்று நான் இப்படி சுகபோகமாக வாழும் வாழ்க்கைக்கு அஸ்திவாரம் போட்டுக் கொடுத்த உங்களை நான் மறக்கவே மாட்டேன். அப்பாவும் தம்பியும் சுகமாக சென்னையில் இருக்கிறார் கள். அப்பா தமது கடிதத்தில் அடிக்கடி உங்களை குறிப்பிடுகிறார். அந்த நல்ல மனிதனை நான் அறியாமை யால் ஆவேசமாக வாயில் வந்தபடி பேசிவிட்டேனே... உன் வாழ்க்கையை விளங்க வைத்து நம் குடும்பத்தை உயர்நிலைக்குக் கொண்டு வரத்தானே வழிவகுத்தார். ஒருநாள் போய் என் நன்றியைத் தெரிவிக்கப் போறேன் என்று எழுதியிருந்தார். அப்பா வந்து பார்த்தாரா?''

பரிமளாவுக்கு அவர் பதில் போடவில்லை. பின்னர் அவளும் எழுதவில்லை. ஆனால் அவள் தந்தை, அந்த முரட்டு மனிதன் இப்போது தலை வெளுத்து கொஞ்சம் வயதாகிப் போய் விட்டிருந்தான். ஒருநாள் கடைத் தெருவில் அவரை அடையாளம் கண்டுகொண்டு கையைப் பற்றிக்கொண்டுவிட்டான். உணர்ச்சி வசத்தில் அவனுக்கு தொண்டை அடைத்து, கண்கள் நீரில் பளிச்சிட்டன. தடுமாற்றமாகப் பேசினான்.

''ஸார்...ஸார்... என்னை மன்னிக்கணும். நான் ஒரு முரடன். உங்கள் உபகாரத்தின் அருமையை அப்போ புரிஞ்சுக்கலை... இப்போ நல்லா உணரத் தொடங் கிட்டேன். பரிமளா சுகமா இருக்கா. எங்கேயோ இருந்த எங்களை எங்கேயோ வச்சுட்டீங்க...''தழுதழுத்தான்.

நெஞ்சம் நெகிழ்ந்து போனார். ''பரிமளாவுக்கு என் ஆசிகள் என்று கடிதம் போடும்போது எழுதுங்கோ'' சொல்லிவிட்டு வீடு திரும்பினார்.



அன்று வெகுநேரம் அவர் உற்சாகத்துடன் மன நிறைவுடன், மகிழ்ச்சியுடன் தோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருந்தார். இப்படி அவர் செய்த உபகாரம் எதுவும் வீணானதேயில்லை.

ஏன் இதே மஞ்சுளாவுக்கு வேலைக்கு ஒரு நேர்முக சந்திப்பு என்று கடிதம் வந்தபோதுகூட அவர்தானே துணைக்குச் சென்றார்.

''அம்மா உலகம் ரொம்ப கெட்டு கிடக்கு. வேலை தருவதாகச் சொல்லி நேர்முகத் தேர்வுக்கு வரச்சொல்லி சில அயோக்கியர்கள் பொய்யான தகவல் கொடுத்து, தவறாக நடந்துக்க முயலுவாங்க. நீ சின்னப் பெண், சூதுவாது அறியாதவ. அப்படி ஏதாவது தேர்வுன்னு வரச்சொல்லி கடிதம் வந்தா நான் துணைக்கு வரேன்'' என்று சொல்லி பத்திரிகையில் கண்டதொரு விளம்பரத் துக்கு விண்ணப்பித்துக் கொண்டபோது அவளுக்கு நேர் முக தேர்வுக்கு வரும்படி கடிதம் வந்தது.

முகவரியும், செல்லவேண்டிய இடமும் அவருக்கு அத்தனை திருப்தியாக இருக்கவில்லை. கூடவே அவரும் அன்று அவளுக்கு துணையாக புறப்பட்டிருந்தார். நகரத்தி லிருந்தொரு பிரதான தெருவுக்குள் அடங்கி விட்டிருந்த சந்தில் ஒரு ஃபிளாட்டின் மூன்றாவது தளத்தில் சற்று இருட்டாக, அசிங்கமாக இருந்த அந்த இடத்தில் என்ன வியாபாரம் நடக்கிறது?

உள்ளே நுழைந்ததுமே அவருக்கு சந்தேகம். நாலைந்து பெண்கள்தான் நேர்முகத் தேர்வுக்கு வந்திருந்த னர். பெஞ்சின்மீது உட்கார்ந்து கொண்டு உள்ளே போனவளின் வரவிற்காகக் காத்திருந்தார்.

முகம் சிவந்து பதற்றத்துடன் வெளியே வந்தாள் மஞ்சுளா.

அவரைப் பார்த்ததும் அவளுக்கு அழுகையே வந்துவிட்டது.

''ஸார் இந்த வேலை வேணுமானால் உள்ளே உட்கார்ந்திருக்கிறவரோட நான்... இன்னி ராத்திரி'' - மேலே சொல்ல முடியாது குமுறினாள். கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் கன்னத்தில் உதிர்ந்து ஓடின.

சிவசாமிக்கு கட்டுக்கொள்ள முடியவில்லை. மானேஜர் என்ற பெயர் பொறித்திருந்த பலகை தொங்கிய அந்த அறைக்குள்,. அலுவலகப் பையனது தடுப்பை எதிர்த்து நுழைந்தார்.

உள்ளே கோட் சூட் அலங்காரத்தில், ஒல்லியாக குச்சி போன்ற கண்ணாடிக்கார மனிதன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

''ஏன் அய்யா வேலைக்கு என்று விளம்பரப் படுத்துவது - பிறகு நேரே இங்கே வந்தா - விஷயமே வேறே... இந்த தில்லு முல்லு காரியங்களை வேறே பக்கம் வச்சுக்கோ... ராத்திரி உன்னை எங்க வீட்டுப்பெண் சண்பகா ஹோட்டலில் சந்திக்கணுமா... அப்பத்தான் வேலை தருவியா... அப்படி இது என்ன வேலை... எனக்குத் தெரியாதா? நீ வேலை தருகிறதா விளம்பரம் பண்ணி... சதை வியாபாரத்துக்கு ஆள் பிடிக்கிறே... இந்த காரியத்துக்கு தலைமுழுக்கு போட்டுட்டு உன் ஆபீசை இழுத்து மூடலை... நாலு பேரை அழைச்சுட்டு வந்து உன் மூஞ்சியைப் பேத்துடுவேன்... படவா ராஸ்கல்'' என்று கத்தினார்.



திடுக்கிட்டுப் போன அந்த மனிதன் பேசத் தோணாது அவரைத் திகைப்புடன் பார்த்துக்கொண்டிருந்த போது மடமடவென்று மஞ்சுளாவுடன் அவர் கீழே இறங்கி தெருவுக்குள் வந்துவிட்டார்.

அந்த நிகழ்ச்சியின் பாதிப்பு வெகு நாளைக்கு மஞ்சுளாவைவிட்டு அகலவில்லை.

''ஸார் இந்த விளம்பரத்துக்கு விண்ணப்பம் பண்ணலாமா...'' என்று ஒவ்வொரு தடவையும் அவள் அவரை யோசனை கேட்கத் தொடங்கினாள். நேர்முக தேர்வுக்கு என்று கடிதம் வந்தால் அவரைக் கூட அழைத்துச் சென்றாள். பல தடவை கூட துணைக்குச் சென்றார். எல்லா இடமும் முதல் தடவை சென்றது போன்றதொரு மோசடியான அலுவலகமாக இல்லை.

இருந்தாலும் மஞ்சுளாவுக்கு வேலை கிடைக்க வில்லை. அவ்வளவுதான்.

இப்போது மஞ்சுளா... தன் வாழ்க்கையை நிர்ணயிக் கும் பெரியதொரு வேலைக்கு முயற்சி செய்கிறாள். இதில் அவளுக்கு வெற்றி கிட்டுமா...? அவர் உதவ முற்பட்டு தோல்வியடைந்து போனால்...? பலபல எண்ணியபடி படுக்கைமீது உறக்கமின்றி இரவின் பெரும் பகுதியைக் கழித்தார்.

மறுநாள் காலை எழுந்தபோது தலை கனத்தது. மஞ்சுளா கொடுத்து விட்டிருந்த பொறுப்பு நெஞ்சில் கனத்தது.

# 6

பஸ் நிலையத்திலிருந்து அந்த குடியிருப்புப் பகுதி வெகு தொலைவில் இருக்கவில்லை. கையில் குடை எடுத்துவர மறந்துவிட்டார். சுள்ளென்று மண்டையை வெய்யில் தாக்குவதை உணர்ந்து வழுக்கு கிடந்த துண்டை தலையில் போட்டுக் கொண்டார். தோளில்

அவருக்கு நாள், கிழமை, ராகுகாலம், மரணயோகம் என்பதில் எல்லாம் நம்பிக்கை இல்லை. நல்ல மரண யோகத்தில் பஸ் பிடித்து காஞ்சிபுரம் போய் சுகமாக வந்திருக்கிறார்.

நாள், கிழமைகளைப் பார்த்து சமாதானத்துடன் வெளிக்கிளம்பிய அவரது நண்பர் ஒருவரின் ஸ்கூட்டர் லாரி மீது மோதி... மண்டையை உடைத்துக் கொண்டு அரசு ஆஸ்பத்திரியில் ஒரு மாதத்திற்கு மேல் கிடந்து செத்து பிழைத்திருக்கிறார். வருகிறது வரப்போகிறது - அதற்குப் பயந்து வாழ சாத்தியப்படுமா என்பது அவரது நம்பிக்கை.

மனைவியை இழந்தபின் - அசட்டையாக மகனும் மருமகளும் நடந்து கொள்ளத் தொடங்கிய பின்னர் அந்த நம்பிக்கை தீவிரமாகத் தொடங்கிவிட்டிருந்தது. முன்போல் அவர் வருங்காலத்தைப்பற்றி குழம்புவதில்லை. ஆனால் மஞ்சுளா சொன்ன அந்த அம்மாள், பாஸ்கரனின் தாயாருக்கு ஜோசியத்தில் நம்பிக்கை என்றால் கட்டாயம் நாள், நட்சத்திரம் பார்க்கக்கூடும் என்ற காரணத்திற்காக அந்தத் திங்கட்கிழமை காலை... நல்ல சுபமுகூர்த்த நாள் என்பதை காலண்டரிலிருந்து கண்டுகொண்டு பதினொரு மணி அளவில் கிளம்பினார். வழிப் பயணத்தை... மரண யோகத்தில் கழித்துவிட்டு பன்னிரண்டு மணிக்குமேல்...



அந்த வீட்டு வாசலில் போய் நிற்க வேண்டும் என்பது அவரது திட்டம்.

காலையில் வேலைக்குப் போகுமுன்பே பாமா சொல்லி விட்டுப் போயிருந்தாள், ''என் சிநேகிதி அமெரிக்கா விலிருந்து வந்திருக்கிறாள். ஒரு சமயம் இன்னிக்கு போன் செய்வாள். எங்கே தங்கியிருக்கிறாள் - தொலைபேசி எண் என்னன்னு கேட்டு எழுதி வையுங்கோ - அவளை நம் வீட்டுக்கு ஒருநாள் விருந்துக்கு அழைக்கணும்'' என்று...

பற்களைக் கடித்துக்கொண்டார் சிவசாமி. ''எப்போ டெலிபோனில் கூப்பிடுவாள்னு தெரியுமா?''

''வெளிநாட்டில் இருந்து வந்திருக்கா - கடை கண்ணிக்கு அலைஞ்சு கொண்டிருப்பா... சமயம் கிடைக் கும்போது கூப்பிடுவா...''

சிவசாமிக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது... யாரோ ஒரு சிநேகிதி - அமெரிக்காவில் வசிப்பவள் வந்திருக்காள். தொலைபேசியில் அவள் அழைப்பாள் என்று அவர் நாள் முழுவதும் வீட்டோடு கட்டுண்டு கிடக்க வேணுமா?

''ஊர் கெட்டு கிடக்கு... நீங்க பாட்ல வீட்டை பூட்டிட்டு இங்குமங்கும் போக வேண்டாம்.''

மகன் எச்சரிக்கை செய்தான்.

ஏண்டா நான் என்ன உன் வீட்டு வேலைக்காரனா? அப்படி வீட்டிலே என்ன நவநிதிகள் வச்சிருக்கே? உன் மனைவி தன் நகைகளையெல்லாம் வங்கியில் வச்சிருக் காள். வெள்ளி சாமான்களைக் கொண்டு பிறந்த வீட்டிலே பத்திரப்படுத்தியிருக்கா - சமையலுக்கு சில ஸ்டீல் பாத்திரங்கள், சாப்பிட பீங்கான் தட்டு... இதுகளைத் தவிர

இந்த வீட்டிலே திருடன் தூக்கிட்டு போக என்ன இருக்கு? டி.வி. இத்யாதிகளை இன்ஷுர் பண்ணியிருக்கே... இப்படியெல்லாம் கேட்க வேண்டும் என்று ஆத்திரப்பட்டார். 'வேண்டாம் புறப்படும்போது அவர்களோடு சண்டையென்ன - அவர்கள் சொல்வதை சொல்லட்டும், நாம் செய்வதை செய்வோம்' என்று நினைத்து அடக்கிக் கொண்டார்.

பாமாவுக்கு மாமனார் மீது எப்பொழுதும் கொஞ்சம் சந்தேகமே... வீட்டில் இருக்கிறாரா என்று வேவு பார்க்க... அலுவலகம் போனதும் தொலைபேசியில் கூப்பிட்டாள்.

''காஸ் அடுப்பை நல்லா மூடினேனா... காட்ரிஜை பூட்டினேனான்னு சந்தேகமாக இருந்தது...''

'பொய்... பொய்... பாமா... உன்னை எனக்குத் தெரியாதா...' கூச்சலிட வேண்டும்போல கோபத்தில் கொதித்துப் போனார்.

''இரும்மா... பார்த்துட்டு வந்து சொல்றேன்...'' என்று உள்ளே சென்று அவைகளை சோதித்துவிட்டு... ''எல்லாம் சரியா இருக்கு... கவலைப்படாதே...'' என்றார்.

போனை வைத்தவுடன் அவர் வெளியே போக ஆயத்தமானார்.

மஞ்சுளா கொடுத்திருந்த முகவரி கொண்ட காகிதத் துண்டை எடுத்து பத்திரமாக தமது ஜிப்பாவில் வைத்துக் கொண்டார்.

முதல் முதலாகப் பார்க்கப் போகும் அந்த அம்மாள் முன் அழுக்கு சட்டையும், வேட்டியுமாகப் போய் நிற்க முடியாதே... சலவையிலிருந்து எடுத்த தமது ஜிப்பா... வேட்டியை அணிந்துகொண்டு...



காலைக் கடித்துத் தொலைத்த புதுசெருப்பை அணிந்து கொண்டு... தோளில் துண்டுடன் புறப்பட்டு விட்டிருந்தார்.

நுங்கம்பாக்கம் சேத்துராம் தெருவுக்கு சிறிது தூரத்தில்தான் மங்களா நகர் இருந்தது. பல ஓட்டுக் கட்டடங்களை இடித்துத் தள்ளி - குறுக்கும் நெடுக்குமாக தெருக்களைப் போட்டு உருவாக்கிவிட்டிருந்த குடியிருப்பு பகுதி அது. குண்டும் குழியுமான தெருக்களும், அழுக்குப் பிடித்த குப்பைத் தொட்டிகளுமாகக் காணப்பட்ட அந்த நகரின் தெருக்களுக்குள் மூச்சிறைக்க மேலும் கீழும் நடந்து முடிவில் பார்வதி விலாசத்தின் முன்னே வந்து நின்றார்.

பன்னிரண்டு மணியை நேரம் தாண்டிவிட்டதை அறிந்து... முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு பழுதாகிவிட்டிருந்த அந்தப் பழைய மரக்கேட்டை மெல்லத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தார்.

நாயின் அபாயம் இல்லாத வீடு. மா, எலுமிச்சை மரச்சூழலில் ஜன்னல் ஓரமாக அடர்த்தியாக வளர்ந்து மொட்டை மாடிக்குப் பரவியிருந்த நித்தியமல்லிகைக் கொடியோடு தென்பட்ட சிறிய வீடு... பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது என்று அதன் பாணி அறிவுறுத்தியது. மறு சாயத்தைக் காணாத சுவர்களில் இங்குமங்கும் காரை பெயர்ந்து கல் தெரிந்தது.

சிவப்பு சிமெண்டிலிருந்த வராந்தாவிலே கிடந்து நைந்து போன மிதியடியில் கால் செருப்புகளைத் துடைத்துக் கொண்டு அழைப்பு மணியை அழுத்தினார்.

''யார் அது?'' உரத்த குரலில் அதட்டிக் கொண்டு வந்து கதவைத் திறந்த பருமனான பெண்மணி - நடு

வயதைத் தாண்டிவிட்டவள்... முன் நெற்றி கூந்தல் முழுவதும் பட்டையாக நரைத்துப் போய்விட்டிருந்த கோலத்தில் தெரிந்தவள்தான் பார்வதி அம்மாளா?

''இது டாக்டர் பாஸ்கரன் அவர்கள் வீடுதானே... நீங்க?''

''நான் அவரோட தாயார்... நீங்க...'' சந்தேகம் ததும்பிய கண்களோடு முறைத்தாள்.

''ஒரு வரன் விஷயமா உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன்...''

அரை மனதுடன் உள்ளே அனுமதித்தாள் பார்வதி. பிரம்பால் ஆனதொரு சோபா செட் போடப்பட்டிருந்த சிறு முன்னறைக்குள் நுழைந்தார். மின்விசிறியைச் சுழலவிட்டு விட்டு எதிரே கிடந்ததொரு சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

ஜிப்பா பையிலிருந்து மஞ்சள் தடவிய காகிதத்தை எடுத்து மேஜைமேல் வைத்தார். சுவரிலே தொங்கிய தொரு புகைப்படத்தில் பட்டம் பெற்ற கோலத்திலே தொப்பியும், கறுப்பு கோட்டுமாகத் தெரிந்த பாஸ்கரனைக் கூர்ந்து பார்த்தார்.

''பரவாயில்லை... பையன் பார்க்க கச்சிதமாகத் தானிருக்கிறான்'' என்ற கணிப்புடன் பெற்றவளை நிமிர்ந்து பார்த்தார். வாட்டசாட்டமாகக் கண்களில் கடுமை யுடன் தெரிந்த பார்வதி அம்மாளை சுலபமாக சமாளிக்க முடியாது என்ற கவலை உடனடியாக ஏற்பட்டுவிட்டது.

''பெண்ணுக்கு நீங்க என்ன வேணும்?...'' பிள்ளை பின் தாய் என்ற ஆங்காரத்துடன் அதட்டினாள்.



''அவளது குடும்பத்துக்கு நெருங்கிய நண்பன்.''

தொடர்ந்து அவள் கேட்ட கேள்விக்கு தயங்காது பதிலளித்துக் கொண்டு வந்தார்.

''பொண்ணு ரொம்ப படிக்கலை... வசதியான இடமும் இல்லே...'' இழுத்தாள் பார்வதி.

இதை எதிர்பார்த்துக் கொண்டு வந்ததினால் சிவசாமி பேசவில்லை. மஞ்சுளாவின் காதல் பாதையில் இந்த அம்மா பெரிய முட்டுக்கட்டையாக இருக்கப் போகிறாள்!

''என் கணவர் இறந்து போனபோது பாஸ்கரன் பத்து வயது பையன். இந்த வீட்டையும், கொஞ்சம் பணத்தை யும் வச்சுட்டு அவர் போய்விட்டார். நான்தான் என் மகனை ரொம்ப கஷ்டப்பட்டு வளர்த்தேன். புத்திசாலிப் பிள்ளை. உபகார சம்பளத்திலே அவன் நல்லா படிச்சு முன்னுக்கு வந்தான். இப்போ மூவாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறான். இன்னும் சொந்தமாக பரிசோதனை சாலை வச்சுக் கொண்டு தொழிலைத் துவங்க ஆசை. அதுக்கு கை கொடுக்கறாப்பல ஒரு பெரிய இடமா நான் பார்த்துக்கிட்டிருக்கேன். இந்த வீட்டை பழுது பார்க்க பணம் தேவைப்படறது. அதுக்கும், மதுரையிலே வாழ்க்கைப்பட்டிருக்கிற என் மகளுக்கு கல்யாணத்தின் போது பேசியபடி செய்ய முடியாத சீர்வரிசைகளை செய்து முடிச்சு வாக்கைக் காப்பாத்திக்கவும் எனக்கு பாஸ்கரனின் வரதட்சணை தேவைப்படறது...''

''சுமார் எவ்வளவு எதிர்பார்ப்பீங்கன்னு ஒரு கோடி காட்டினால்...''

''கையிலே பதினைஞ்சாயிரமாவது கொடுக்கணும்... சீர் கணிசமா செய்யணும். முப்பது பவுன் நகையோட வைரத்தோடு... மூக்குத்திகள் இதுகள் போட்டு...

கல்யாணத்தை சிறப்பா நடத்தி வைக்கணும்... பையனுக்கு சிநேகிதர்கள் ரொம்ப உண்டு... நல்ல ஹோட்டல் ஒண்ணுலே ரிஸப்ஷன் நடத்திக் கொடுக்கணும். பிறகு ஆடிச்சீர், தீபாவளி சீர், கார்த்திகை, பொங்கல் இதுகள் இருக்கவே இருக்கு...''

பெண்ணைப் பெற்றவர்கள் எப்படி அவதிப்படுகிறார்கள் என்பது பற்றிய சங்கதி அவருக்குத் தெரியாதா? பாமாவின் பெற்றோர்கள் விஷயத்தில் அவரும், அவர் மனைவியும் கண்ணியமாக நடந்து கொண்டார்கள். வரதட்சணை வேண்டாம் என்று வாங்க மறுத்தனர். சீர் என்று வாயைத் திறக்கவில்லை. ரிஸப்ஷன் செலவில் பாதியை தாம் ஏற்றுக் கொண்டார். ஆனால் அதற்குக் கிடைத்த மருமகளோ?

பார்வதியம்மாள் வாயை மூடிக்கொண்டு மஞ்சுளாவை மருமகளாக ஏற்றுக் கொண்டால் மிகவும் சுகப்படுவாள். அத்தை... அத்தைன்னு கொஞ்சிக் குழைந்து கொண்டு மஞ்சுளா மாமியாருக்குப் பணிவிடை செய்து கொண்டு அவளது கடைசி காலத்துக்கு உறுதுணையாக இருப்பாள்.

காசு, பணம், சீர் இவைகளுக்காகப் பிள்ளையை விற்றால்... மருமகள் வந்த மூன்றாவது நாளே... மகனை இழந்துவிடப் போகிறாள்.

''ஜாதகப் பொருத்தம் இருந்தா பிறகுதான் மத்த விஷயங்கள்... அதுதான் முக்கியம்'' - பார்வதியின் குரல் அவரை விழிப்புற செய்தது.

''ஜாதகம் பொருந்தி இருந்து... மற்ற விஷயங்கள் ஒத்துவராட்டா...''



''ஜாதகப் பொருத்தம் மட்டும் போதாது. மற்ற விஷயங்களுக்கும் வரன் வீட்டவங்க ஒத்து வரணும். பெண் அழகா இருக்கணும்... பெரியவரே உங்களுக்குத் தெரியாதா... கல்யாணம்னு ஆரம்பிச்சா...எத்தனை கஷ்டங்கள் இருக்கு... எல்லாத்தையும் தாண்டிய பிறகுதானே நிச்சயமா சொல்ல முடியும். மோர் சாப்பிடுகிறீர்களா...?''

''வேண்டாம்... ஜாதகம் பொருந்தினா... இந்த முகவரிக்கு ஒரு கார்டு போடுங்க.'' தைரியமாக தம் வீட்டு முகவரியை ஒரு துண்டுக் கடிதத்தில் எழுதிக் கொடுத்து விட்டுக் கிளம்பினார்.

இந்த இடம் ஒத்து வரும் என்ற நம்பிக்கை அவருக்கில்லை. பார்வதியம்மாள் கேட்டதையெல்லாம் கொடுத்து பாஸ்கரனைத் திருமணம் செய்து கொள்ளும் பெண்... அந்த வீட்டில் அந்த அம்மாளிடம் சுகப்பட முடியாது. கொஞ்சம் ஆட்டிப் படைக்கும் மாமியாராக இருப்பாள் என்று எண்ணியபடி அவர் மெல்ல பஸ்ஸை விட்டிறங்கி வெய்யிலில் வேகு வேகு என்று நடந்து வீட்டின் வாயிற்கதவை திறந்து கொண்டு உள்ளே போனபோது... போன் அலறியது. கதவைத் தாளிட்டு விட்டு போனை எடுத்தார்.

''எங்கேயப்பா போயிருந்தீங்க...? பாமாவின் சிநேகிதி பல தடவை நம் வீட்டுக்கு போன் பண்ணி அலுத்துப் போய் என் அலுவலகத்துக்கு போன் பண்ணினா. நாளைக்கு நம்ப வீட்டுக்கு சாப்பிட வரதா சொல்லியிருக்கா... பாமா உங்களோட பேசுவா'' - ஆத்திரமாகப் படபடத்தான்.

''வீட்டிலேதான் இருந்தேன்! போன் அடிக்கலை... போன்தான் இந்த மழையினாலே கலாட்டா பண்றதே'' - பொய் ஒன்றை சொல்லிவிட்டு வைத்தார்.

பிரிட்ஜில் இருந்த முதல்நாள் சோற்றை எடுத்து குக்கருக்குள் வைத்து சூடாக்கிக் கொண்டிருந்தபோது மறுபடியும் போன் கிணுகிணுத்தது. பாமா கூப்பிட்டாள். ''நாளை சாயங்காலம் என் சிநேகிதியை சாப்பிடக் கூப்பிட்டிருக்கேன். நாளைக்கு அந்த சூப்பர் மார்க் கெட்டுக்கு லீவு. அதனாலே இன்னிக்கு சாயங்காலமே போய் கொஞ்சம் முந்திரிபருப்பு - ஏலக்காய் - சேமியா ஒரு கிலோ, சர்க்கரை இதுகளை வாங்கிக்கொண்டு வந்து வச்சுடுங்கோ... காய்கறி கடையிலே ஒரு காலி ஃப்ளவரும் பட்டாணியும் வாங்கிக்கொண்டு வந்துடுங்கோ. சமையலறை அலுமினிய டப்பாவிலே ஐம்பது ரூபாய் இருக்கு'' - உத்தரவிட்டாள்.

கணவனுடன் காரில் மாலை வீட்டுக்குத் திரும்புகிற பாமா தானே சென்று இவைகளை ஏன் வாங்கிக் கொள்ளக்கூடாது...?

விருந்தாளி வருகிறாங்க என்றாலே அவருக்கு அதிகப்படியான வேலைகள். முன்னறை தூசியை தட்டி நன்றாகப் பெருக்கச் சொல்லி வேலைக்காரியுடன் நின்று மல்லுகொடுத்து - அலமாரியில் அடுக்கி வைத்திருக்கும் பீங்கான் தட்டு கிண்ணம் - ஸ்பூன்களை எடுத்து கழுவிக் கொடுக்கச் சொல்லி வைத்து பத்திரமாக வைத்து... தோட்டத்தில் பூத்திருக்கும் மலர்களை காம்போடு கத்தரித்து எடுத்து வந்து பூச்சாடியில் தண்ணீர் விட்டு சொருகி வைத்து, நடையில் கிடக்கும் செருப்புக்களை கண்களில் படாது...அதற்காக வைக்கப்பட்டிருக்கும் அலமாரிக்குள் அடைத்து வைத்து... கை கழுவும் பீங்கான் அருகே சோப்புப் பெட்டியையும் சுத்தமான துவாலையை யும் வைத்து... பூஜை அறையில் ஒரு கத்தை ஊதுவத்தியை புகைக்க விட்டு - ஜன்னல் திரைகளைத் தட்டி இழுத்து விட்டு-



போதும்! பாமா செய்யவேண்டிய அத்தனை வேலைகளையும் அவர் செய்து கொண்டு... விருந்தாளிகள் வருவதற்கு முன் வேகமாக சாப்பிட்டுவிட்டு... வந்தவர் களுக்கு ஒரு கும்பிடு போட்டு... புன் முறுவலித்துவிட்டுத் தமது அறைக்குள் மறைந்து கொள்ளவேண்டும்.

''நாங்கள்ளாம் சின்னவங்க... என்னென்னவோ பேசுவோம், சிரிப்போம். உங்களுக்கு அந்தக் கம்பெனி சரிப்பட்டு வராது...'' பிள்ளை கடுமையாக எச்சரித்து விடுவான்.

''என் மாமனார் ரொம்ப ரிசர்வ் டைப். அவர் உண்டு அவரது புத்தகங்கள் உண்டுன்னு தம் அறையிலேயே உட்கார்ந்து விடுவார்...'' பாமா வந்தவர்களிடம் கதை விடுவது அவருக்கு நன்றாகக் கேட்கும்.

மறுநாள் அவர் பாஸ்கரனை சந்திக்க விரும்பினார்... பாமா அவருக்கு எக்கச்சக்கமான வேலை கொடுத்திருக் கிறாளே...

அன்று மாலை... வழக்கம்போல் அவர் மஞ்சுளா வுடன் காய்கறிக் கூடையை வைத்துக்கொண்டு கோவில் குளத்து படிக்கரையில் உட்கார்ந்திருந்தார்.

போன சங்கதி என்ன ஆச்சு? கேட்கத் துடித்தாள் மஞ்சுளா. துணிவில்லாமல் கூடையின் கைப்பிடியை நெருடிக் கொண்டிருந்தாள்.

நீண்டதொரு பெருமூச்சுடன் அவர் அந்தப் பெண்ணைப் பார்த்தார்.

பார்க்க லட்சணமான - பதுவிசான - ஓரளவு படித் திருக்கும், இந்தப் பெண்ணைத் தன் மருமகளாக ஏற்றுக் கொள்ள பார்வதி கொடுத்து வைத்திருக்கவேண்டும்.

கிரிதரனுக்கு ஒரு தம்பி இருந்திருந்தால்... கண்ணை மூடிக்கொண்டு மஞ்சுளாவைத் தம் மகனுக்கு முடித்து விட்டிருப்பார். சின்ன மகன் வீட்டில் சிவனே என்று விழுந்து கிடப்பார். இப்படி பாமாவிடம் மொத்தடிபட்டுக் கொண்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தமே இராது.

விதி யாரை விட்டது?

''இன்னிக்கு அந்தப் பார்வதி அம்மாளை போய்ப் பார்த்தேன்; பிடி கொடுத்துப் பேசற ஆளாக இல்லை.

''பெரிய தொழிலதிபர் வீட்டு வரன்களின் ஜாதகம் ஏராளம் வந்து குவிஞ்சிருக்காம். பையனுக்கு கார் வாங்கித் தந்து பெண்ணைக் கொடுக்கிறேன்னு ஒற்றைக் காலில் ஒருவர் நிற்கிறாராம்.

''தனியா ஒரு பரிசோதனைச் சாலை கட்டிக் கொடுத்து கை தூக்கிவிட வேறு ஒருவர் தயாரா இருக்கிறாராம். இந்த இடங்களில் எல்லாம் ஜாதகம் பொருந்தாததால் ஒதுக்கிட்டாங்களாம்.''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் மஞ்சுளா. அவள் நெஞ்சு படபடவென்று துடித்தது.

''உங்களுக்கு அவங்க என்ன பதில் சொன்னாங்க?''

''அவங்க கேட்கிற வரதட்சணை இத்யாதிகளை உங்கப்பாவால் சமாளிக்கவே முடியாது. பரிசு சீட்டிலே திடீர்னு பல லட்சங்கள் விழுந்தால் ஒழிய இந்த பாஸ்கரனை நீ அத்தனை சுலபமா கல்யாணம் செய்துக்க முடியாது.''

முழங்கை மீது தலையைக் கவிழ்த்துக் கொண்ட மஞ்சுளா லேசாக விம்மத் தொடங்கினாள்.



''அசட்டுப் பெண்ணே - வானத்து நிலாவைத் கையில் பிடிச்சுத் தான்னு அழற குழந்தையைப் போல இருக்கு உன் செய்கை.''

''இதுக்கு அழுது ஒண்ணும் பயன் இல்லை. அந்த பாஸ்கரனைப் போய் பார்த்துக் கேட்கிறேன். அவன் அம்மா தலைப்பில் ஒளிஞ்சுக்கிற பையனா இருந்தா நீ உடனடியா அவனை மறந்துடறது நல்லது. நான் சொல்றதைக் கேட்கிறவனா இருந்தா நீங்க ரெண்டு பேரும் சுகப்படுவீங்க...''

''நீங்க என்ன சொல்லப் போறீங்க...''

''இப்பவே அதை நான் சொல்ல முடியாது. பாஸ்கரனைப் பார்த்துப் பேசிட்டுச் சொல்றேன் மஞ்சுளா! கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். நீ அவசரப் படக்கூடாது. கொஞ்சம் பொறுமையா இருக்கணும்'' என்று உபதேசித்தார்.

விருந்துக்கு மறுநாள் காலை - புயலடித்து ஓய்ந்து விட்ட தோற்றத்தில் வீடு அலங்கோலமாகக் கிடந்தது.

வந்த விருந்தாளியின் கணவன் சங்கிலித் தொடராக புகைபிடித்து எரிந்துபோன சிகரெட் துண்டங்களை முன்னறையிலிருந்த அத்தனை கண்ணாடி கிண்ணங்களிலும் குவித்துவிட்டுப் போயிருந்தான்.

சமையலறை மேடையில் தேய்த்துக் கழுவ இருந்த பாத்திரங்களைப் பார்த்த வேலைக்காரி அவர் காதுபட முணுமுணுத்தாள்.

எல்லாவற்றையும் அவள் ஒழுங்கு செய்வதை மேற்பார்வையிட்டு ஒரு வழியாக அவர் கிளம்புவதற்குள்

இரவு விருந்தின்போது தயாரித்த மீதமிருந்த பிரியாணியை கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுத்தான் புறப் பட்டிருந்தார்.

சங்கரா பரிசோதனைச்சாலை ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் ஒரு தெருவின் முனையில்தான் இருந்தது. அங்கே முன்பு இருந்ததொரு பழைய வீடுதான் இப்போது ஒரு புதுக் கட்டடமாக மாறிவிட்டிருந்தது.

பரிசோதனைச் சாலைக்குத் தேவையான வகையில் அது மிகவும் அழகாகக் கட்டப்பட்டிருந்தது. நகரத்தின் பல பாகத்திலும் இப்படி பாலி கிளினிக் பரிசோதனைச் சாலைகள், ஸ்கானிங் சென்டர்கள் என்று மக்கள் பெருக்கத்தைப் போலவே டாக்டர்களும் சிகிச்சைக்கு வேண்டிய மருத்துவமனைகளும் பெருகி வருவதைப் பார்த்தால் இன்னும் சில நாட்களில் கட்ட இடமின்றி இவைகள் நடமாடும் நிலையங்களாகிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வாசலில் வரும் இஸ்திரிகாரரி டம் துணிகளை பெட்டி போட்டுக் கொள்வது போல... வாசலில் வரும் காய்கறிகாரர்களிடம் தேவைப்பட்டதை வாங்கிக் கொள்வதைப் போல வாசலிலேயே வைத்திய வசதிகளையும் பெற்று விடலாம் அல்லவா?

சன்மைகா மேஜையின் பின்னால் முல்லை சிரிப்புடன் நின்ற ரிஸப்ஷனிஸ்ட்டிடம் கேட்டார்:

''டாக்டர் பாஸ்கரன் அவர்களைப் பார்க்கணும்.''

''சந்திக்க ஏற்பாடு முன்னதாக செய்து கொண்டிருக் கீங்களா''என்று கேள்விகள் கேட்பார்கள் என்பது அவருக்குத் தெரியும்.

பாமா தொலைபேசியை எப்பொழுதும் பூட்டி வைத் திருப்பாள். அக்கம்பக்கத்தாரின் தொந்தரவு இருக்கக் கூடாது என்பதற்காக பூட்டி வைப்பதாக சாக்கு. அக்கம் பக்கத்தார்கள்தான் திரும்பிப் பார்க்காத தனிப்பட்ட பிறவிகளாச்சே! வயசான மாமனார் பொழுது போக வில்லை என்று யாருடனாவது பேசிக் கொண்டு இருப்பார் என்ற சந்தேகம். தொலைபேசிச் செலவை தடுக்க அவள் மேற்கொள்ளும் உபாயம்.



மருந்துக்கடை தொலைபேசியை உபயோகித்து, பாஸ்கரனை அவர் முன்னதாகவே தொடர்பு கொண்டிருந் தார்.

''என்னைப் பார்த்துப் பேசணுமா... நீங்க யார்'' வியப்புடன் அவன் கேட்டான்.

''நேரில் சொல்கிறேன். உங்க தாயாரை முந்தாநாள் பார்த்தேன்; இப்போ வந்தால் சௌகரியமாக இருக்குமா?'' பூடகமாகப் பேசினார்.

''ஒரு மணியிலிருந்து இரண்டு மணிவரை பகல் உணவு நேரம். அப்போது ஓய்வாக இருப்பேன்... வாருங்கள்'' என்றான் அவன். கம்பீரமாக, கனிவாக ஒலித்த அவன் குரல் அவருக்குப் பிடித்துப் போனது.

ரிஸப்ஷனிஸ்ட் இண்டர்காமில் கேட்டுத் தெரிந்து கொண்டபின் அவருக்கு வழிகாட்டினாள். வராந்தாவைக் கடந்து உள்ளே ஒட்டிய தாழ்வாரத்தின் கடைசியாகத் தெரிந்ததொரு அறைக்கு முன்னால் சென்று மெல்ல கதவைத் தட்டினார்.

'உள்ளே வரலாம்' - கம்பீரமான குரல் கேட்டது.

கதவைத் தள்ளித் திறந்து கொண்டு நுழைந்தவர் சுழல் நாற்காலியில் மேஜைமேல் பிரித்துப்போட்டிருந்த மருத்துவப் புத்தகமொன்றில் ஊன்றிப் போயிருந்தவனைப்

பார்த்தார். திடுக்கிட்டு நிமிர்ந்த அவனது களை பொருந்திய முகம் அவருக்கு ரொம்பவே பிடித்துப் போனது.

பரவாயில்லை மஞ்சுளா, கண்ணுக்கினியவனாகத் தான் தேர்ந்தெடுத்திருக்கிறாள். கருத்துக்கு இனியவனா என்பதுதான் அடுத்த கேள்வி.

பாஸ்கரனிடம் மரியாதை இருந்தது. எழுந்து கை கூப்பி வணங்கினான். உட்காருங்கோ என்று ஒரு ஆசனத்தைச் சுட்டிக் காட்டினான்.

''முந்தா நேத்து உங்க தாயாரைப் பார்த்து மஞ்சுளா வின் ஜாதகத்தைக் கொடுத்துட்டு வந்திருந்தேன். பொருத்தம் பார்த்துட்டுக் கடிதம் போடறதாக உங்கம்மா சொன்னாங்க... அவங்க எதிர்பார்க்கிற அளவுக்கு மஞ்சுளாவின் அப்பாவால் எதுவும் செய்ய முடியாது.''

''நீங்க...?'' என்றான் தயக்கத்துடன் பாஸ்கரன்.

''நான் அவங்க குடும்பத்தின் நெருங்கிய நண்பன். என்னைப்பற்றி மஞ்சுளா சொல்லி இருப்பாளே...''

''மிஸ்டர் சிவசாமி ஸாரா?... சொல்லியிருக்கிறாள். நீங்களே வரப்போகிறீகன்னு எதிர்பாக்கலை.''

''மஞ்சுளா அப்பா பாரிசத்தாலே நோயாளியா இருப்பதாலே நண்பன் என்கிற முறையிலே நான் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கேன். உங்க தாயார் முடிவு ஒரு பக்கம் இருக்கட்டும். உங்கள் முடிவு என்னன்னு தெரிஞ்சா...''

முகம் சிவந்து போனான் பாஸ்கரன். ''நான் மஞ்சுளாவை ரொம்பவும் விரும்புகிறேன். கல்யாணம் செய்துக்க ஆசைப்படறேன்.''



''அதெல்லாம் சரிதான். உங்கள் விருப்பத்தை செயலாக்க வேணுமே... அதைப் பற்றி உங்க திட்டம்.''

உதட்டைக் கடித்துக் கொண்டான் பாஸ்கரன். அவனது குழப்பத்தைப் புரிந்து கொண்டார் சிவசாமி. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்றால் நடைமுறையில் செயலாகாது.

''உங்கள் தாய் உங்களை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவரச் சிரமப்பட்டாங்க ஒத்துக்கிறேன். அதே சமயம் உங்கள் உணர்வுகள் - வருங்கால வாழ்க்கை இவைகளை அவங்க இஷ்டத்துக்கு வளைக்க விரும்பக்கூடாது. விற்று முதலாக்க முயலுவது தவறு... யோசிச்சி பார்த்தீங்களா...''

''சில நாட்களா எனக்கு இதே சிந்தனைதான் - முடிவுதான் தெரியலை.''

''ஒண்ணு நீங்க உங்க அம்மா சொற்படி நடக்கும் பிள்ளையாக இருந்தால் இந்தக் காதலை உதறிவிட வேண்டும்... மஞ்சுளாவை மறக்க முடியாதுன்னா உங்க அம்மா பேச்சை எதிர்க்கணும்... நல்லா யோசிச்சுட்டு... இந்தத் தொலைபேசி எண்ணுக்கு இரண்டு நாளைக்குப் பிறகு என்னைக் கூப்பிடுங்கோ. பிறகு நான் தக்க யோசனையை சொல்லித்தரேன்'' - கூறிவிட்டு மேஜை மேலிருந்த காகிதத்தின்மீது தொலைபேசி எண்ணை அவசரமாகக் குறித்துவிட்டுக் கிளம்பினார்.

அவருக்கு இந்தச் சவால் ஒரு பெரும் வேடிக்கையான விளையாட்டாக இருந்தது.

இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் தற்காலத்து இளைஞர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை அறிய இது பெரும் வாய்ப்பு...

பாஸ்கரன் என்ன செய்யப்போகிறான்...? அம்மாவின் பிள்ளையாக இருக்கப் போகிறானா? அல்லது மஞ்சுளாவின் காதலனாக... துணிவுடன் அவர் சொல்வதைக் கேட்டு... நடந்து கொள்ளப் போகிறானா? அந்த இரண்டு நாட்களும் அவருக்கு இரண்டு வருஷங்கள் போல நீண்டு... கனத்தன.

## 7

ஸ்கூட்டர் சத்தம் கேட்டதும் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார் சிவசாமி. இரண்டு தினங்கள் நன்றாக யோசித்துவிட்டுச் சொல்லுங்கள் என்று அவகாசம் கொடுத்துவிட்டு வந்திருந்தார். ஆனால் பாஸ்கரன் உச்சிப் பொழுது வெய்யிலில் அவரைத் தேடிக்கொண்டு அடுத்த நாளே வந்து விட்டிருக்கிறானே? அப்படியென்றால்?

கேட்டைத் திறந்து கொண்டு மெல்ல சுற்றும் முற்றும் பார்த்தபடி தயக்கமாக வந்த பாஸ்கரன் முகத்தை கைகுட்டையால் துடைத்தபடி வராந்தாவைச் சமீபிக்கும் வரை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார். அவரது வெற்றியை அணு அணுவாக அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையில் அவர் நின்ற இடத்தைவிட்டு நகரவில்லை. அழைப்பு மணியை இருதரம் அவன் அமுக்கிய பின்னரே தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு மெல்ல வந்து கதவைத் திறந்தார்.

''ஓ! நீங்களா... வாங்கோ... நல்ல வெய்யிலில் புறப்பட்டு வந்திருக்கீங்க'' என்றபடி அவனை முன்னறை சோபாவிலே உட்கார வைத்துவிட்டு மின்விசிறியை சுழலவிட்டார். ''தாகத்துக்கு?'' என்று உபசாரமாகக் கேட்டார். ''கொஞ்சம் குளிர் ஜலம் மட்டும் போதும்'' என்றான் அவன்.



இரண்டு டம்ளரில் குளிர் நீரை நிறைத்துக்கொண்டு வந்து மேஜைமேல் வைத்துவிட்டு எதிரே கிடந்த சோபாவில் சாய்ந்து கொண்டார்.

மேடைமீது பலமாக குரல் எழுப்பி... பல பிரமுகர்கள் பல ஆண்டு காலமாக வெற்றியைக் காண முடியாத ஒரு காரியத்தை தாம் தனியே சாதித்துவிட்டதை எண்ணி அவருக்கு உள்ளூரப் பெருமை.

''நேற்று இரவு அம்மாவைக் கேட்டேன். நீங்க வந்துட்டுப் போனதைச் சொன்னாங்க. ஜாதகப் பொருத்தத்தை இன்னும் பார்க்கலையாம்.''

''அப்படியா? மேற்கொண்டு நீங்க என்ன செய்வதாக உத்தேசம்?''

''மனப்பொருத்தம் ஏற்பட்டிருக்கும்போது ஜாதகம் பத்தி கவலைப்படுவானேன் என்று அம்மாவிடம் கேட்டேன். வரதக்ஷணை பெயராத இடம். நமக்கு ஒத்து வராதுன்னு சொல்லிவிட்டாங்க. அம்மாவுக்கும் எனக்கும் பலத்த விவாதம் ஏற்பட்டது. மஞ்சுளாவை மருமகளாக ஏற்றுக்கொள்ள அவங்களுக்கு விருப்பமே இல்லை...''

''உங்க அபிப்ராயம்தானே இதில் முக்கியம்.''

''வாழப் போறவன் நான். என் மனவிருப்பப்படி மஞ்சுளாவை நான் மனைவியாக ஏத்துக்கிறதுன்னு முடிவு செஞ்சுட்டேன்.''

''அம்மாகிட்டே உங்க திட்டத்தை சொன்னீங்களா?''

''இப்போ சொன்னா வீணான கலவரம் ஏற்படும். அதனாலே நான் எல்லாத்தையும் முடிச்சுக் கொண்டு சொல்வதாக இருக்கேன்'' என்றவுடன் வியப்புடன் விழித்தார் சிவசாமி.

''நான் மஞ்சுளாவை முதலில் பதிவுத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். அதுக்கு நீங்கள் ஒரு சாட்சியாக இருந்து கையெழுத்திட்டு எங்களை ஆசீர் வதிக்கணும்.'' தாங்க முடியாத சந்தோஷத்தில் தவித்துப் போனார் சிவசாமி. மகனும் மருமகளும் அவரை என்னவோ வறட்டுக் கிழவர் என்றல்லவா கணிப்பு செய்கிறார்கள்? இந்த வறட்டுக் கிழமே எப்பேர்ப்பட்ட காரியத்தை செய்ய முடித்திருக்கிறது என்பதை விரைவில் தெரிந்து கொள்வார்கள். அப்போது மிகவும் அதிசயப் படுவார்கள்.

''அதுக்கென்ன... சாட்சி கையெழுத்துப் போட்டு மனப்பூர்வமா ஆசிகள் செய்ய நான் எப்பவும் தயாரா இருப்பேன்.''

''பதிவுத் திருமணத்துக்குப் பிறகு நாங்க ரெண்டு பேரும் உங்களைப்போல நண்பர்கள் உதவியோடு மஞ்சுளாவின் பெற்றோர்களோடு திருநீர் மலையிலோ, வடபழனியிலே எளிய முறையில் ஒரு சம்பிரதாயக் கல்யாணம் செய்துக்கிறதாக உத்தேசம்.''

''அப்படியே செய்துடலாம். ஆனால் பாவம் மஞ்சுளாவின் அப்பாவுக்கு இப்போதிருக்கும் நிலையில் எந்தவிதமான செலவுகளையும் தாங்கிக்க சாத்யப்படுமா என்பதுதான் சந்தேகம்.''

''அதைப்பற்றி அவங்க கவலைப்பட வேண்டாம். இந்தக் கல்யாணம் பற்றிய சகல செலவுகளும் என்னுடையது, சரிதானே.''

தாங்க முடியாத மகிழ்ச்சியில் சிவசாமி எழுந்து பாஸ்கரனின் கரங்களைப் பற்றிக் குலுக்கினார்.



''உண்மையில் நீங்கள் மஞ்சுளாவை ரொம்பவே நேசிக்கிறீங்க. உங்களது துணிவான முடிவை வரவேற் கிறேன், பாராட்டறேன். நீங்க மஞ்சுளா பொருட்டு பெரிய தியாகம் செய்யத் துணிஞ்சிருக்கீங்கன்னு நினைக்கும் போது...''

''காதலுக்காக ஒரு சாம்ராஜ்யத்தையே துறந்த மாமன்னரின் கதையைக் கேட்டிருக்கிறோமே! அம்மா ரொம்ப மனஸ்தாபப்பட்டுக்குவாங்க. அதைக் காலப் போக்கில் சமாளித்து விடலாம் என்கிற நம்பிக்கை. இன்று மாலை மஞ்சுளாவை சந்திக்கும்போது நான் என் முடிவை சொல்லிடறேன். பிறகு ஒரு நல்ல நாளில் அவ்ளது குடும்பத்தினரை சந்தித்து மற்றவைகளைப்பற்றிப் பேசி முடித்து விடுகிறேன். கல்யாணத்திற்கு எப்படியும் ஒரு மாதத்திற்கு மேல் பிடிக்கும்.''

''அதுவரை அடிக்கடி மஞ்சுளாவை கடற்கரை, கடைத்தெரு முதலிய இடங்களில் சந்திக்காமல், உங்கள் திட்டம் நாலு பேருக்குத் தெரியாமல் ரகசியமாக வச்சிருப்பது நல்லதல்லவா?''

''அதுவரை, நீங்கதான் எங்க ரெண்டு பேருக்கும் இடையே தூதுபோக வேண்டியிருக்கும்.''

''இந்த நல்ல காரியத்தைவிட இந்தக் கிழவனுக்கு வேற வேலை?'' வாய்விட்டு உரக்கச் சிரித்தார். பாஸ் கரனும் மகிழ்ச்சியுடன் சிரிப்பில் ஒன்றிப் போனான்.

அன்று வேலையிலிருந்து திரும்பிய பாமா குளித்து மாற்றுடை அணிந்துகொண்டு முன்னறைப் பக்கம் வந்தவள் தரையில் விரித்திருந்த கம்பளத்தை உற்றுப் பார்த்தாள்.

அதென்ன காலடி? யாரோ ஈரமண் மேல் நடந்து விட்டு பாதணியைக் கழற்றாது முன்னறையில் வந்து உட்கார்ந்து விட்டிருக்கிறார்களே?

இரவு சாப்பாட்டின்போது கேட்டுவிட்டாள்.

''நம் வீட்டுக்கு யாராவது வந்தாங்களா? முன்னறையில் ஒரே ஈர மண். வேலைக்காரி காலையிலே நன்றாகத் தட்டிப் போட்டுவிட்டுப் போன கம்பளத்தில் காலடிபட்டு அசிங்கமா இருக்கே.''

கையில் எடுத்த குழம்பு சோற்றை வாயில் திணித்துக் கொண்டு விழுங்கினார். வினாடியில் மனத்திற்குள்ளே ஒரு கற்பனையைப் புனைந்து கொண்டார்.

''அப்படியா? என்னைப் பார்த்து சொல்லிவிட்டுப் போக வந்தான் என் சினேகிதன் ரமணியின் மகன் கவுதம். அவனுக்கு அரபு நாட்டிலே வேலை கிடைச்சிருக்காம். 'நமஸ்காரம் பண்றேன் ஆசீர்வாதம் பண்ணுங்கோ'ன்னு வந்தான்.''

''காலில் ஷூவோடு முன்னறைக்குள்ளே வந்து... ... அப்படியேவா விழுந்து கும்பிட்டான்?''

''இந்தக் காலத்து பசங்களுக்கு அந்த பழக்க வழக்கமெல்லாம் தெரியாது, நானும் கவனிக்கலை.''

''சிநேகிதன் மகன் நம்மை ஒரு பொருட்டா வந்து பார்த்துட்டு போறானேன்னு உச்சி குளிர்ந்து போயிட்டீங்களா அப்பா...'' எரிச்சலோடு மகன் கேட்டதை அவர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

''இனிமே யாராவது உங்களைத் தேடிகிட்டு வந்தா வாசல் வராண்டாவிலேயே வச்சு பேசுங்கோ...'' மகன்



கடுமையான குரலில் உத்தரவிட்டான். ''காலம் கெட்டுக் கிடக்கு. கண்டவங்களை உள்ளே விட்டா என்ன நடக்கும்? திடீர்னு ஒரு பிச்சுவாவை நீட்டினா நீங்க என்ன பண்ணுவீங்க?''

'நல்லா குத்திக் கொன்னுட்டுப் போ! தினமும் என் மகனும் மருமகளும் வார்த்தையால் குத்திக் கொஞ்சம் கொஞ்சமாக சாக அடிக்கிறாங்க. நீ நல்லா ஒரே குத்தில் என்னை மாய்ச்சுட்டுப் போடான்னு சொல்வேன்.' தமக்குள்ளே குமுறினார் சிவசாமி. மவுனமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

திடீரென்று நசநசவென்று ஒரு மழை.

வானம் நினைத்தபோது தூறிவிட்டுத் தெருவை சேறாக்கி துணிகளை காயவிடாது சதி செய்து கொண்டிருந்தது.

இது மாதிரியான சீதோஷ்ண நிலை சிவசாமிக்கு ஒத்துக் கொள்வதில்லை. மீனாட்சி உயிருடன் இருந்த காலத்தில் வானத்திலே கொஞ்சம் கருமேகம் தென்பட்டு... காற்று குளிராக வீசத் தொடங்கி விட்டால்கூடப் போதும், ''சீரக ரசம் வச்சு அப்பளத்தை சுட்டுப்போடு. முட்டி யெல்லாம் நோவுது'' என்று உத்தரவிடுவார்.

புளு காய்ச்சலுக்கு டாக்டர்களின் மருந்தைவிட சீரக ரசம்தான் சிறந்தது என்ற நம்பிக்கை.

பாமாவுக்கு நின்று நிதானமாக விதவிதமாக சமைக்கப் பொழுதிருந்ததில்லை. சிரத்தையும் கிடையாது. நாக்கு ருசிக்கு தேவைப்பட்ட உணவுகளை அவளும் கணவனும் ஹோட்டலில் தேடிக் கொண்டனர்.

மாங்காய் வத்தல் குழம்பையும், சுண்டைக்காய் துவையலையும் அவள் அடையாறிலிருந்த தன் அம்மா வீட்டிற்குச் சென்று சாப்பிட்டு திருப்தியடைந்தாள்.

இரண்டு நாட்களாக அவருக்கு லேசான காய்ச்சல். முட்டிகளில் நோவு. காலையில் அடுப்படியில் மும்முரமாக இருந்த மருமகளிடம் வந்து நின்றார்.

''பாமா! நாக்கு ஒரே கசப்பா இருக்கு. கொஞ்சம் சீரக ரசம் வச்சுத் தரியாம்மா?''

அலுவலகத்துக்கு நேரமாகிவிட்டது என்ற ஆத்திரம். சமையலுக்கு ஆள்போடாது கருமித்தனம் செய்கிறான் என்று உள்ளூர எரிச்சல். தினமும் காலையில் எழுந்ததும் பேனாவைப் பிடிக்குமுன் கரண்டியைப் பிடிக்க வேண்டிய பொறுப்பை சுமக்கிறோமே என்ற கோபம்.

''இப்போ யார் அம்மியைப் பிடிச்சுகிட்டு நிக்க முடியும். பருப்பும், சீரகமும், மிளகும் வச்சு அரைக்கணுமே'' சீறினாள்.

இந்தத் தடவை மட்டுமல்ல. அவர் வாய்க்கு ருசியா சாப்பிட எது கேட்டாலும் அவள் செய்து தர மறுத்தாள். ''புடலங்காய் துவட்டல்தான் எனக்குப் பிடிக்கும். உங்க மகனுக்கு கூட்டுப் பிடிக்காது. உங்களுக்கு பொரிச்ச கூட்டுதான் பிடிக்கும். ஆளுக்கு ஒரு தினுசு சமைச்சுப் போட நான் சமையற்காரியில்லே. இந்தக் காலத்து சமையற்காரிகூட தனக்கு முடிஞ்சதைத்தான் சமைச்சுப் போடுவா. இது வேணும், அது வேணும்னா கரண்டியைக் கீழே வச்சுட்டு போயிடுவாள்'' - கூச்சல் போட்டிருக்கிறாள் முன் ஒரு தடவை.



கேட்டதெல்லாம் செய்து போட்டாள் மீனாட்சி.

அப்போது அவள் அருமையை அவர் உணரவில்லை. மருமகளிடம் வார்த்தைகளை வாங்கிக் கட்டிக் கொள்ளும்போதுதான் மீனாட்சியின் நினைவு நெஞ்சை நெருக்கமாகக் கவ்வியது.

மஞ்சுளா விஷயத்தில் வெற்றியடைந்து விட்டதில் ஏற்பட்ட ஆனந்தம் கிழவருக்குத் துணிச்சலை உண்டாக்கி விட்டிருந்தது. புழுவைப் போல பிள்ளை, மருமகள் இருவரின் காலடியில் மிதிபட்டுக் கொண்டு இருக்கக் கூடாது. புழுகூட தன்னை மிதிப்பவனைப் பார்த்து தலையைத் தூக்கி எதிர்ப்புத் தெரிவிக்கிறது. அப்படியிருக்கையில் அவர்... இனி எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்... பேசாது எதிர்ப்புகளை செயலில் காட்ட வேண்டும்.

தமக்குள்ளே கறுவியபடி அவர் வேலைக்காரியைக் கூப்பிட்டார். ''வெத்திலை வாங்க காசில்லைன்னு முணுமுணுத்தியே... இந்தா வச்சுக்கோ... என் பெயரைச் சொல்லி கும்பகோணம் வெத்தலையா பார்த்து வாங்கிப் போட்டுக்கோ...'' பர்சிலிருந்து இரண்டு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார்.

முகமெல்லாம் சிரிப்பாக மலர்ந்து போக... வேலைக்காரி சுப்பம்மாள் தலையை சொறிந்து கொண்டு நின்றாள்.

''உனக்குத்தான் ஐயா இந்த வீட்டிலே ஈவு இரக்கம் இருக்கு... அம்மாகிட்ட எத்தனை கேட்டாலும் ஒரு காதுகுத்த ஊசியைக்கூட தரமாட்டாங்க... ரொம்பக் கண்டிப்பு...''

''அதை விட்டுத் தள்ளு. உனக்கு சீரக ரசம் வைக்கத் தெரியுமா? தெரியாட்டா இரு... பக்கத்துத் தெருவிலே இருக்கிற என் நண்பன் வீட்டுக்கு ஒரு சீட்டு எழுதித் தரேன்... கொண்டு கொடு... அவங்க செய்து கொடுக் கிறதை கொஞ்சம் இருந்து வாங்கிட்டு வந்து கொடுத் திட்டுப் போ...''

மஞ்சுளாவுக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார். சிறிதுநேரத்தில் வேலைக்காரி திரும்பி வந்துவிட்டாள்.

''அந்த அம்மாவே சித்த பொறுத்து தான் செய்ததை எடுத்துட்டு வரேன்னு சொல்லியிருக்கு... அதனாலே நான் வீட்டுக்குப்போறேன் அய்யா...'' குழைந்தாள் வேலைக்காரி.

பொழுது உச்சியை அடையுமுன் வாயிற்கதவு தட்டப்பட்டது.

வெளியே ஒரு ஸ்டீல் டிபன்செட்டை பிடித்தபடி மஞ்சுளா நின்று கொண்டிருந்தாள். கிழவருக்கு ஒரே சந்தோஷம்.

''வாம்மா வெறும் சீரக ரசத்தோட வந்திருக்கியா? வெகு சீக்கிரம் கல்யாணமாகப் போகிறது. அந்த சந்தோஷத்தை பங்கிட்டுக் கொள்ள ஒரு இனிப்பு தேவையில்லையா?''

''நீங்க இப்படி கேட்பீங்கன்னு தெரிஞ்சு, கொஞ்சம் பாயசத்தோட வந்திருக்கேன்...'' என்று கூறியபடி உள்ளே வந்தாள் சுவாதீனமாக...

சாப்பாட்டு அறை மேஜை மீது டிபன் செட்டை வைத்துவிட்டு கையோடு கொண்டு வந்த வாழை இலையை விரித்துப் போட்டாள்.



''சாப்பாடு ஆறிப் போகுமுன் சாப்பிடுங்கோ. பிறகு பேசலாம்...'' சிரித்தாள்.

சமையலறை அலமாரியிலிருந்து இரண்டு ஸ்டீல் டம்ளர்களை எடுத்துக்கொண்டு வந்தார். இலைக்குமுன் அவர் உட்கார... அவள் தன் கையால் மிகவும் அன்புடன் பரிமாறினாள்.

சூடான சாதத்தின் மீது... சுடசுட இருந்த ரசத்தை ஊற்றி... ஒரு பக்கம் வைத்திருந்த சிறு கிண்ணத்திலிருந்த நெய்யை வார்த்தார். ''தொட்டுக் கொள்ள நாரத்தங்காய் ஊறுகாய் இருக்கு...'' என்றபோது கிழவர் சப்புக் கொட்டினார்.

''என்ன வாசனை. மூக்கைத் தூக்குது...'' என்றபடி சாதத்தைக் கலந்து கொண்டு திருப்தியாக உண்டு முடித் தார். மீதமிருந்த ரசத்தை டம்ளரில் ஊற்றிக் கொண்டு ரசித்து சாப்பிட்டார். பாயாசத்தையும் சிறிது ருசிபார்த்து விட்டு, பிறகு சாப்பிடலாம் என்று அடுப்பு மேடையருகே ஒரு பக்கம் பத்திரமாக வைத்தார்.

பிறகு... சாப்பாட்டறையில் வந்து உட்கார்ந்து கொண்டு கொஞ்ச நேரம் வேடிக்கையாகப் பேசத் தொடங்கினார்.

''புடவைக்கடை, நகைக்கடை இதுகளுக்கெல்லாம் படையெடுத்திருப்பியே...?''

மஞ்சுளா கன்னம் சிவந்து போனாள். ''மாத முதல் வாக்கிலே அவருக்கு சம்பளம் வரும். அப்போ புடவை வாங்கப் புறப்படலாம்னு சொன்னார். ஒரே ஒரு பட்டுச்சேலைதான் வாங்குகிறதுன்னு முடிவு...''

''பரவாயில்லை... ஆரம்பத்திலேயே செட்டும் கட்டு மாக வாழ்க்கையைத் துவங்கத் தெரிஞ்சுகிட்டிருக்கே...'' அவளை வேடிக்கை செய்து அகமகிழ்ந்தார்.

மஞ்சுளா புறப்பட்டுச் சென்றதும் கதவைத் தாளிட்டுக் கொண்டு வந்த சிவசாமி திருப்தியாக உண்ட மயக்கத்தில் உடம்பு வலியெல்லாம் மறைந்து போன பிரமையில் நன்றாக உறங்கிவிட்டார்.

அவர் எழுந்து முகத்தைக் கழுவிக் கொண்டு பால்பொட்டலம் வாங்கி வரக் கிளம்பினபோது எதிர் பாராத விதமாக மருமகள் அலுவலகத்தில் இருந்து முன்னதாகவே வந்துவிட்டாள். ''சீக்கிரம் பாலை வாங்கிக் கொண்டு வாங்க... தலைவலி மண்டையைப் பிளக்கிறது. அரைநாள் லீவு போட்டுவிட்டு வந்திருக்கிறேன்.'' அலுப் புடன் கூறியபடி உள்ளே நுழைந்தவள் தோள் பையை மேஜைமீது விசிறிப் போட்டுவிட்டு படுக்கையில் சாய்ந்து கொண்டாள். பாலைக் காய்ச்சி வைத்துவிட்டுக் குரல் கொடுத்தபோதுதான் பாமா எழுந்து உள்ளே வந்தாள்.

திடீர் காப்பித் தூளை எடுக்க அலமாரியைத் திறந்தவள் கண்களில் அந்த டம்ளர்கள் தென்பட்டன. எடுத்துப் பார்த்தாள். ஒன்றில் பாயசம். மற்றொன்றில் சீரக ரசம். தாடை இறுகிப் போனாள் கோபத்தில்.

''இதெல்லாம் எங்கிருந்து வந்தது?'' எரிச்சலை அடக்கிக் கொண்டு கேட்டாள்.

கொஞ்ச நேரம் கழித்துச் சாப்பிடலாம் என்று பத்திரமாக எடுத்து வைத்துவிட்டு தூங்கிப் போய்விட்டார், சிவசாமி. பாமா வீட்டுக்கு சீக்கிரம் திரும்புவாள் என்று யார் எதிர்பார்த்தது? கோழையாக அவளுக்குப் பயந்து கொண்டு முனகக்கூடாது. பளிச்சென்று சொல்ல வேண்டும். தீர்மானத்துடன் தொண்டையைச் செருமிக் கொண்டார். ''எனக்கு வேண்டியதை நான் என் சிநேகிதர் மகளைக் கொண்டு தயாரிக்கச் சொல்லிக் கடிதம் கொடுத்தனுப்பினேன். கொஞ்ச நேரத்தில் அந்தப் பெண் கொண்டுவந்து கொடுத்துட்டுப் போனாள். தப்பா?''



''என்னை அவமானப்படுத்தணும்னு தானே அக்கம் பக்கத்தவங்களைக் கேட்டு அனுப்பியிருக்கீங்க.''

''இதிலே தப்பு என்ன இருக்கு? உங்களுக்குத் தேவைப்பட்டதை நீங்க ஹோட்டலில் வாங்கிக்கிறீங்க. எனக்குத் தேவைப்பட்டதை நான் தெரிஞ்சவங்ககிட்ட கேட்டு வாங்கிக்கிறேன்.''

''பாமா தன் மாமனாருக்கு சோறு சரியா போடறதில்லை. வயது காலத்திலே பட்டினியும் பசியுமா அவரைத் தெருவில் துரத்தி விட்டிருக்கான்னு மத்தவங்க சொல்லணும் இல்லையா?''

''மத்தவங்களுக்கு நம்ம வீட்டு சங்கதியைத் தவிர வேறு விஷயம் கிடையாதா? நாம அப்படி ஒண்ணும் பெரிய பிரமுகர்கள் இல்லே. கவலைப்பட வேண்டாம்'' - சூடாக பதிலளித்துவிட்டு தமது அறைக்கு சென்று விட்டார். விஷயம் அத்துடன் அடங்கவில்லை.

வீட்டுக்குத் திரும்பிய கணவனிடம் முதல் வேலையாக பாமா தன் மாமனாரின் அடாத செய்கையை முறையிட்டு விட்டிருந்தாள்.

''என்னப்பா இதெல்லாம். எங்களுக்கு முன்பின் தெரியாத சின்னப் பெண்ணை சாப்பாடு தயார் செய்து கொண்டு வீட்டுக்கு வந்து பரிமாறச் செய்திருக்கீங்களே யார் அந்தப் பொண்ணு?''

''என் சிநேகிதன் மகள். என் பேத்திக்கு சமம்.''

''அப்படி பார்க்கிறவங்க நினைக்க மாட்டாங்களே?''

மகனை விறைப்பாகப் பார்த்தார் சிவசாமி. 'பார்க்கிறவங்கள் அபிப்ராயத்தை மதிக்கிறவனாக இருந்தால் பகல் வேளையில் பழைய சோறு திங்க அப்பனை நீ அனுமதிப்பியா... நாவுக்கு ருசியா ஒரு பொருளைக் கேட்டால் மனைவி செய்து போடாதிருப்பதை நீ காணாதவன் போல அசட்டையாக இருப்பியா...' ஓங்கிய குரலில் சண்டை போட வேண்டும்போல அவருக்குக் கோபம். இருக்கவே இருக்கு ஒரு பெரிய சண்டை விரைவில்! உள்ளுணர்வின் எச்சரிப்பில் வாயை மூடிக் கொண்டு தன் அறைக்குள் சென்று மறைந்து கொண்டார்.

அதற்குப்பின் அவருக்கு நாட்கள் வேகமாக சுவாரஸ்யமாக ஓடின. குளத்துப் படிக்கரைமீது மஞ்சுளாவுடன் உட்கார்ந்து கொண்டு அவள் துணிப் பையில் போட்டுக் கொண்டு வந்தவைகளை அவருக்குக் காட்ட அவர் பார்த்து மகிழ்ந்தார்.

''நேத்து நானும் அவருமா கடைக்குப் போய் இந்தப் புடவையையும், இதுக்கேத்த ரவிக்கைத் துண்டும் எடுத்தோம்'' - பெருமையோடு அட்டைப் பெட்டியிலே உள்ள குங்கும வண்ண நீலக்கரை காஞ்சிபுரச் சேலையை அவரிடம் காட்டினாள் ஒருநாள்...

மற்றொரு நாள்... ''அவர் சொன்னா கேட்கலை... காதுக்கு ஒரு ஜோடி முத்துத் தோடும், கழுத்துக்கு முத்து சரமும், கைக்கு தங்க வளைகளும் வாங்கி பரிசாகத் தந்திருக்கார். தாலி சரட்டுக்கு வேறே பணம் செலவழிச்சிருக்கார். இரண்டொரு சாமான்கள் வாங்கிறதுக்குள்ளே பணம் செலவாயிடுச்சி தெரியுமா...'' சொல்லிக்கொண்டே கையோடு கொண்டு வந்த நகைப் பெட்டிகளைத் திறந்து காட்டினாள்.



''ஆசையோடு வாங்கித் தருகிறார். போட்டு மகிழ வேண்டியதுதானே. ஏன் கவலைப்படறே... நாளைக்கு ஓஹோன்னு பெரிய பரிசோதனை சாலை வச்சு பிரமாதமா வாழப் போறச்சே வைர அட்டிகை போட்டுகிட்டு மினுக்கப் போறே... அப்போ இந்த ஏழைக் கிழவனை ஞாபகத்தில் வச்சுப்பியோ மறந்துருவியோ...''

''போங்கோ ஸார்... எப்படி மறப்பேன்?''

வேடிக்கையும், விளையாட்டுமாக அவருக்குப் பொழுது இனிதே நகர்ந்தது.

ஒரு மாத காலத்திற்குப் பின்னர், அந்த நல்ல நாளும் வந்தது. காலையிலேயே அவர் தயாராகிவிட்டார். மகன், மருமகள் வேலைக்குப் போனதும், வேலைக்காரியை துரிதப்படுத்தி வேலைகளை முடிக்க வைத்துவிட்டு தும்பைப் பூவாக சலவையிலிருந்து வாங்கி வந்த தமது வேட்டி, ஜிப்பாவில் மணிபர்சில் நூறு ரூபாயுடன் புறப்பட்டுவிட்டார்.

பதிவுத் திருமணத்திற்கு சாட்சிக் கையெழுத்துப் போட்டபோது அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல.

அதற்குப்பின்... மாப்பிள்ளை பெண்ணுடன் அவர்கள் அமர்த்திய டாக்ஸியில், குடும்பத்தவர்கள் மற்றொரு டாக்ஸியில் வர திருநீர்மலைக்கு கிளம்பினர். முன்ஏற்பாடுகளை எல்லாம் பாஸ்கரனின் நண்பர்கள் செய்து விட்டிருந்தனர்.

சம்பிரதாயப்படி திருமணம் நடந்தேறியது... கடவுளுக்கு அபிஷேக ஆராதனையை முடித்துக் கொண்டு கல்யாண சாப்பாட்டை முடித்துக்கொண்டு தம்பதியர், நண்பர்கள், குடும்பத்தினருடன் கிளம்பினார்.

தமக்கு ஒன்றுமே தெரியாது போன்ற பாவனையில் தோட்டத்து வேலைகளை கவனித்துவிட்டு... உள்ளே வந்தார் சிவசாமி.

மகனும், மருமகளும் வேலையினின்று திரும்பி வந்த சமயம்... அவர்கள் உள்ளே நுழையுமுன் வாசலில் வந்து நின்ற ஆட்டோவிலிருந்து பருமனான ஒரு பெண் மணி இறங்கினாள்.

பார்வதி ஒரு மூச்சு சண்டை போட வருவாள் என்று சிவசாமி எதிர்பார்த்துக்கொண்டுதான் இருந்தார். ஆனால் இத்தனை சீக்கிரம் ஆவேசமே வடிவாக... புயல்போல வந்து இறங்குவாள் என்று நினைக்கவில்லை. கொஞ்சம் திடுக்கிட்டுத்தான் போய்விட்டார்.

குளியலறைக்குப் போகத் திரும்பிய பாமா வந்தவளை வியப்புடன் பார்த்தாள்.

''நீதானே அம்மா சிவசாமி என்பவரின் மகள்...?''

''இல்லை மருமகள்... இவர் என் கணவர். அவருடைய மகன்'' என்று சுருக்கமாக அறிமுகத்தை முடித்துவிட்டு... ''உட்காருங்கோ'' என்றாள் பாமா மரியாதையுடன்.

''உட்காரக்கூட எனக்கு இனி யோக்யதை இருக்கா... கொஞ்சம் உன் மாமனாரை அதான் சிவசாமி அவர்களை கூப்பிடுகிறீர்களா?'' தமது அறைக்குள் மறைவாகி விட்டிருந்த சிவசாமி மெல்ல முன்னறைக்குள் வந்தார்.

முகம் முழுவதும் ரத்தமாக சிவந்துவிட, அடக்க மாட்டாத ஆத்திரமும் அழுகையுமாகப் பார்வதி கத்தினாள்.

''நீ, நல்ல இருப்பியா, பாவிக் கிழவா! என் வீட்டுக்கு ஜாதகம் எடுத்துட்டு வராப்பல வந்து... நெளுவுசுளுவெல்லாம் பார்த்துட்டு போய் அந்தப் பாரிச வாயுக்காரன் பெண்ணை என் மகன் தலையிலே கட்டி வச்சுட்டியே. பெத்தவ கல்லுப் பிள்ளையார் மாதிரி இருக்கப்போ என் மகனுக்கு வேப்பிலை அடிச்சு மயக்கி... பதிவுத் திருமணம் செய்ய உபதேசித்து சாட்சியா இருந்து நடத்தி வச்சிருக்கியே? பெத்தவ வயிறெரிந்து கொண்டு உட்கார்ந்திருக்க நீங்க எல்லோரும் திருநீர்மலையிலே கல்யாணம் கொண்டாடி வயிறுபுடைக்க தின்னுட்டு வந்திருக்கீங்களே. இந்த அநியாயத்தைக் கேட்க யாரும் இல்லையா...'' தலையில் அடித்துக் கொண்டு ஓவென்று அழுதாள்.



கிரிதரன் திகைத்துப் போய்விட்டான். பாமா அதிர்ந்து போய் நின்றாள். மௌனமாகக் கைகளை மடக்கிக் கொண்டு தனக்கு ஏதும் சம்பந்தமே இல்லாததுபோல் நின்று கொண்டிருந்தார் சிவசாமி.

''ஏம்பா, இந்தம்மா சொல்வதெல்லாம் நிசமா?'' மகன் கேட்டான்.

''அழாதீங்க அம்மா நிதானமாக விசாரிப்போம்'' - ஆறுதலாகச் சொல்லிக் கொண்டு பாமா, அந்தம்மாளின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

சிவசாமிக்கு அவளைப் பார்க்க பரிதாபமாகத் தானிருந்தது. பாடுபட்டு வளர்த்து ஆளாக்கிய மகனின் திருமணத்தில் பங்கு கொள்ள முடியலையே என்று ஒரு தாய் தவித்து மறுகுவது இயற்கையே. ஆனால் பிள்ளையைப் பெற்றவள் என்கிற கர்வத்திலே அன்று எப்படி அசட்டையாகப் பேசினாள்! அவள் ஆணவத்துக்கு மகன் சரியான சூடு கொடுத்துவிட்டான். அவரிடம் வந்து அலறி அழுவதில் என்ன லாபம்?

''இந்தம்மா சொல்வது சிலது நிஜம்; சிலது அவங்களுடைய ஆதங்கத்திலே, மனக் கொதிப்பிலே எழுகின்ற கற்பனை. இவங்க மகன் மஞ்சுளாங்கிற பெண்ணை காதலித்தான். ஜாதகம் பார்க்கணும்னு இவங்க விரும்புவதாக தெரியவந்தது. அந்தப் பெண் ஜாதகத்தை இவங்ககிட்டே நான் கொண்டு கொடுத்தேன்.''

''உங்களுக்கு ஏம்பா இந்த வீண் வம்பு.''

''நான் அதுக்கு மேலே என்ன செய்தேன்? இவங்க என் மேலே பழி போடறாங்க. 'என் மகன் நல்லவன். உன் பெண்ணை அடக்கு'ன்னு சொன்னானாம் யாரோ ஒருவன். அதுபோல இவங்க தன் பிள்ளையைப் பத்தி எல்லாம் தெரிஞ்சு வச்சுக்காம இப்போ நம்பகிட்டே வந்து இரைஞ்சா என்ன அர்த்தம். பாஸ்கரன் அந்தப் பெண்ணை விரும்பினான். அம்மாகிட்டே அதைப் பத்திச் சொல்லப் பார்த்திருக்கிறான். பிடிகொடுக்கலை. காதலாவது ஊதலாவதுன்னு இவங்க அசட்டையா பேசியிருக்காங்க. இந்தக் காலத்துப் பையங்க சங்கதி தெரியாதா? ஏன் அவ்வளவு தூரத்துக்குப்போகணும்? உன் அத்தை மகன் சந்துரு என்ன பண்ணினான்? அவன் இஷ்டப்பட்ட பெண்ணை ஏத்துக்க வீட்டிலே மறுப்பு ஏற்பட்டதும் பேசாம போயி வடபழனியிலே கல்யாணத்தை முடிச்சுகிட்டுப் பதிவு திருமணம் செய்துக்கலையா, அதே கேஸ்தான் இது.''

பாமாவுக்கு கோபம் தாங்க முடியவில்லை.

தப்பு காரியம் செய்துவிட்டு, அவளது பிறந்த வீட்டில் நடந்த கதையை மூன்றாவது பெண்ணின் முன் அவிழ்த்துக் காட்டுகிறாரே மாமனார்! வரவர இவர் போக்கே ரொம்ப விசித்திரமாகிக் கொண்டு வருகிறது.



''ஏம்மா, உங்க வீட்டிலே இதுமாதிரி சங்கதி நடந்தாலேதான் நீயும் இதைத் தடுக்காம ஆதரவு கொடுத்தியா?'' பார்வதி சீறியபோது பாமா உண்மையில் வெகுண்டு போனாள்.

''இந்தாங்க அம்மா. இந்த சங்கதி எதுவுமே எனக்குத் தெரியாது. என் மாமனாருக்கு வேண்டியவங்க வீட்டுப் பெண் அவ. எங்ககிட்டே எதுவுமே சொல்லாம இவர் இதில் ஈடுபட்டிருக்கார். இங்கே வந்து இரைஞ்சு லாபமில்லே'' - கொஞ்சம் காரமாகச் சொன்னாள்.

பார்வதி விடுக்கென்று எழுந்து நின்றாள். ''நாளைக்கு உங்களுக்கும் பெண்ணோ பிள்ளையோ பிறக்கும். அப்போ அவன் உங்களுக்குத் தெரியாம ஒரு பெண்ணை கல்யாணம் செய்துண்டு வந்து நின்னா அப்போ உங்க வயிறு என்னது போல எரியறதைப் புரிஞ்சுக்குவீங்க. கிழவா, நீ நல்லாவே இருக்கமாட்டே. என் குடும்பத்தை அழித்துவிட்ட பாவம் உன்னை விடவே விடாது'' - கத்திக்கொண்டே கதவைத் திறந்து படாரென்று சாத்திவிட்டு வெளியேறினாள்.

அந்தி வேளையில் ஒரு தாய் தன் வீட்டுக்கு வந்து குமுறி அழுதுவிட்டுக் கண்ணீருடன் வெளியே போனது பாமாவுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அவள் இட்ட சாபம் பலித்து விடுமோ என்றதொரு பயம். இத்தனை கலவரத்துக்கும் காரணமான மாமனார் கல்லுளி மங்கனாக சிறிதும் கவலைப்படாது நிற்பதைக் காண ஆத்திரம் மண்டிக் கொண்டு வந்தது.

''வயசான காலத்திலே போட்ட சோத்தை தின்னுட்டு சும்மா கிடக்க உங்களுக்கு இருப்பு கொள்ளலையோ! ஊர் வம்பை உழக்கால அளந்துகிட்டு இப்படி சதா கலாட்டா

பண்ணிக்கிட்டு இருக்கீங்களே. இது நல்லாவா இருக்கு?'' சீறினாள் மருமகள்.

''ஏன் அப்பா அந்தப் பரிமளா என்கிற பெண் படிக்கிறதைப்பற்றி ரொம்பக் கவலைப்பட்டீங்க. இப்ப என்னடான்னா யாரோ மஞ்சுளாங்கிற பெண் கல்யாணத்திலே... ரொம்ப மும்முரமா வேலை செய்திருக்கீங்க.

''இப்படியே ஊர் விவகாரத்திலே தலையிட்டுக் கொண்டிருந்தீங்கன்னா ஒருநாள் நாலு தடியன்கள் சேர்ந்து உங்க கால் கைகளை முறிச்சுப் போட்டுட்டு போகப் போறான்.''

''அவர் அடிபடறதோட ஒழிஞ்சா சரி. நம்மையும் அல்லவா ஏசுவாங்க, பேசுவாங்க...'' பாமா கத்தினாள்.

''அந்தப் பெண் பரிமளா இப்போ நல்ல நிலையிலே அமெரிக்காவிலே தன் புருஷனோட வாழ்ந்துகிட்டிருக்கா. நான் படிக்கச் சொல்லி உற்சாகப்படுத்தினதாலே அவ அப்பன் இப்போ மகள் சம்பாத்தியத்திலே நிம்மதியா வாழறான். இந்த மஞ்சுளா தன் கணவன் ஆஸ்திரேலியாவுக்குப்போய் சம்பாதிக்கும் பணத்தை மூட்டை கட்டி மாமியாருக்கு அனுப்பப் போறாளாக்கும். இன்னிக்கு சண்டை போடுவாங்க நாளைக்குக் கூடிக் கொண்டிடுவாங்க...''

''அப்பா... போதும். இனி இதுமாதிரி ஏதாவது ஒரு சம்பவம் நடந்தால்...''கோபத்துடன் கத்தினான் கிரிதரன்.

''நடந்தா நம்மோட கூட வாழ முடியாதுங்கிறதை தெரிஞ்சுக்கட்டும். நிழலிலே உட்கார வச்சு சோறு போட்டா சும்மா இருக்க முடியலை பாருங்கோ'' மருமகள் இரைந்தாள்.



நிழலில் உட்கார வைத்து என்று அவள் கூறியதை அவரால் ஏற்கவே முடியவில்லை. அந்த நிழலுக்கும் அவருக்கும் பங்குண்டே. அதை இவ்வளவு சுலபமாக மறந்துவிட்டார்களே! சும்மாவா சோறு போடுகிறார்கள்? மாதம் அதற்காகப் பணம் தருகிறாரே! கோபத்தில் குமைந்து போனார். ஆனால் அவர் அதற்கு மேல் பேசவில்லை. அன்று அவர் அவர்களுடன் சாப்பிட உட்காரவில்லை. மகனும் தகப்பனை வற்புறுத்தி அழைக்கவில்லை. மருமகளுக்கு இன்னும் ஆத்திரம் அடங்கவில்லை. பட்டினி கிடக்கட்டும் என்று அவள் அசட்டையாக இருந்துவிட்டாள். பிரிட்ஜிலிருந்த குளிர் நீரை எடுத்துக் குடித்துவிட்டு அவர் படுத்துக் கொண்டுவிட்டார்.

வெகுநேரம் உறக்கம் வரவில்லை. முன்னறை காப்பி மேஜைமீது வைத்துவிட்டிருந்த தமது டிரான்சிஸ்டர் ரேடியோவை எடுத்து வர மெல்ல எழுந்து வெளியே வந்தார்.

கிரிதரனது படுக்கை அறைக் கதவு முழுவதுமாக மூடப்படவில்லை. மகனும், மருமகளும் பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

தயக்கத்துடன் நின்றார். அவரைப்பற்றி ஏதோ பேசுகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டவர் படபடக்கும் நெஞ்சோடு உற்றுக் கேட்டார்.

''இனி உங்கப்பாவை நம்மோட வச்சுக் கொண்டு வாழ்வது சாத்தியப்படாது... அவரை இங்கே இருந்து வேறே ஏதாவது முதியோர் இல்லத்துக்கு அனுப்ப ஏற்பாடு பண்ணுங்கோ...'' பாமா சலித்துக் கொண்டாள்.

''எனக்கும் அதே யோசனைதான். ஆனால் பென்ஷன் வாங்கிறதாலே சாதாரணமான முதியோர் இல்லத்திலே இடம் கிடைக்காது...''

''வேறே என்னதான் செய்கிறது?''

''என் சிநேகிதன் ஒருவன் சொன்னான். பென்ஷன் வாங்குகிற முதியோர்கள் சுகமாக வசிக்க ஒரு விடுதி கட்டிக் கொண்டு வராங்களாம். அதிலே அப்பாவுக்கு ஒரு அறை கிடைக்கும்படி ஏற்பாடு செய்யணும்.''

''ஏதாவது முன் பணம் தர வேண்டியிருக்குமே...?''

''கட்டாயம் இது மாதிரியான முதியோர் இல்லங்களில் இடத்திற்குக் கொஞ்சம் முன் பணம் தரவேண்டியிருக்கும். விசாரித்துப் பார்க்கிறேன். ஆனால் அப்பா இங்கிருந்து போனால் வீட்டு வேலைகள் எல்லாம் கவனிக்க ஆள் போட வேண்டியிருக்கும்...''

''கவலைப்படாதீங்க. என் பெரியம்மா விதவையாகி விட்டவ. குழந்தை குட்டியில்லாத தனி ஆள். எங்கேயாவது நல்ல இடமா கிடைச்சா வேலை செய்துகிட்டு சிவனேன்னு இருக்கப் பிரியப்படுகிறாங்க... கொஞ்சம் வசதி இல்லாதவங்க. அவங்களை நம் வீட்டோட வச்சுக் கொண்டால் சமைச்சுப்போட்டு வீட்டையும் கவனிச்சுப் பாங்க...''

''நல்ல யோசனைதான். நீ அவங்களைப் பார்த்துக் கேட்டு வை. நான் அப்பாவுக்குக் தக்க இடமா பார்க்கிறேன்.''

முகமும் நெஞ்சும் நெருப்பாக எரிய சிவசாமி... அதிர்ந்து போய் நின்று விட்டார். மகனுக்கு இப்போது உண்மையில் அவர் வேண்டாததொரு சுமையாகிவிட்டார். மருமகள் அவரை மெல்ல வெளியேற்றிவிட்டு தன் உறவுக்காரியை கொண்டு வந்து வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறாள்.



இந்த மாதிரியான கேவல நிலையில் அவர் தொடர்ந்து அவர்களுடன் வாழ வேண்டியது அவசியமா? ஒரு நாள் அவர் வீட்டை விட்டு வெளியேறிவிட்டால்...?

சிவசாமி என்னும் அறுபத்திரண்டு வயது மனிதர் - மாநிறம், ஒல்லியாக உயரமாக இருப்பார். பின்னால் வழுக்கையாகிவிட்ட தலை. முகவாயின் கீழ் ஒரு காய வடு காணப்படும். வெளியேறிய அன்று வெள்ளை சட்டையும், வேட்டியும் அணிந்து கொண்டிருந்தார். விபரத்துடன் காணாமற் போனவர்கள் தகவலை தொலைக் காட்சியில் சொல்லும்போது அவ்வருடைய பெயரும் இரண்டு நாள் அடிபடட்டுமே...

காவல் துறையினரிடம் கிரிதரன் புகார் செய்து தவிக்கட்டும். ஆஸ்பத்திரிகளில் அடிபட்ட கேஸ்களில் அப்பா இருக்கிறாரா என்று தேடட்டும். பிணக்கிடங்குகளில் செத்தவர்களில் அப்பாவைத் தேடிப் பார்க்கட்டுமே.

ஆத்திரத்தில் கொதித்துப் போய் முன்னறைக்குப் போகாது திரும்பிவிட்டார். அதற்குப் பின்னர்தான் அவர் தமது சத்யாக்கிரகத்தை ஆரம்பித்தார். வீட்டிலே சாப்பிடுவதை அவர் அறவே நிறுத்திக் கொண்டுவிட்டார்.

''ஏன் அப்பா இப்படி முரண்டு பிடிக்கிறீங்க...'' மகன் கேட்டபோது மவுனம்தான் அவரது பதிலாக இருந்தது.

''பட்டினி போட்டு கொல்றேன்னு மத்தவங்களுக்குத் தெரியணும்னு இப்படி சதி செய்யறார். விடுங்கள். தானா பசி தாங்காட்டா வழிக்கு வருவார்...'' மருமகள் அசட்டையாகச் சொன்னாள்.

வேண்டாதவனாகி விட்டபின்... தமக்கு ஒரு வழி தேடிக் கொள்ளும்வரை அவர் அங்கு தங்கியிருப்பதே

தகாத செய்கை. மருமகள் சமைத்துப் போடும் உணவைத் தின்று வெட்கம் கெட்டு உயிரைக் காக்க வேண்டிய அவசியமில்லை.

காலையில் மகனும், மருமகளும் வெளியில் போன பின்பு அருகிலிருந்ததொரு டீக்கடையில் பன்னும் தேநீரும் வாங்கி சாப்பிட்டார். பகல் உணவுக்கு சற்று தொலை விலிருந்ததொரு ஹோட்டலில் சாப்பாட்டை முடித்துக் கொண்டார். இரவு மகன் சாப்பிடு முன்பே தமதறைக்குள் சென்று முடங்கிக் கொண்டார்.

எத்தனை நாள் இப்படிப் பிடிவாதம் செய்யப் போகிறார் என்று மருமகள் வாளா இருந்தாள்.

ஆனால் மாத முடிவில் மேஜைமீது சாப்பாட்டு செலவுக்கு என்று எழுதிய கடிதத்துடன் முந்நூறு ரூபாய் களை அவர் வைப்பதை எடுத்துத் தன் கைப்பைக்குள் போட அவள் மறக்கவேயில்லை. வெட்கப்படவில்லை. வேதனைப்படவில்லை.

வேலைக்காரி கிளம்பியதும் அவர் தினமும் வீட்டைப் பூட்டிக் கொண்டு பத்திரிகையில் பார்த்த வாடகைக்கு விடப்படும் என்னும் இடங்களைப் பார்வையிட போய் வந்தார். அவரது பென்ஷன் தொகை யில் வாடகை கொடுத்து எடுப்பு சாப்பாட்டில் காலம் ஒட்டுவது கடினம் என்று புரிந்தது. ஒரே ஒரு அறைக்கு சில இடங்களில் இருநூறு ரூபாய் வாடகை கேட்டனர். சுயம்பாகம் செய்து கொண்டு ஒண்டுக் குடித்தனத்தில் ஒடுங்கிக் கொள்ளலாம் என்றாலோ அவருக்குப் பாலை காஸ் அடுப்பில் ஏற்றி காய்ச்சி வைக்கவும் பழைய குழம்பை சுட வைக்கவும்தான் தெரியும்.



மீனாட்சி பலமுறை அவரை வேடிக்கையாக சாடியிருந்தாள். நான் போன பிறகு நீங்க ரொம்பவும் திண்டாடப் போகிறீங்க. ஒரு சோறு பொங்கி, குழம்பு வைக்கத் தெரிஞ்சுக்கிறது எப்பவும் நல்லது.

அதைப்பற்றி இப்போது எண்ணி பயன் என்ன?

அன்று ஒருநாள் மாலை பல இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு மிகவும் களைப்புடன் பஸ் நிலையத்திற்கு வந்தார். எதிர்ப்பக்கமாக வந்த பஸ்ஸிலிருந்து இறங்கித் தெருவைக் கடந்து வந்த மஞ்சுளாவைப் பார்த்துத் திகைத்துப் போனார். அந்தக் கலவரமான சம்பவத்திற்குப் பின் மஞ்சுளாவும் அவள் கணவனும் புறநகர் பகுதியில் எங்கேயோ தனிக்குடித்தனம் செய்வதாகக் கேள்விப் பட்டார். அவர்களைத் தேடிக் கொண்டுபோய்ப் பார்த்து விசாரித்து வர அவருக்கு நேரம் இருக்கவில்லை.

''ஸார்! என்ன இளைச்சுப் போயிட்டீங்க. எங்கே இப்படி?'' என்று விசாரித்தபடி அருகில் வந்து நின்றாள் மஞ்சுளா. பச்சை வண்ண நைலக்ஸ் சேலை உடுத்திக் கொண்டு தோளில் பையும் கையில் சிறு பிளாஸ்டிக் டப்பாவுமாக நின்ற அந்தப் பெண் முன்னைவிட உப்பி இருந்தாள். கன்னக்கதுப்புகளில் செம்மை படர்ந்து கண்களில் அலாதியான ஒரு பளபளப்புடன் முன்னைவிட அழகாகவே காணப்பட்டாள். முகத்திலே மகிழ்ச்சி களைகட்டியிருந்தது. ''என்னம்மா எப்படி தனிக்குடித்தனம் இருக்கு?'' கேட்டபோது அவள் மெல்ல தலை நிமிர்ந்து அவரை வெட்கத்துடன் பார்த்தாள்.

''தனிக்குடித்தனத்துக்கு வீட்டுக்கு மூணு மாத வாடகை முன் பணமாகக் கட்டினது வீணாகிப் போனது. போய் நாங்க குடித்தனம் தொடங்கி ஒரு வாரத்துக்குள்ளே

அவரது அம்மா வந்து எங்களைத் தம்மோடு இருக்கச் சொல்லி அழுது... கூடவே அழைச்சுட்டு போயிட்டாங்க. இப்போ நானும் அவரும் நுங்கம்பாக்கத்திலேதான் வசிக்கிறோம்.''

''உன் மாமியார் அத்தனை சுலபமாக மனம் மாறிட்டாங்களா...''

''பிள்ளையைப் பிரிஞ்சு அவங்களால் தனியா இருக்க முடியலை. என்னைக் கலந்து ஆலோசித்து நல்லா கல்யாணத்தை நடத்தியிருக்கலாம். ஏதோ அவசரப்பட்டு தப்பு செஞ்சுட்டீங்க. அதுக்காக நாம் இப்படி பிரிஞ்சு ஆளுக்கு ஒரு மூலையா இருக்க வேணாம்னாங்க.''

''பரவாயில்லை. கேட்க சந்தோஷமா இருக்கு. உன் மாமியார் உன்கிட்ட நல்லாத்தானே நடந்துக்கிறாங்க?''

''ரொம்பப் பிரியமா நடந்துக்கறாங்க. பிறந்த வீட்டுக்குப் போய்ட்டு வர ஆசையா இருக்குன்னேன். காலையில் என் கணவரோட ஸ்கூட்டரில் போய் இறங்கிகிட்டு கொஞ்ச நேரம் இருந்துட்டு சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்திடச் சொன்னாங்க. அவங்களுக்குத் தனியா உட்கார்ந்து சாப்பிடப் பிடிக்கலையாம். என் அம்மா மாமியாருக்குக் கொஞ்சம் செஞ்சி கிளறி இந்த பிளாஸ்டிக் டப்பாவிலே போட்டு அனுப்பியிருக்காங்க. சம்பந்திகள் எல்லோரும் ஒண்ணாகிட்டாங்க'' - சிரித்தாள் மஞ்சுளா.

''அப்ப நான்தான் வேறாகிட்டேன்னு சொல்லு...'' சிவசாமி லேசாக முறுவலித்தார்.

''இல்லே... உங்க மேலே இப்போ என் மாமியாருக்கு எந்தவிதமான கோபமும் இல்லை. ஆமாம் வீட்டுக்குத்தானே போகப் போறீங்க? என்னோட பஸ்சில் நுங்கம்பாக்கம் வாங்க... காப்பி டிபன் சாப்பிட்டுப் போகலாம்.''



''இல்லேம்மா... நீ இப்போ கூப்பிட்டதே சாப்பிட்டதைப்போல நிறைவு கொடுக்கிறது. நீ சுகமா இருக்கிறதைக் கேட்க எனக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு. சமயம் வரும், அப்போது வந்து பார்க்கிறேன். வரட்டுமா?'' என்று வேகமாக வந்து நின்ற பஸ்ஸில் ஏறிக்கொண்டார்.

அன்று பகல் உணவு எதுவும் சாப்பிடாது அவர் வீடு தேடும் படலத்தில் மும்முரமாக இருந்தார். மண்டையைப் பிளந்த வெய்யிலில் குடைகூட இல்லாது தலைமேல் துண்டைப்போட்டுக் கொண்டு நடந்த களைப்பில் அவருக்கு லேசாக தலையைச் சுற்றியது. வயிற்றைக் கிள்ளியது. பஸ்போகும் வழியில் மூன்றாவது ஸ்டாப்பில் இறங்கி... கொஞ்ச தூரம் நடந்தால் அருகில் ஒரு ஹோட்டல் இருப்பதாக நினைவு.

அங்கே போய் வயிற்றுப்பாட்டை கவனித்துக் கொண்டுவிட்டுப் பின்னர்தான் வீடு திரும்ப வேண்டும். தீர்மானித்தவராக பஸ்ஸில் ஏறிக் கொண்டார்.

மூன்றாவது ஸ்டாப்பில் பஸ் நின்றதும் இறங்கியவர் உடம்பு தக்கையாகிவிட்டது போன்றதொரு உணர்வில் கால்கள் தடுமாற பாதையோரமாக நடந்தார். பளிச்சென்று முகத்தின்மீது வீசிய வெய்யிலில் கண்கள் கூச... தம்முன் ஏதோ பூச்சிகள் பறப்பது போன்ற பிரமையில் தள்ளாடத் தொடங்கியவர், ஒருசில நொடிகளில் தம்மைச் சுற்றிலும் இருள் பரவி விட்டதொரு திகைப்பிலே... சுருண்டு பாதை ஓரத்திலே கீழேவிழுந்துவிட்டார். டமார் என்று தலை எங்கேயோ மோதிக் கொண்ட வலி. கன்னத்திலே சூடாக ஏதோ பரவிய நினைவு, பின்னர் எங்கும் இருள்.

# 8

என்ன இது?

ஒரு கிணற்றுக்குள்ளிருந்து மேலே எழும்புவதைப் போல இத்தனை நேரம் இருட்டாக இருந்த ஒரு பள்ளத்திலிருந்து வெளிச்சத்தை நோக்கி மேலே விரையும் ஒரு விசித்திரமான உணர்வு.

''விண் விண்'' என்று நெற்றி ஓரத்திலே ஏன் வலிக்கிறது? கண்களைத் திறந்து பார்த்தார் சிவசாமி. எல்லாம் மங்கலாக - புகைப்படலத்துக்குள்ளே தெரிவது போன்றிருந்தது. மெல்ல மெல்லப் பார்வை பளிச்சிட்ட போது தாம் எங்கேயோ ஒரு புது இடத்தில் ஒரு கட்டிலின் மீது படுத்திருப்பதை உணர்ந்தார்.

என்ன வேடிக்கை இது? கனவு காணவில்லையே! சட்டென்று எழுந்து உட்கார்ந்தர்ர்.

''இப்போ மயக்கம் இல்லையே'' - கேட்ட குரல் வந்த திசையைப் பார்த்தார்.

அருகில் சுவர் ஓரமாக நின்று கொண்டிருந்த அந்தப் பெண்மணியைப் பார்த்தார்.

''நீங்க பாதையோரத்திலே மயங்கி விழுந்திட்டீங்க'' - மெல்லிய குரலில் சொன்னவளைக் கூர்ந்து பார்த்தார்.

வெள்ளிக் கம்பிகளாக கறுப்பு முடி இடையே நரை ஓடிய கூந்தலைக் கோடாலி முடிச்சிட்டுக் கொண்டு பளிச்சென்ற குங்குமப் பொட்டுடன் தெரிந்த அவளுக்கு வயது ஐம்பதுக்கும் மேலிருக்கும் என்று முகத்திலிருந்த சுருக்கங்கள் கூறின. ஆனால் புன்னகையில் களைகட்டிய முகம். ''நெற்றியில் லேசாக காயம் ஏற்பட்டு ரொம்ப



ரத்தக் கசிவு ஏற்பட்டுடுச்சு. டாக்டர் ஒரு தையல் போட்டிருக்கார்.''

சட்டென்று தமது நெற்றி ஓரத்தை தொட்டுப் பார்த்துக் கொண்டார். வலது பக்கம் காதிற்குமேல் நெற்றி ஓரத்தில் பட்டையாக ஒரு பிளாஸ்திரி ஒட்டப்பட்டிருந்தது கையில் தென்பட்டது. மெல்ல எல்லாமே நினைவில் எழுந்தது. அவர் பஸ் நிலையத்திலிருந்து ஹோட்டலுக்கு நடக்கும்போது வெய்யில் தாங்காது மயங்கி விழுந்து விட்டிருக்கிறார். நெற்றியில் காயம்.

அவர் கேட்கு முன்னே அவள் பேசினாள். ''சாமான் வாங்கிட்டு ரிக்ஷாவிலே வீடு திரும்பிகிட்டிருந்தேன். ஒரு கூட்டம் உங்களை சுத்தி வேடிக்கை பார்த்துக்கிட்டு நிற்க, ரத்தம் நெற்றியிலிருந்து ஓட நீங்க நினைவில்லாம மயங்கிக் கிடந்ததைப் பார்க்க மனதுக்கு ரொம்ப கஷ்டமாக இருந்தது.''

''யாரும் உதவிக்கு வந்திருக்க மாட்டாங்களே.''

''தெரிஞ்ச சங்கதிதான். உங்க பையிலிருந்த பர்சை எடுக்க ஒருவன் அடாடா! கீழே விழுந்து கிடக்காரே கிழவர்னு பரிதாப நாடகம் போட்டு குனிஞ்ச .. இதுமாதிரி ஏமாத்து பேர் வழிகள், எத்தர்கள், திருடர்கள் எல்லோரையும் எனக்குத் தெரியும். உடனே ரிக்ஷாவி லிருந்து இறங்கி ரிக்ஷாக்காரர் உதவியோடு உங்களைத் தூக்கி அதில் போட்டுக்கொண்டு வந்துட்டேன்.''

''யாரும் அதைக் கண்டுக்கலையா?''

''சொந்தக்காரர் போலிருக்குன்னு வழிவிட்டு விலகி நின்னுட்டாங்க.''

''நீங்க வந்து உதவி செய்யாம இருந்தா நான் அப்படியே கிடந்திருப்பேன். பிறகு சாவகாசமாக ஒரு

போலீஸ்காரர் வந்து என்னை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருப்பார். அதுக்கு நடுவிலே ரத்த இழப்பு அதிக மாகப் போயிட்டா அப்படியே போய் விட்டிருப்பேன்.''

''நம்ப சமூகம் ரொம்ப மாறிப் போயிருக்கு. நமக்கேன் வம்பு என்று ஒதுங்கிப் போற ஒரு குணம் நம்மை கெட்டியா பிடிச்சுக்கிட்டிருக்கு. சாதாரண சிறு காயமா இருந்தா பரவாயில்லை. பெரிய காயம் மண்டை யிலே ஏற்பட்டு மனிதன் மயங்கிக் கிடந்தா அவனுக்கு உதவப் போய் பிறகு தொடர்ந்து பல தொல்லைகள் என்று விலகிப் போய் விடறாங்க. அது கிடக்கட்டும், உங்களுக்கு மட்டும் ஏன் என்னை தூக்கிட்டு வந்து டாக்டர்கிட்டே காட்டி சிகிச்சை செய்யணும்னு ஒரு பொறுப்பு?''

''என் வாழ்க்கையிலே நான் நல்ல காரியங்களே செஞ்சதில்லை. இனியாகிலும் இருக்கும் காலத்தை நல்லது செய்து நிறைவோட வாழ ஆசைப்படறேன்.''

''நீங்க யாரு? நான் எங்கே இருக்கேன்? இப்ப நேரம் என்ன? இதுகளைத் தெரிஞ்சுக்க விரும்பறேன். சொல்ல முடியுமா?''

''என் பெயர் ரேவதி. இது எனக்கு நடுவிலே வச்ச பெயர். சொந்தப்பெயர் சற்குணம். இப்ப எனக்கே என் பெயர் மறந்து போயிட்டதுன்னா வியப்பில்லை.''

''திருவல்லிக்கேணி தியாகராஜன் தெருவில் அஞ்சாம் நம்பர் வீட்டிலே இருக்கீங்க. இப்போ நேரம் மாலை ஐந்து மணியடிச்சு முப்பது நிமிஷம்.''

''இத்தனை நாழி நான் தூங்கிட்டிருந்தேனோ?''

''டாக்டர் ஊசி போட்டார். அந்த மருந்தின் தன்மை யால் கொஞ்சநேரம் நீங்க அசந்து தூங்கிட்டு இருந்தீங்க...



கொஞ்சம் குளுகோஸ் போட்டு பால் சாப்பிட கொடுக்கச் சொன்னார் டாக்டர்... தயாரா பாலைக் காய்ச்சி வச்சிருக்கேன். ஒரு நொடியில் குளுகோஸ் போட்டு எடுத்து வரேன்...''

''வேண்டாம்மா... எனக்கு வீட்டுக்குத் திரும்பணும். உங்களுக்கு ஏன் சிரமம்?''

''ரெண்டு நாள் நீங்க நடமாடாம ஓய்வா இருக் கணும். தலையில் அடிபட்டிருக்கான்னு தெரியணும்னு டாக்டர் சொல்லியிருக்கார். அதனாலே இந்த நிலையில் நீங்க வெளியிலே போகக்கூடாது.''

அந்தப் பெண்மணி ஒரு ஸ்டீல் டம்பளரில் பாலை நிறைத்து மரத்தட்டில் வைத்துக் கொண்டு வந்தாள்.

''முதல்லே இதைச் சாப்பிடுங்கோ...'' உபசரித்தாள்.

மீனாட்சிக்குப்பின் ஹோட்டல் சர்வரைத் தவிர அவருக்கு யாரும் உட்கார வைத்து எதையும் சாப்பிடத் தந்ததில்லை. சர்வர்கூட கடமைக்காக... சில சமயம் சட்டினி கிண்ணத்தைக் கொண்டு வந்து வேகமாக டக் கென்று வைப்பார்.

''வேறென்ன வேணும்?'' யந்திர கதியில் கேட்பார்.

முன்பின் தெரியாத இந்தப் பெண்மணி எத்தனை சிரத்தையுடன் மிகவும் அனுதாபத்துடன் அன்புடன் அவரை கவனித்துக் கொள்கிறாளே...

பாலைப் பருகி முடித்ததும் டம்பளரைக் கீழே வைத்தார். மஞ்சள் வெய்யில் முற்றத்து சுவரிலிருந்து கீழே இறங்கிக் கொண்டு வருவதைக் கவனித்தார்.

இன்னும் இரண்டு நாட்கள் அவர் ஓய்வாக அங்கேயே இருக்க வேண்டுமா? அவரை அங்கே தங்க

வைத்துக் கொள்ள அப்படி அந்தப் பெண்மணிக்கு லாபம் எதுவும் ஏற்படப் போறதில்லையே... ''ரேவதி அம்மா! இந்த வீட்டிலே உங்க குழந்தை, கணவர் எல்லாரும் இருப்பாங்க... நான் கூடத்தில் இப்படி முடங்கிக் கொண்டு கிடந்தால் சங்கடமா இருக்குமே... மேலும் என்னைக் காணாம என் மகன் கவலைப்படுவானே...''

ரேவதி மெலிதாகச் சிரித்தாள். ''இந்த வீட்டில் என்னைத் தவிர யாரும் கிடையாது. அதனாலே உங்களால் எனக்கு எந்தவிதமான சங்கடமும் கிடையாது. உங்க மகன் வசிக்கும் இடத்தின் முகவரியைத் தந்தால் நான் போய் சொல்லிட்டு வரேன். டெலிபோன் எண் இருந்தால் சொல்லுங்க... கூப்பிட்டு நிலைமையை விளக்கறேன். அவர் வந்து உங்களைப் பார்த்துட்டுப் போகட்டும். ரெண்டு நாள் கழிச்சு டாக்டர் கவலைக்கிடம் இல்லேன்னு சொல்லிட்டா நீங்க தாராளமா வீட்டுக்குப் போகலாம். நான் செய்த உபகாரம் வீணாகிவிடக்கூடாது என்கிறதுதான் என் கவலை...''

அவளது குரல் இதமாக நெஞ்சை வருடியது. இதேமாதிரி சந்தர்ப்பத்தில் அவரது மருமகள் பாமா என்ன செய்திருப்பாள்? ''குடைகூட இல்லாம அப்படி வெய்யிலில் எங்கே போயிருந்தீங்க... போட்ட சோத்தைத் தின்னுட்டு வீட் டோட நிழலில் கிடக்க யோகம் இல்லை. அடுத்த வீட்டு வம்பை விலைக்கு வாங்கிட்டு வந்தது போதாதுபோல இப்படித் தலையிலே அடிபட்டுக் கொண்டு... நான் வேலைக்குப் போறதா? உங்களைக் கவனிக்கிறதா?'' என்று உரக்கக் கத்தியிருப்பாள்.

''பேசாம ஆஸ்பத்திரியிலே அனுமதிச்சிடுவோம். நாலு நாள் இருந்துட்டு வரட்டும்'' - கிரிதரன் சொல்லி யிருப்பான்.



''ஆஸ்பத்திரிக்கு யார் பணம் கட்டுவது?''

''அவரது பென்ஷனிலிருந்து கட்டட்டும்...''

''ஆமாம் பெரிய பென்ஷன். பெரிய நர்ஸிங்ஹோ மில் வி.ஐ.பி. அறையில் வச்சுதான் கவனிக்கணும். ஆஸ்பத்திரியில் அனுமதிச்சுட்டா போதுமா... போய் யார் பார்த்துட்டு வரது... இவராலே ரொம்ப தொந்தரவு'' - முணுமுணுத்துக் கொட்டியிருப்பாள்.

தலைவலி, காய்ச்சல், இருமல், தும்மல் இவைகள் எல்லாம் பாமாவுக்குத்தான் வரலாம்.

ஒரு சிறு தலைவலிக்கு அவள் தலையில் ஒரு கைக்குட்டையை இறுக்கிக் கட்டிக் கொண்டு படுக்கையில் கிடந்தபடியே... ''கொஞ்சம் வெந்நீர் கொண்டு வந்து தர முடியுமா? கதவைச் சாத்திட்டுப் போய் மருந்துக்கடையில் டாக்டர் கொடுத்துட்டுப் போயிருக்கும் பிரிஸ்கிரிப்ஷ னுக்கு மருந்து வாங்கிட்டு வரீங்களா...?'' ஆர்ப்பாட்டம் செய்வாள்.

மகன் அதற்குமேல்... ஒரு சிறு வலிகூட தாங்க முடியாது. ''முதுகு வலிக்கிறதே? ஐய்யோ... சீக்கிரம் டாக்டரை கூப்பிடுங்கோ... போன் வேலை செய்யாட்டி போய் மருந்துக்கடை போனை உபயோகித்து சீக்கிரம் வரச் சொல்லுங்கோ... வலியிலே துடிக்கிறேனே?''

அவருக்கு எப்பேர்ப்பட்ட சுாய்ச்சலாக இருந்தாலும் வெளியே சொல்லிக்கொள்ளாது படுக்கையிலே சுருண்டு கொண்டு கிடக்க வேண்டும். தாமே போய்த் தேவைப் பட்ட மருந்துகளை வாங்கி விழுங்க வேண்டும். தமக்கு மீறிய சங்கதியாக இருந்தால், பாலி கிளினிக்கிற்கு சென்று தாமே பணத்தை செலவழித்து சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்.

''இருட்டிகிட்டு வரது. தொலைபேசி எண்ணைத் தெரிவித்தால்...'' ஞாபகப்படுத்தினாள் ரேவதி.

வாய்விட்டு சிரித்துவிட்டார் சிவசாமி. வீட்டை விட்டு கிளம்பும்போதுதான் அவருக்கு அப்படி ஒரு சிந்தனை! எங்கேயாவது நாலு நாள் தொலைந்து போக வேண்டும். மகன் அவரைப் பற்றிக் கவலைப்படுகிறானா, மருமகள் தேடுகிறாளா என்று தூர இருந்து கவனிக்க வேண்டும் என்றதொரு அலாதியான ஆவல்.

அதற்கு இப்படி தானாக வாய்ப்பு ஏற்பட்டு விட்டதே.

''ஏன் அம்மா, நான் இங்கே தங்கியிருந்தா உங்களுக்கு சங்கடம் ஏதும் ஏற்படாதே?'' கேட்டார்.

''நீங்க எழுந்து உடனே வீட்டுக்குப் போகணும்னு கிளம்பினாதான் மனச்சங்கடம் ஏற்படும். செய்த உதவி பலனில்லாம போயிடுமோன்னு வீண் கவலையில் மனக்கஷ்டப்படுவேன்.''

''என் மகன் வெளியூருக்கு வேலை சம்பந்தமா சுற்றுப் பயணம் செய்யப் புறப்பட்டிருப்பான். அதனாலே என்னைப் பற்றிய தகவலை சொல்ல அவனை தொலை பேசியில் தொடர்பு கொள்ள முடியாது. நீங்க சொன்னபடி நான் இங்கேயே இரண்டு நாள் தங்கிடறேன்.

மருந்துக்கு டாக்டருக்கு உண்டாகும் செலவை பிறகு மாதம் பிறந்த பிறகுதான் என் பென்ஷனிலிருந்து கட்ட முடியும். சம்மதமா?''

''இப்ப யார் உங்களிடம் இதுபத்தி பேசினாங்க? கவலை இல்லாம நான் கொடுக்கும் உணவை சாப்பிட்டு



நிம்மதியா படுத்து இருங்கோ. படிக்குறதுக்கு ஏதாவது வேணும்னா எடுத்துத் தர்ரேன்.''

''புத்தகங்கள்கூட வச்சிருக்கீங்களா?''

''புத்தகங்கள், சங்கீதம் கேட்பது, தொலைக்காட்சி பார்ப்பது இவைகள்தானே என் பொழுதுபோக்கு. என் வீட்டு வேலையை நானே கவனிச்சுக்கிறதாலே முன்போல நிறையப் படிக்க எனக்கு இப்போ நேரம் கிடையாது.''

''என்ன புத்தகங்கள் இருக்குன்னு சொன்னாக்க...''

''ரீடர்ஸ் டைஜஸ்ட் கண்டென்டு வால்யூம்ஸ் ஐம்பதுக்கும் மேலே இருக்கு. தமிழ் வாரப் பத்திரிகைகள் சிலவற்றை பைண்ட் பண்ணி வச்சிருக்கேன். கண்ணதாசனின் ஏசு காவியம், டால்ஸ்டாய், ஆஸ்கார் வொயில்ட், ஓமர் காவியம், கலீல் ஜிப்ரான், அவள் அடுக்கிக் கொண்டே போக திகைப்புடன் அவர் எழுந்து உட்கார்ந்து விட்டார். ரொம்பப் படித்தவள் போலிருக்கிறதே! ''கண்ணதாசன் அவர்களின் இயேசு காவியத்தை கொஞ்சம் இரவல் கொடுத்தால்...''

''இதோ'' என்று சிரித்தபடி அவள் உள்ளே சென்று புத்தகத்தை கொண்டு வந்தாள்.

புத்தகங்களை படிக்கத் தெரிந்துவிட்டால் மட்டும் போதாது. அவைகளைப் பத்திரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று உணர்த்தியது அந்தப் புத்தகம். அழுத்த மான பிளாஸ்டிக் அட்டைபோட்டு மிகவும் பத்திரமாக வைத்திருந்தாள் ரேவதி. புத்தகத்தைப் படித்ததும் நடுவே ஞாபகத்திற்கு வைக்க அழகான ஒரு குறிப்பு அட்டைபட்டுக் கயிற்றில் கட்டப்பட்டுப் பிளாஸ்டிக் அட்டையுடன் பிணைக்கப்பட்டிருந்ததைக் கண்டார்.

தேவைப்பட்ட அளவிற்கு மின்விசிறியை சுழலவிட்டு குழல் விளக்கைப் பொருத்தினாள்.

சாய்ந்தபடி உட்கார்ந்துகொண்டு படிக்க சௌகர்ய மாக சுத்தமான உறைகள் போட்ட தலையணைகளைக் கொண்டு வந்து கட்டிலில் அவர் முதுகுப்புறத்தில் வைத்து உபசரித்தாள்.

புத்தகத்தைப் புரட்டியபடி அவர் தம்மைச் சுற்றிலும் பார்வையை ஓட்டினார். அந்தக் காலத்தில் கட்டப்பட்ட ஓட்டுக்கூரை வீடு. அந்தக் காலத்துப் பாணியில் கூடம், தாழ்வார், அதையொட்டிய அறைகள், பின்பக்கம் என்று இருந்தது. ஆனாலும் சுவர்கள் பளிச்சென்று புதுச்சாயத் துடன் சுத்தமாகக் காணப்பட்டது. முற்றத்தரை துப்புர வாகப் பெருக்கப்பட்டு படுசுத்தமாகக் காணப்பட்டது. பாதுகாப்புக்காக சமீபத்தில்தான் முற்றத்தில் கம்பிகள் போட்டிருக்கிறார்கள் என்று புரிந்து கொண்டார். ''இந்த வீடு உங்களுடையதா அல்லது...'' அவர் கேட்குமுன் சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்தபடி பதிலளித்தாள் ரேவதி.

''சில வருஷங்களுக்கு முன் இருக்கட்டும் என்று வாங்கிப்போட்ட வீடு. சமீபத்தில் நான் குடியேறி சீர்திருத்தியிருக்கிறேன். சொந்த வீடுதான். இடித்துத் தள்ளி மாடியாகக் கட்ட வசதியில்லை'' - சிரித்தாள்.

''இதுக்கென்ன குறைச்சல் நல்லா இருக்கே'' - சொல்லியபடி மீண்டும் கண்களை நாலாபுறமும் ஓட விட்டார் சிவசாமி.

அவர் படுத்திருந்த கட்டில் கிடந்த சுவரிலே தொங்கிய அழகான மீனவப் பெண்ணின் சித்திரம் எளிமையான அந்தச் சூழ்நிலைக்கு மிக்கப் பொருத்தமாகத் தெரிந்தது. மூலையில் ஒரு தேக்கு முக்காலிமீது பளபள



வென்று ஒளியிட்ட பித்தளைப் பூத்தொட்டியில் மணி பிளாண்ட் செழிப்பாக வளர்ந்து தரையை நோக்கி நாலா புறமும் தாவிக் கொண்டிருந்தது.

கட்டிலைத் தவிரக் கூடத்தில் ஒரு ஊஞ்சல். ஒரு பிரம்பு நாற்காலி. இரண்டு சிறு மேஜைகள். சிறிதே மூடியிருந்த எதிர்பக்கத்து அறைதான் ரேவதியுடைய படுக்கையறை போலும். அதற்குள்தான் புத்தக அலமாரியை வைத்துக் கொண்டிருக்கிறாள் போலிருக்கு என்று எண்ணமிட்டபடி திரும்பினார். எதிர் பக்கத்து மூலையில் தொலைக்காட்சி பெட்டியும் அதன் அருகே ஒரு டிரான்சிஸ்டர் ரேடியோவும் இருந்தன.

''வண்ணத் தொலைக்காட்சி பெட்டிதான். ஓய்வாக இருக்கும்போது பார்க்கணும்னு திருப்பி இந்தப் பக்கமா வச்சிருக்கேன். சக்கரக் கால் கொண்ட ஸ்டாண்டில் இருப்பதாலே... நினைச்ச இடத்துக்கு கொஞ்சம் இழுத்துத் தள்ளி வைக்க முடியும்.''

''வீடியோகூட வச்சுக்கிட்டிருக்கீங்களா'' - அதிசயத் துடன் அவளைப் பார்த்தார்.

''நான் சாதாரணமாக சினிமாவுக்கு வெளியே போகிற பழக்கம் இல்லை. கிடைக்கிற டேப்புகளை வாடகைக்கு எடுத்து வந்து வீட்டிலே நேரம் இருக்கும் போது பார்க்கிறது உண்டு. சில சமயம் கைவசமிருக்கும் காலி டேப்பில் எனக்கு பிடித்த பாட்டுகள், நடனங்களை டெலிவிஷனிலிருந்து பிடித்து வைச்சுக்கொண்டு வேண்டும்போது போட்டுப் பார்க்கிற பழக்கம். ஒலிம்பிக் விளையாட்டை பிடிச்சு வச்சிருக்கேன் பார்க்கிறீங்களா?'' வியப்புக்கு மேல் வியப்பு அவருக்கு.

இத்தனை வசதிகளுடன் வாழும் இவள் யார்? ஏன் இப்படி தனியாக இருக்கிறாள்? கொஞ்சம் காசு பணம் இருப்பதை உணர்ந்ததும் காக்கையாகக் கூட்டம் போடு வார்களே உறவினர்கள்?

''நீங்க ராத்திரி வேளைக்கு என்ன சாப்பிடற பழக்கம்.''

''சாதம் குழம்பு... ரசம் - கட்டாயமில்லே. நீங்க சாப்பிடறதை கொடுத்தாலே போதும்.''

''கொஞ்சம் நாழி படிச்சுகிட்டு இருங்கோ, வந்துட் டேன்'' - அவள் சமையலறைக்குள் மறைந்துவிட்டாள்.

பக்கங்களைப் புரட்டிக் கொண்டு பிரமித்துப்போய் உட்கார்ந்திருந்தார் சிவசாமி.

ரேவதி மிகவும் அதிசயமானதொரு பெண்மணி யாகத் தென்பட்டாள். மாமனார் என்ற உறவு இருந்தும் பாமாவுக்கு அவரைக் கண்டால் துச்சம்.

முன்பின் தெரியாத ஒரு மனிதன் என்ற நிலையில் கூட அவரிடம் ரேவதி காட்டிய அனுதாபம், பரிவு...!

ஒரு சமயம் அவள் பிரபல்மானதொரு சமூக சேவகியோ?

இதுவரை அவள் பெயரை எங்கேயும் கேட்ட தில்லை. அவளது படத்தை எந்தக் கூட்டத்திலும் பத்திரிகையிலும் பார்த்ததில்லை.

''நான் எட்டுமணி அளவில் சாப்பிடற பழக்கம். நீங்க?''

''எப்போ வசதிப்படுமோ அப்போது சாப்பிடுகிறது. என்னைப் பொறுத்தவரை நேரம் காலம் என்கிற நிர்ணயம் கிடையாது.''



''டாக்டர் எழுந்திருக்கக்கூடாதுன்னு சொல்லியிருப்ப தாலே நான் உங்க சாப்பாட்டை கொண்டு வரேன் என்று கூறிக்கொண்டு மரத்தட்டில் எல்லாவற்றையும் வைத்தாள். நாற்காலியை அருகில் இழுத்துப் போட்டாள். கைகழுவ ஒரு சொம்பில் நீரும் ஒரு பேசினும் வைத்தாள். எத்தனை உபசாரம்! அவர் வாழ்க்கையிலே அனுபவிக்காத பணிவிடைகள்!

மீனாட்சி மிக்க சிரத்தையோடு எல்லாம் செய்தாள். ஆனால் ரசனையோடு அவளுக்கு இப்படி அழகாக பணிவிடை செய்யத் தெரியாதே.

பாமாவைப் பற்றி சொல்லவே தேவையில்லை. தன் கணவனுக்குக்கூட அவள் கருத்துடன் எதுவும் செய்த தில்லை.

யாரோ பெற்ற பெண். பரோபகார சிந்தையுடன் முன்பின் தெரியாத ஒரு கிழவனுக்கு இத்தனை பணி விடைகள் செய்ய வேண்டுமானால் ரொம்ப இரக்க சுபாவமுடையவளாக இருக்க வேண்டும். இப்படியும் நல்ல பிறவிகள் இருக்கிறார்களா?

அதிசயித்தபடி மேஜைமேல் அவள் வைத்திருந்த வெஜிடபிள் சூப்பை கரண்டியால் அள்ளி உறிஞ்சிக் குடித்தார்.

என்ன ருசி... என்ன ருசி...!

மீனாட்சியின் மறைவுக்குப் பிறகு அவரது வீட்டு சாப்பாட்டில்தான் மண் விழுந்துவிட்டதே.

''உங்களுக்கு பிடிக்குமோ என்னவோ... சுத்தமான நெய்யில் தயாரித்திருக்கிறேன் பரோட்டாவும், உருளைக் கிழங்கும். எனக்கு ரொம்பப் பிடிக்கும்.'' சிரித்துக்

கொண்டு வந்து அவுள் பரிமாறியதை வேண்டாம் என்று மறுக்க அவரால் முடியவில்லை. ஏடுகளாகப் பிரிந்து கொண்டு வந்த பரோட்டா வாயில் கரைந்தது. உருளைக் கிழங்கு கறி... ரொம்பவே நன்றாக இருந்தது. நன்றாக ருசித்து நிம்மதியாக சாப்பிட்டார். கை கழுவிக் கொண்டு வாயைத் துண்டால் துடைத்தபடி அமைதியுடன் படுக்கை மீது சாய்ந்தபடி உட்கார்ந்தார்.

அவரது காய்த்தை கவனித்த டாக்டருக்கு தர வேண்டிய பணம், மருந்துக்கு செல்வான பணம் எல்லா வற்றையும் கொடுத்துவிட்டு... ரேவதிக்கு அவர் நினைவாக ஏதாவது ஒரு பரிசு வாங்கித் தந்துவிட்டுப் போகவேண்டும். ரொம்ப நல்ல பெண்மணி. மனதிற் குள்ளே பலவும் சிந்தித்தார்.

''என் வேலையெல்லாம் முடிஞ்சுட்டது. டெலி விஷன் பார்க்கிறீர்களா'' என்று கேட்டபோது விழித்துக் கொண்டார்.

அப்பொழுதுதான் தொலைக்காட்சியில் காணாமற் போனவர்களின் விவரத்தை ஒரு பெண் வர்ணித்துக் கொண்டிருந்தாள்.

சட்டென்று அவரது மூளையில் அந்த யோசனை மின்னலடித்தது. இரண்டு நாளுக்குப் பின் அவர் திரும்பி வீட்டுக்குப் போகக்கூடாது. தொடர்ந்து ஒரு வாரத்திற்கு மேல் வீடு திரும்பாது வெளியே தங்கிக்கொள்ள வேண்டும். அப்பொழுது அவர் மகன் அவர் காணாமற் போய்விட்டதைப்பற்றி கவலை கொள்கிறானா என்று தொலைக்காட்சியில் வரும் தகவலைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.



இது அவனுக்கு அவர் வைக்கும் ஒரு சோதனை.

அப்பாவைக் காணோம் என்று கவலைப்பட்டால்... இரண்டு தினங்களில் தொலைக்காட்சியிலே, அல்லது பத்திரிகையிலே அவரைக் காணாமற்போனதைப் பற்றிய தகவல் வந்துவிடும்.

தொலையட்டும் சனியன் என்று அசட்டையாக இருந்துவிட்டாலோ... அவர் வீடு திரும்பப் போவ தில்லை.

''ரேவதி அம்மா! உங்களிடம் ஒரு வேண்டுகோள்...'' திடுக்கிட்டுத் திரும்பினாள் அவள்.

''நான் இங்கே தொடர்ந்து ஒரு வாரத்துக்கு மேலே இருந்தா உங்களுக்கு சிரமமாக இருக்குமோ... ஏன்னா என் மகன் அதுக்குள்ளே வீட்டுக்குத் திரும்பியிருக்க மாட்டான்'' - மென்று விழுங்கினார். அதைக் கேட்க அவருக்கு மிகவும் லஜ்ஜையாக இருந்தது. இதென்ன கதை. பாவம் என்று கொஞ்சம் பாதுகாப்பு கொடுத்தால் மனுஷன் டேரா போடப் பார்க்கிறானே என்று ரேவதி நினைத்துக் கொண்டால்...

''எத்தனை நாள் வேண்டுமானாலும் இருக்கலாம். நீங்க இங்கே இருக்கேன்னு கேட்கிறதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும். ஏன்னாஉங்களைப்போல கவுரவமான மனுஷங்க என் வீட்டின் வாசலைக்கூட மிதிக்க பயப்படு வாங்க...''

திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

''என்னம்மா சொல்றே?''

''என்னைப்பத்தி சொல்லிக்கிறேன். உங்க உடம்பு கொஞ்சம் நல்லா ஆகட்டும். நான் யார்னு கேட்டீங்களே அதுக்கு பதில் சொல்றேன்.''

சிவசாமி குழம்பிப் போனார். நெஞ்சிலே ஒரு பதைபதைப்பு. என்னென்னவோ கற்பனைகள்.

இருக்க முடியாது... இத்தனை புத்திசாலியான, படித்த அறிவு ஜீவியான இரக்கமுள்ள ஒரு பெண்மணி, அப்படிப்பட்டவளாகவா இருப்பாள்? இருக்காது! தவறாக நினைப்பது பாவம்! தம்மையே சமாதானம் செய்து கொண்டார்.

இரண்டு தினங்கள் சென்றன. டாக்டர் ஒருமுறை வந்து சோதித்தார். ''எழுந்து நடக்கலாம். அடி அப்படி ஒன்றையும் விளைவிக்கவில்லை. இன்னும் சில நாட்களில் தையலை பிரித்து விடலாம்'' என்று கூறி சென்றுவிட்டார். வீட்டைப் பார்த்துக் கொள்ள சொல்லிவிட்டு அன்று காலை ரேவதி கடைத்தெருவுக்குப் போயிருந்தாள்.

முன்னும் பின்னும் உலவிக் கொண்டிருந்த சிவசாமியால் கவலையை அடக்க முடியவில்லை.

பாதி திறந்து கிடந்த படுக்கை அறைக்குள் எட்டிப் பார்த்தார்.

அறையின் ஒரு பக்கத்திலே அகலமானதொரு மரக்கட்டில். பஞ்சு மெத்தை பரத்தப்பட்டு அழகான பூப்போட்டதொரு விரிப்பால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவற்றை ஒட்டினாற்போல ஒரு பெரிய கண்ணாடி அலமாரி. அதன் மேல் தட்டுக்களில் வரிசையாக ஆங்கில புத்தகங்கள். கீழ் தட்டுகளில் கைகளுக்கு எட்டும் உயரத்தில் தமிழ் புத்தகங்கள்.



படுக்கையருகேயிருந்த ஒரு மேஜை மேல்... ஒரு புகைப்படம். சாய்ந்தவாக்கில் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து மெல்ல உள்ளே புகுந்து அருகில் நின்றபடி கவனித்தார்.

அவரைவிட வயதில் சிறியவரான ஒரு மனிதர் புகைப்படத்திற்குள் புன்னகைத்துக் கொண்டிருந்தார். யார் அவர்? ரேவதிக்கு என்ன உறவு?

சிந்தித்த வண்ணம் பின்புறத்திலிருந்த வெற்றுப் பூமி, சுவர் ஓரமாக இருந்த முல்லைக்கொடி, அடுத்த வீட்டு சுற்று சுவர் ஓரமாக வளர்ந்து நின்ற தென்னங் கன்றுகள், கிணற்றுமேடை, தோய்க்கும் கல் இத்தனையை யும் சோதித்துவிட்டு உள்ளே வந்தார்.

எங்கு திரும்பினாலும் வீடு மிகவும் சுத்தமாகக் காணப்பட்டது. சமையலறை மேடை பளிச்சென்று இருந்தது. பாத்திரங்கள் அந்தந்த இடத்திலே அழகாக அடுக்கப்பட்டிருந்தன.

ரேவதி சுத்தத்தை பெரிதும் விரும்புகிறவள். எல்லாம் ஒழுங்காக இருக்கவேண்டும் என்ற எண்ண முடையவள். வாழ்க்கைபற்றி நல்ல ஆரோக்கியமான சிந்தனை உடையவர்கள்தான் இப்படி சூழ்நிலையையும் சுத்தமாக வைத்துக் கொள்ள விரும்புவார்கள்.

அவரது மருமகள் பாமா, போட்ட சாமான்களை போட்ட இடத்தில் விட்டுவிடுவாள். வேலையிலிருந்து வீடு திரும்பியதும் குளியலறை ஒரு நிமிஷத்தில் அலங்கோலமாகிவிடும். சமையலறையில் அவள் சமைக்கப் புகுந்தால் சாமான்களைப் பரத்தி வைத்துக் கொண்டு கால் தவறி வைத்துவிட்டால் குடத்தின் மீது இடறி விழவேண்டும். மாவு டப்பாவை கவிழ்க்க

வேண்டும் அல்லது மிளகாய்ப்பொடியோடு கீழே சருக்கி விழ வேண்டும்.

இப்போது அவள் எப்படிக் குடித்தனம் செய் கிறாளோ? தினம் அவள் விட்டுப்போகும் அலங் கோலத்தை மாமனார் கிழம் சீராக்கிவைத்திருந்தபோதே வீடு அந்த கதி என்றால்... தமக்குள்ளே எண்ணிச் சிரித்துக் கொண்டிருந்தார். கைதியைப்போல அந்த வீட்டுக்குள்ளே கட்டுண்டு இருந்த போதிலும் அவருக்கு உள்ளூர ஒரு விநோதமான திருப்தி. வீட்டைவிட்டு அவர் வெளியே வந்து ஐந்து தினங்கள் சென்றுவிட்டன. எங்கே போயிருப்பார் என்று கணவனும், மனைவியும் கதி கலங்கிப்போயிருப்பார்கள்.

ஆமாம்... ஏன் அவரைப் பற்றி இன்னமும் காணாமற் போனவரின் தகவலில் தொலைக்காட்சியில் பேசப்படவில்லை.

அப்பா தயவு செய்து உடனே வீட்டுக்குத் திரும்ப வும். நடந்ததையெல்லாம் நாம் எல்லோரும் மறந்துவிடு வோம், கிரிதரன். இப்படி அவருக்கு மட்டுமே புரியும்படி ஒரு விளம்பரம் பத்திரிகையில் ஏன் இன்னமும் காணவில்லை.

ஒழியட்டும் கிழவன் என்று அவர்கள் வைராக்யமாக இருக்கிறார்கள் என்றால் அவர் எத்தனை நாளானாலும் வீடு திரும்பப் போவதில்லை. கடையிலிருந்து சாமான்களுடன் திரும்பி வந்தாள் ரேவதி. தூக்கமாட்டாது அவள் சுமந்து வந்த பொட்டலங்களை அவர் முன் சென்று வாங்கிக் கொண்டார். சாமான்களை வகை பிரித்து அந்தந்த பாத்திரங்கள், டப்பாக்கள், பாட்டில்களில் போட கூட உதவி செய்தார். குப்பையாகிவிட்ட காகிதக் குவியலை



வாரி எடுத்துச் சென்று பின்பக்கமிருந்த குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிட்டு வந்தார்.

''நீங்க ரொம்ப உதவி செய்றீங்க நன்றி'' - முறுவலித்தாள் ரேவதி.

''எங்க வீட்டிலே இதைவிட எனக்கு அதிக வேலை உண்டு. எல்லாவற்றையும் திருப்திகரமாக செய்து முடிக்க வேணும் என்கிற பிடிவாதம் எனக்கு.''

இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் ஆவலுடன் பார்த்துக் கொண்டனர்.

அந்தச் சமயம் ரேவதி அவரிடம் என்னவோ பேசத் துடித்தாள்.

அதே சமயம் சிவசாமி அவளிடம் ஒன்று கேட்க நினைத்தார்.

எச்சிலை விழுங்கிக் கொண்டார். ''எனக்கு ஒரு உதவி செய்வீங்களா அம்மா. தொடர்ந்து கொஞ்ச காலம் நான் இங்கே இருக்க இடம் கொடுப்பீங்களா?''

''இந்தக் கூடத்தில்கூட நான் படுக்கவிரும்பவில்லை. வாசல் கேட்டுக்கு பின்னால் இருக்கிற சின்ன வராந்தாவிலே இரவில் படுத்துக்கறேன். நீங்க சமைச்சு போட்டதை சாப்பிடறேன். நீங்க வெளி வாசல் போய் செய்ய வேண்டிய காரியங்களை நான் உங்களுக்காக கவனிக்கிறேன். மாத முடிவில் சாப்பாட்டுக்கும் தங்கு மிடத்திற்கும் ஏதாவது பணம் தந்து விடுகிறேன்'' - அவரது குரல் தடுமாறியது.

''அப்போ உங்க வீட்டுக்கு நீங்க திரும்பப் போகிறது பற்றி...''

''எங்க வீட்டுக்குத் திரும்பிப் போக நான் விரும்ப விலலை. என் மகனும், மருமகளும் செய்த கொடுமையை சகிக்காம நான் வெளிக் கிளம்பும் எண்ணத்தோட அன்னிக்கி வீடு வாடகைக்கு அகப்படுமான்னு தேடிக் கிட்டிருந்த சமயம்தான்...''

''என்ன அதிசயம் இது! தன்னந்தனியா இந்த வீட்டிலே வந்து தங்க ஆரம்பிச்சு சில மாதங்கள்தான் ஆச்சு. அக்கம் பக்கத்தார் என்னைப் பத்தி பேசறது கேட்டு மனம் நொந்து போய் நமக்கு ஒரு துணை, அண்ணனோ, அப்பாவோ இல்லையேன்னு நான் ஏங்கிக்கிட்டி ருந்தப்போ நீங்க கிடைச்சீங்க. ஒரு உண்மையை சொல்லட்டுமா? சாயலில் நீங்க என் அண்ணனைப்போல இருக்கீங்க... உங்களைப் பார்த்ததும் ஒரு கணம் நான் திடுக்கிட்டுப் போனேன். செத்துப் போன அண்ணன் எப்படி இங்கே வந்தார்னு ஒரே அதிர்ச்சி.''

''அந்த நினைப்பில்தான் பரிவுடன் என்னைத் தூக்கி வந்து கவனிச்சீங்களா?''

''ஒரு பக்கம் அது காரணம். இன்னொரு காரணம் வேகாத வெய்யிலில் ஒரு உயிர் இப்படி மயக்கமா விழுந்து கிடக்கும்போது சுயநலமா யாரும் உதவ முன் வராம வேடிக்கை பார்த்துட்டு நிக்கிறாங்களேன்னு ஆத்திரம். இப்படித்தான் ஒரு பெண் வாழ்க்கைப்பாதையிலே வழுக்கி விழுந்து நிர்க்கதியா நிக்கும்போது உதவி அவளை நல்ல வழியே கொண்டு நிறுத்துவோம்னு யோசிக்காம, அவளைப் பார்த்து சிரித்து... பரிகசித்து...'' பேச முடியாது அவள் திணறினாள். கண்களில் நீர் பளபளத்தது.

திடுக்கிட்டுப் போனார் சிவசாமி. ''என்னம்மா சொல்றே?''



''நான் சொல்லப் போறதைக் கேட்ட பிறகும் நீங்க இங்கே என்னோடு தங்கியிருக்க மறுப்பில்லேன்னா... உறவில் எங்க அண்ணனாக... ஒரு நல்ல நண்பனாக என்னோட இந்த வீட்டிலே நான் குடிக்கும் கஞ்சியிலே பகிர்ந்துக்கலாம். அதுக்காக பணம் தரவேண்டியதில்லை. உழைக்கத் தேவையில்லை. பரிவைத் தந்தால் போதும்.''

சட்டென்று எழுந்து உள்ளே சென்றாள். சிறிது நேரத்திற்கு முன்னர் அவர் பார்த்த அந்தப் புகைப்படத்தை எடுத்து வந்தாள்.

''நான் இப்போ நீங்க பார்க்கிறது போல ஒரு தனியான அனாதைப் பெண் இல்லை. இந்தப் படத்தி லிருக்கிறவர் என் அண்ணன். என்மேல் பாசமும் நேசமும் என் உயிரையே வைத்துக் கொண்டிருந்த அண்ணன்.''

கையில் அந்தப் படத்தை வாங்கி உற்றுப் பார்த்தார். ரேவதி சொன்ன அந்தச் சாயல் அந்த முகத்திலே எங்கே இருக்கிறது என்ற ஆவலில் தேடித் துருவிக் கொண்டிருந் தார்.

''அம்மா இறந்த பின் அண்ணன்தான் என்னைத் தம் குழந்தையாக வளர்த்தார். அண்ணியும் பெத்த மகளைப் போல் என்மேல் அளவு கடந்த பாசம் வச்சிருந்தாங்க. அவர்களுக்குக் குழந்தையில்லாததால் அந்த அன்பு ஒரு வகையில் தீவிரமாகிவிட்டிருந்தது என்றும் சொல்லலாம். நாங்க மதுரைப் பக்கத்தைச் சேர்ந்தவங்க. பிறந்து வளர்ந்து ஆளானது எல்லாம் கிராமத்தில்தான். அண்ணாவுக்கு என்னைப் படிக்க வைக்கணும்னு ரொம்ப ஆசை. நான் ஒரு டாக்டராகவோ, கல்லூரி ஆசிரியையாகவோ தலையெடுக் கணும்னு ரொம்ப ஆவல். பக்கத்து நகரத்திலேயிருந்த பள்ளிக்கூடத்தில்தான் என்னைப் படிக்க வைத்தார்.

மெட்ரிக் வகுப்பிலிருந்தபோதே தட்டெழுத்து சுறுக்கெழுத்து எல்லாம் கற்றுக் கொண்டேன். வீட்டிலே வாத்தியார் வச்சு பாட்டு வேறே கத்துக் கொடுத்தார். தமது தங்கையை சகல கலா வல்லியாக்க வேணும்னு ஆசை பாவம் அண்ணாவுக்கு. அப்போ நான் பார்க்கக் கொஞ்சம் அழகான பெண்ணாகத்தான் இருந்தேன். பாட்டுக் கத்துக்க பஸ் ஏறி டவுன் வரை தங்கச்சியை அனுப்பறானே மளிகைக் கடை மன்னார். இவனுக்கு புத்தி எங்கே போச்சு? வயதுப் பொண்ணாச்சே! ஊரில் உள்ள நாலுபேர் ஏசினார்கள், பேசினார்கள். அண்ணா என்மேல் ரொம்ப நம்பிக்கை வச்சிருந்தார். ஆனால்...''

''புரியுதம்மா... அந்தச் சின்ன வயசிலே மனதிலே ஒரு தடுமாற்றம் ஏற்பட்டிடுச்சு. அண்ணனுக்குத் தெரியாம யாரோ ஒருவனுடன் சிநேகம் ஏற்பட்டுவிட்டது சரிதானே?''

''உங்க ஊகம் சரிதான். பார்க்கக் கச்சிதமா தெரிஞ்ச ஒரு வாலிபனை நான் பஸ்ஸில் சந்திச்சேன். பட்டணத்தில் வேலை பார்ப்பதாகச் சொன்னான். வேலை சம்பந்தமாகச் சுற்றுப் பயணம் செய்வதாகச் சொன்னான். அடிக்கடி சந்தித்துப் பேசினோம். அண்ணனுக்குத் தெரியாமல் அவனுடன் மதுரை வரை போய் சினிமா பார்த்துவிட்டு வந்தேன். காதலிக்கிறேன். கல்யாணம் செய்துக்கிறேன். ஆனால் பட்டணத்துக்கு என்னோடு புறப்பட்டு வந்தால் தான் முடியும் என்றான். கிராமத்திலே வளர்ந்த பெண். படித்திருந்தும் சூதுவாது தெரியாதவள். காதல் கண்ணை மறைத்தது. புத்தியைக் குழப்பியது.

''அவனுடன் பட்டணத்திற்கு புறப்பட்டு வந்து விட்டேன். அவ்ன் காதல்னு ஏமாத்திக் கைவிட்டுட்டான்.''



''அப்படி செய்திருந்தால்கூட மன்னிச்சுடுவேன் அந்த பாதகனை... அண்ணன் செய்து வைத்திருந்த நகைகளுடன் வீட்டிலிருந்த பணத்துடன் அவனை நம்பி பட்டணத்திற்குப் புறப்பட்டு விட்டேன். சென்னை வந்ததும் என்னை ஒரு ஓட்டலில் தங்க வைத்துவிட்டு இதோ வரேன்னு புறப்பட்டுப் போனவன் போனவன்தான்.''

''வேறே வழியில்லாம நீ...'' சிவசாமி முடிக்குமுன் குறுக்கிட்டாள்.

''அந்த நிலையில்கூட நான் திரும்பி ஊருக்கு வந்திருப்பேன். அண்ணன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு மேலே படித்து ஏதாவது உருப்படியான காரியத்தைச் செய்திருப்பேன். ஆனால் அந்தப் பாவி என்னை ஒரு விபச்சார விடுதிக்கு விற்றுவிட்டுப் போயிருந்தான்.''

திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தார் சிவசாமி. ரேவதியின் இளமையும் அழகும் இப்படியா பலியாகின? மனம் கரைந்து போனார். ''ஹோட்டல் அறைக் கதவை தட்டிய மூன்று குண்டர்களைக் கண்டு நான் நடுங்கிப் போனேன். பேசாம சத்தம் போடாம புறப்படு என்றான் ஒருவன். வாயைத் திறந்தியோ ஒரே குத்து என்று பிச்சுவாவைக் காட்டினான் இன்னொருவன். உம் இந்தப் பாலை சாப்பிட்டுட்டு புறப்படு நேரமில்லை என்றான் மூன்றாமவன். உயிர் மேல் உள்ள ஆசை மானத்தின் மேல் அப்போது எனக்கு இருக்கவில்லை. ஒரு சமயம் கிராமத்தில் ஒரு தோட்டத்தில் அந்த மூன்று குண்டர்கள் என்னை பயமுறுத்தியிருந்தால் தப்பி ஓட முயன்று மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளக் கிணற்றில் விழுந்து தற்கொலை பண்ணிக் கொண்டிருப்பேன். ஆனால் ஒரு அறைக்குள்ளேயே கைதியாக அடைபட்டிருந்த என்னால்

எதுவுமே செய்ய முடியவில்லை. உம் என்று அதட்டியபடி நீட்டிய பால் டம்ளரை வாங்கி ஒரே மூச்சில் குடித்தேன். கொஞ்ச நேரத்தில் என்னையும் மீறிய ஒரு பயங்கரமான தூக்கம்.

''விழித்துக் கொண்டபோது நான் ஓடும் ரெயிலில் இருப்பதை உணர்ந்தேன். என் இரு பக்கமும் அந்த இரண்டு குண்டர்களும் - எதிர் பக்கம் என்னை வெறித்து பார்த்தபடி மூன்றாவது ஆளும் உட்கார்ந்திருந்தனர்.

''வாயைத் திறக்கவும் அஞ்சி கண்களை மூடிக் கொண்டேன்.''

''நீ மேலே சொல்ல வேணாம்மா. எனக்கு எல்லாம் புரிஞ்சுடுச்சு. உன்னை அந்தப் பாவிகள் பம்பாயில் இருக்கும் சிவப்பு விளக்குப் பகுதியிலே கொண்டு போய்ச் சேர்த்துட்டாங்க.''

தலையை அசைத்த ரேவதியின் கண்களில் நீர் புரண்டது.

''பல ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம். ஆனாலும் அந்த பாதிப்பின் ரணம் இன்னும் ஆறவில்லை.''

''அண்ணா தேடி வந்து மீட்பார் என்று ஆரம்பத்தில் நம்பினேன். ஆனால் அந்த பயங்கர சூழலில் என்னை பாவம் அப்பாவி அண்ணன் எங்கே கண்டுபிடிக்க முடியும்?

''சகதியில் விழுந்து உழன்று கொண்டிருந்த சமயம், சில வருஷங்களுக்குப் பின் எங்கள் சிலருக்குத் தலைவியாக இருந்த பெண்மணி எங்கள் சிலருடன் டெல்லி பக்கம் வந்துவிட திட்டமிட்டாள். அவளது திட்டத்தில் பொறுக்கி எடுக்கப்பட்ட பெண்களில் நானும்



ஒருத்தி. அடிமட்ட நிலையிலிருந்து இப்போது நாங்கள் ஒரு உயர் பதவியை அடைந்தோம். பொறுக்கி எடுத்த வாடிக்கையாளருடன் சந்திப்பைப் பிரபலமான இடங்களில் நாசூக்காக வைத்துக் கொள்ள பயிற்சி கொடுக்கப் பட்டோம்.

''சில சமயம் வாடிக்கையாளருடன் விமானத்திலே பல நகரங்களுக்குப் பறந்தோம். அவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு பயணத்தின்போது அவர்களது சௌகர்யங்களையும் கவனித்துத் தற்காலிக துணைவியாக இருந்து நல்ல ஊதியத்தை சம்பாதிக்கும் வாய்ப்பினைப் பெற்றோம்.

''சில ஆண்டுகளுக்குப் பின் வயதாகிவிட்ட காரணத்தாலும் அழகு குலைந்து போனதாலும் எங்களது அமைப்பு உடைந்து சிதறிப்போக அதை நடத்திய தலைவி ஓய்வு பெற்றுக் கொண்டு எங்களை தன்னிச்சையாக வாழும் சுதந்திரத்தைத் தந்து விட்டாள்.

''டெல்லியில் அப்படி தன்னந்தனியே ஒரு ஃபிளாட்டில் நான் வாழ்ந்து கொண்டிருந்த சமயம் அண்ணாவை எதிர்பாராத விதமாகச் சாந்தினி சவுக்கில் சந்திக்க நேர்ந்தது.

''அடையாளம் தெரியாது திடுக்கிட்டு நின்று போனார் ஒரு கணம். பின்னர் தாங்க முடியாத துக்கத்தில் துண்டை வாயில் அடைத்துக் கொண்டு அவர் விம்மி அழுததை நான் இறக்கும்வரை மறக்க முடியாது.

''அண்ணா மன்னிச்சுடுங்கோ. உங்களோட வந்து மறுபடியும் வாழ விருப்பமா இருக்குன்னு நான் விக்கி அழுதபோது அண்ணா தலையை அசைத்தார்.

''உன்னைப் பிரிஞ்ச துக்கம் தாங்காம உன் அண்ணி அப்பவே போயிட்டா. ஊராரின் பழிச்சொல்லைச் சுமந்து கிட்டு நடைப்பிணமா இருக்கிற நான் இங்கே, நீ எங்கே?

நீ வெளியே வந்ததும் திரும்பிவராத தூரம் போயிட்டியேம்மா. படபடவென்று சொன்னவர் கூட்டத்தில் மறைந்து மாயமாய் போய்விட்டார்.

''அங்கிருந்து சென்னைக்கு வந்த பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது. அண்ணா என்னைப் பார்த்தது கடைசிச் சந்திப்பு.

''அண்ணியைப் பறிகொடுத்தேன். அண்ணனை இழந்தேன். என் இளமை அழகு, மானம் எல்லாத்தையும் இழந்துவிட்டு கொஞ்சம் பணத்துடன் இங்கே வந்து இந்த வீட்டை வாங்கிச் சீராக்கி வாழ்கிறேன்.

''சொல்லுங்க ஐயா, இது ஒரு வாழ்வா? இப்படிப் பட்ட கேடு கெட்டவள் வீட்டில் தொடர்ந்து நீங்க தங்கியிருக்க விரும்புகிறீர்களா?''

திடீரென்று ரேவதி விம்மி அழுதாள்.

ஒரு வழியாக அழுது அவள் ஓயும்வரை பொறுமையுடன் காத்திருந்தார் சிவசாமி. ''நான் இங்கேயே நிரந்தரமாக இருப்பதாகத் தீர்மானிச்சுட்டேன். வெறும் பாரமா உங்களுக்கில்லாம உங்க அண்ணன் ஸ்தானத்தில் இருந்து கொண்டு உங்களாலே என்ன செய்ய முடியுமோ அந்த நல்ல காரியங்களுக்கு உதவி செய்ய உறுதி கொண்டிருக்கிறேன்.''

''உண்மையாகவா, என் மேலே உங்களுக்குப் பரிதாபம் ஏற்பட்டதாலே இந்தத் தீர்மானமா?''

''சமூகத்துக்கு மேலே ஏற்படும் ஆத்திரத்திலே... வரதட்சணையிலிருந்து பெண்மையை அவமானப் படுத்தும் எந்த ஒரு கொடுமையையும் நான் வெறுக்கிறேன். சமுதாயத்தில் பெண்மைக்கு ஏற்படுகிற அவலங்களில் ஒரு துளியை என்னால் அழிக்க முடிந்தால் அதுவே நான் பிறந்த பயன்னு நினைக்கிறேன். ரேவதி,



இன்னிலிருந்து நான் உன் அண்ணன். நீ என் தங்கச்சி. அந்த எண்ணம் தீவிரமா மனதில் ஏற்பட்டதால் நீ என்று ஒருமையில் அழைக்கிறேன் சரிதானே.''

''இதைவிட வேறே பாக்கியம்...'' எழுந்து வந்து அவர் பாதத்தைத் தொடக் குனிந்தவளை நிறுத்தினார்.

''என்னை நீ அண்ணனாக ஏத்துக்கிட்டே. உன்னை நான் தங்கையாக நினைக்கிறேன். இனி நாமிருவரும் சமம். இந்த வெற்று மரியாதையெல்லாம் தேவையில்லை. நம்பிக்கையும் அன்பும்தான் நமது வருங்காலத்துக்குத் தேவை. இன்னும் ஒண்ணு... இன்னியோட நீ நடந்ததை மறந்துடணும். மேலே என்ன செய்யணும் என்கிறதைப் பத்தித்தான் சிந்திக்கணும். சரியா?''

மகிழ்ச்சியுடன் தலையை அசைத்தாள்.

இன்னும் ஒரு வார காலம் ஓடிச் சென்றது.

கிரிதரனோ அவன் மனைவியோ அவரைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. தினமும் ஆவலுடன் தொலைக்காட்சிச் செய்தியினைத் தொடர்ந்து கவனித்தார். பத்திரிக்கைகளின் பக்கங்களைப் பரபரப்புடன் புரட்டினார். அவருக்கே அடக்கமாட்டாத ஒரு ஆவல் மண்டையைக் குடைந்தது. பெற்றவன் திடீரென்று காணவில்லை என்றால் கிரிதரன் சும்மாவா இருக்கிறான்? பாமா அந்த மாதம் அவர் தரவேண்டிய பணத்திற்காக வாவது அவர் போன இடத்தை அறியத் துடிக்க மாட்டாளோ?

மேலும் இந்த உணர்வின் அழுத்தத்தைத் தாங்கிக் கொண்டு அந்த வீட்டுக்குள்ளேயே அடங்கிக் கிடக்க அவருக்குத் தாளவில்லை.

அந்த ஞாயிற்றுக்கிழமை அவர் வீட்டை விட்டு வெளியே வந்தார். கொஞ்ச தூரத்திலிருந்த மளிகைக் கடையில் தொலைபேசி இருந்தது.

ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு மகனைத் தொலைபேசியில் அழைத்தார்.

''அப்பாவா! நிசமாகவா! என்னப்பா எங்கிருந்து பேசுறீங்க, என்ன ஆச்சு...?'' இரைந்து கத்தினான் வியப்பு மேலோங்கிய குரலில் மகன்.

''நான் சுகமா இருக்கேன். முகவரி தரேன், வந்து பார்க்க ஆசையா இருந்தா ஒரு நடை பாமாவுடன் வந்து போ'' - முகவரியைச் சொல்லிவிட்டு தொலைபேசியை வைத்தார்.

உணர்ச்சி வசத்தில் அவர் மார்பு வேகமாகத் துடித்தது. அவர் எதிர்பார்த்தபடியேதான் நடந்தது. கிரிதரன் உடனடியாக காரில் மனைவியுடன் ஓடோடியும் வந்து விடவில்லை.

இரண்டு நாட்களுக்குப் பின்... ஒருநாள் மாலை அந்த வீட்டு வாயிலில் கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய பெண்ணையும் இளைஞனையும் பார்த்த ரேவதி புரிந்துகொண்டுவிட்டாள்.

''வாங்கோ உள்ளே'' என்று உபசரித்து விட்டு... ''உங்க மகனும் மருமகளும் வராங்க''... பராக்குக் கொடுத்தாள் ரேவதி...

முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு கிரிதரன் அவள் காட்டிய நாற்காலியில் உட்கார்ந்தான். பாமா சுற்றுமுற்றும் அருவருப்போடு பார்த்துவிட்டு ஒரு முக்காலி மீது பட்டும் படாததுமாக அமர்ந்தாள்.

''நீங்கள்ளாம் பேசிட்டு இருங்கோ. எனக்கு கடைத்தெருவிலே கொஞ்சம் வேலையிருக்கு'' என்று கூறிவிட்டு ரேவதி வெளியே நடந்து விட்டாள்.

''என்னப்பா நான் கேள்விப் பட்டதெல்லாம் உண்மையா?''



''என்ன கேள்விப்பட்டே? அதைச் சொல்லு முதலில்.''

''யாரோ ஒரு மாஜி சிவப்பு விளக்குக்காரி இந்த வீட்டிலே வசிக்கிறதாகவும் நீங்க அவளோட தங்கியிருக்கிறதாகவும் கேள்விப்பட்டேன். இப்போ வெளியே போனாளே அவளைத்தானே என் நண்பன் சொன்னான்.''

''உன் நண்பனுக்கு இந்த மாதிரி துப்பு துலக்கறதை விட வேலை இல்லையா?''

''அவ சிவப்பு விளக்குப் பகுதியைச் சேர்ந்தவ தானே?''

''ஒரு காலத்திலே அந்தப் பகுதியிலே இருந்தா... அதனாலே என்ன?''

''உங்களுக்கு வெட்கம் இல்லையா? கவுரவமான நம் வீட்டைவிட்டு இப்படி வந்து இவளுடைய வயசு காலத்திலே கும்மாளம் அடிக்கிறீர்களே?''

''உனக்கு வெட்கமில்லையா? யோசிச்சு பார். பெத்து வளர்த்த அப்பனை நேத்திக்கு வந்த பெண்டாட்டிக்குப் பரிஞ்சு கொண்டு முதியோர் இல்லத்துக்கு அனுப்பி வெச்சியே. அது வெட்கமாயில்லே.

''திடீர்னு அப்பனைக் காணோமே! அடிப்பட்டுச் செத்துப் போயிட்டானா, மயக்கமா விழுந்து ஆஸ்பத்திரியிலே கிடக்கானான்னு கவலைப்பட்டியா... நான் காணாமற் போனதைப் பத்திரிகையிலே ஒரு கோடி காட்டினியா.''

''அப்படியெல்லாம் செய்தா எங்க கௌரவம் என்ன ஆகிறது? கிரிதரனின் அப்பா வீட்டைவிட்டு எங்கேயோ அலைஞ்சு கொண்டிருக்கார்னு எங்களுக்குத் தெரிஞ்சவங்க பேசமாட்டார்களா?''

''இப்பக்கூடத்தான் பேசப்போறாங்க. கிழவன் வயசு காலத்திலே ஒரு பெண்ணோட தனிக்குடித்தனம் பண்றான்னு பேசுவாங்க இல்லையா?''

''அப்படி ஊர் முழுவதும் சங்கதி பரவறத்துக்குள்ளே உங்களை கூட்டிட்டுப் போக வந்திருக்கோம்.''

''நான் என்ன பச்சைக் குழந்தையா நீங்க அதட்டி, உருட்டி மிரட்டிக் கூட்டிட்டுப் போக...''

''என்னப்பா சொல்றீங்க...'' கிரிதரன் கோபத்துடன் கத்தினான்.

''நான் உங்களோட வரப்போறதில்லை... இங்கேயே என் காலத்தைக் கழிக்கிறதாகத் திட்டம். செத்துப் போனதாகக் கேள்விப்பட்டு கடமைக்காக வந்து காரியம் செய்யணும்னு பிரியப்பட்டா வாங்கோ... இல்லாட்டி அக்கறையில்லை. செத்த பிறகு என் தலை கிழக்கே யிருக்கா, அல்லது மேற்கே இருக்கான்னு நான் பார்த்துக் கிட்டா இருக்கப் போறேன்?''

''இதுவரை நீங்க செய்த கலாட்டாவுக்கு இது சிகரம் வச்சதுபோல இருக்கு. அதுகளையாவது ஓரளவு ஒத்துக்கலாம். இப்போ நீங்க செய்கிற கூத்து...''

''கூத்துமல்லே, நாடகமுமல்ல. தனியாக விடப் பட்டிருக்கிறாள் ரேவதி. சமூகம் அவளைப் பலவிதமாய் பார்க்கிறது. நான் கூட இருந்து ஆறுதல் சொல்லி அவள் வாழ்க்கையை வளம் பெறச் செய்யப் போறேன்.''

''அப்படின்னா? அவளைக் கட்டிக்கப் போறீங்களா? ஒரு சிவப்பு விளக்கைப் பச்சையாக்கப் பார்க்கிறீங்களா அப்பா?'' குரோதமாகச் சிரித்தான் கிரிதரன்.

''இந்த வயசில் உங்களுக்குக் கல்யாண ஆசை வரும்னு நான் எதிர்பார்க்கலை. இதை உங்க மகன்கிட்டே



சொல்லித் தொலைக்கிறதுதானே? நமக்கு வேண்டிய இடத்தில் உங்களுக்கு ஈடா ஒரு பெண்ணைப் பார்த்து முடிச்சு வச்சிருப்போம்.''

''நான் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்டேன்னு யார் சொன்னது?''

''இப்படி இங்கே ஒரு கேடு கெட்டவளோட வந்து குடியிருக்கிறது என்ன அர்த்தம்...? இப்படி இருக்கிறதை விட கௌரவம் போகாம ஒரு கல்யாணத்தைப் பண்ணி கிட்டுத் தலைநிமிர்ந்து நிக்கலாமே.''

''இப்போகூட நான் தலைநிமிர்ந்துதான் நிக்கறேன். ஒரு பெண்ணும், ஆணும் சேர்ந்து இருந்தா அந்த உறவு பால் உணர்வின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாகத் தானிருக்கணுமா...''

''அப்பா நீங்க பெரிய பேச்செல்லாம் பேசி சுத்தி வளைக்க வேண்டாம். நாங்க ஒண்ணும் காதிலே பூ வச்சுக் கொண்டிருக்கல்ல. இந்த ரேவதி பெரிய ரெட்லைட்காரி... இவளோட நீங்க இங்க சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கீங்கன்னா யார் நம்புவா...''

''ரேவதி என் தங்கை. நான் அவளது அண்ணன். அப்படி ஒரு நினைவில் வாழத் தீர்மானிச்சுட்டோம். நீங்க நம்பினால் நம்புங்க, நம்பாவிட்டால் அக்கறையில்லை... சமூகத்தால் வஞ்சிக்கப்பட்டவளை வாய்நிறைய தூஷிக்கத் தான் நமக்குத் தெரியும். மறுவாழ்வு தந்து அவங்களை வாழ வைக்கத் தெரியாது.''

''பெரிய சமூகச் சீர்திருத்தவாதின்னு உங்க ஞாபகம். நீங்க இதுவரை செய்த கலாட்டா போதாதுன்னு இப்படி வந்து என் மானத்தைக் கொட்டிக்கிறீங்க.''

''இந்தப் போலித்தனமான கவுரவம் ஏன் கொண்டாடறே. எவனாவது கேட்டால் ஆமாம் என்

அப்பா ரேவதி என்கிற பெண்ணோட வாழறார், அவ
இஷ்டம்னு சொல்லிட்டுப் போயேன். உன் தலை
போயிடும்? இது உலகத்தில் நடக்காத அதிசயமா என்ன

''ஒரு சிவப்பு விளக்கைப் பச்சையாக்க
பாடுபடுகிறீங்களாக்கும்...''

''அப்படித்தான் வச்சுக்கோயேன்?''

''தீர்மானமா நீங்க வீட்டுக்குத் திரும்பப் போற
தில்லை!''

''இல்லை... ஒரே தீர்மானம். இங்கேதான் இருக்கப்
போறேன்!''

''சரி கிளம்பு பாமா. கடைசி காலத்திலே கிழவ
ருக்குப் புத்திகெட்டுப் போச்சு'' - சீற்றத்துடன் வெளியே
னான் கிரிதரன், மனைவியுடன்.

''சிறிது நேரத்திற்குப் பின் ரேவதி உள்ளே வந்
போது சிவசாமி கூடத்தை அளந்து கொண்டிருந்தார்.

''அவர்கள் எல்லாம் போயிட்டாங்களா...''

''ஆமாம் அண்ணாசாலையின் திருப்பத்திலே சிவப்
விளக்குப் பச்சையானதும், திரும்பிடணும்னு வேகமா
போயிட்டாங்க! ஆனால் வாழ்க்கையில் சிவப்பு விளக்கு
பச்சையாவதை விரும்பாதவங்க.

''போகட்டும்! சூடா ஒரு டம்ளர் காப்பி கலக்கி
தரியா தங்கச்சி...''

''ஒரு நொடியில் தரேன் அண்ணா...'' ரேவதி
உள்ளே ஓடினாள்.

சிவசாமி மனநிறைவுடன்... கூடத்தை மறுபடி
அளக்கத் தொடங்கினார்.